EVANGELICAL BIBLE COLLEGE OF WESTERN AUSTRALIA
சுவிஷேச வேதாகமக் கல்லூரி மேற்கு ஆஸ்திரேலியா

# MIRACLES
# அற்புதங்கள்

by

## DR JOHN C McEWAN
ஆசிரியர்
## டாக்டர் ஜான் சி மெக் இவான்

[BOOK 110]
[புத்தக எண் 110]

## FEAST OF TRUMPETS 2015
## எக்காளப் பண்டிகை 2015.

## இயேசுக்கிறிஸ்து யார்?

பேராசிரியர் சைமன் கிரீன்லீஃப் எல்லா காலங்களுக்கும் தலைசிறந்த வழக்கறிஞராய் விளங்கிவருகிறார். அவரது "ஆதாரங்களின் பிரமாணங்கள்" “Laws of Evidence” அநேக ஆண்டு காலங்களாய் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நிலையான ஒழுங்குமுறை பரிசீலனைக்குரிய விஷயமாய் இருந்து வருகிறது. அமெரிக்க ஐக்கிய தேசத்தில் உள்ள ஒரு பல்கலைக் கலகத்தில் அவர் சட்டம் குறித்த பாடங்களைப் போதித்துக் கொண்டு இருந்த சமயத்தில், அங்குள்ள மாணவர்களில் ஒருவன் சரித்திரப் பூர்வமான ஒருவரை "ஆதாரங்களின் பிரமாணங்கள்" “Laws of Evidence” மூலம் விவரிக்க முடியுமா என வினவினான். கிரீன்லீஃப் அம்மாணவனை நோக்கி விவரிக்க முடியும் என ஒத்துக்கொண்டவராய், அச்சரித்திரப் பூர்வமான நபர் யார் என அவனை நோக்கி வினவினார். அதற்கு அம்மாணவன் மறுமொழியாக, பரிசீலனைக்குரிய அந்நபர் இயேசுக்கிறிஸ்து என்றான். பேராசிரியர் கிரீன்லீஃப் ஒத்துக்கொண்டவராய் பரிசீலனைக்காக இயேசுக்கிறிஸ்துவை எடுத்துக்கொள்ள முன்வந்தார், அவர் தனது பரிசீலனையை முடித்துக்கொண்ட போது, அவர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் பேராசிரியர் கிரீன்லீஃப் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் உள்ள எல்லா நீதி சார்ந்த அலுவலர் அனைவருக்கும் வெளிப்படையான ஒரு கடிதத்தை எழுதி அதில் தான் தனிப்பட்ட விதத்தில் இயேசுக்கிறிஸ்துவை கண்டுகொண்ட விதத்தை விவரித்து இருந்தார். இயேசுக்கிறிஸ்துவைக் குறித்த விஷயங்கள் சரித்திரப்பூர்வமாய் மிகத் துள்ளியமானவை என முழு நிச்சயத்துடன் ஆதாரங்களுடன் எழுதி அனுப்பினார். மட்டுமல்லாது இயேசுக்கிறிஸ்து மனிதரைவிட மேம்பட்டவர் என்றும், அவர் கடவுளோ அல்லது இல்லையோ என்பதை பரிசீலித்த போது, அவர் கடவுளைத் தவிர வேறு எவருமல்லர், என்பதை மிக உறுதியாய் ஆராய்ந்து கண்டுகொண்டேன். அவரைக் கடவுளாய் கண்டுகொண்ட மாத்திரத்தில் அவரை எனது சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டேன் என எழுதினார். ஆகவே நீதித்துறையில் பணியாற்றும் ஒவ்வொரு நபரும் "ஆதாரங்களின் பிரமாணங்கள்" “Laws of Evidence” ஐ பயன்படுத்தும் பொழுது, அவரைக்குறித்து தவறாய் புரிந்துகொள்வதைத் தவிர்த்து, ஒருவேளை அவரை உங்களது சொந்த இரட்சகராய், ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் மேற்கூறிய பிரமாணத்தின் மூலம், அவர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து என்றும், சரித்திரப் பூர்வமாய் அவரைக் குறித்த விஷயங்கள் அனைத்தும் முற்றிலும் உண்மை என்பதையும், கண்டுகொள்ளுங்கள் என எழுதி முடித்தார்.

## நான் எவ்வாறு இரட்சிப்படைய முடியும்?

**மனுக்குலத்தில் உள்ள ஒவ்வொருக்கும் இரட்சிப்பு என்பது கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது.**

இரட்சிப்பு என்பது, மிகவும் முக்கியம் வாய்ந்ததாகவும், தேவனது அண்டசராசரத்தில், அனைவராலும் எடுத்துக்கொள்ளப் படக்கூடியதாயும் இருக்கிறது. பாவிகளின் இரட்சிப்பு என்பது, தேவன் பாவத்தை கண்டும் காணாமல், கடந்து செல்லும் காரியமாகாது. தேவன் பாவிகளை முற்றிலும், தமது நீதியின் அடிப்படையில், தனது தெய்வீக பரிசுத்த குணாதிசயத்தின் அடிப்படையில், இரட்சிக்கிறவராய் இருக்கிறார். இது 'கிருபை' என அழைக்கப்படுகிறது. இது தேவனை மட்டும் சார்ந்ததாய் இருக்கிறது, இதற்கென மனிதன் எவ்வித கிரியையும் [புண்ணியக்கிரியைகள், தவக்கிரியைகள் போன்ற எதையும்] நடப்பிக்க அவசியமில்லை. அளவிட முடியாத, பிரமாண்டமான, இவ்வண்ட சராசரத்தின் சிருஷ்டிப்பின் கிரியைவிட, தேவன் பாவிகளை இரட்சிக்கும் திட்டமானது, மிகவும் குறைவாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. என்பதை நாம் உணரவேண்டிய வர்களாய் இருக்கிறோம். .

எப்படியிருப்பினும், தேவனுடைய இரட்சிப்பை ஒரு பாவி ஏற்றுக்கொள்வது என்பது வாழ்வில் மிக எளிதான ஒன்றாய் இருக்கிறது. ஒருவர் ஐசுவரியவானாய் இருத்தல் அவசியமற்றது, ஞானமுள்ளவராகவோ, மற்றும் படிப்பறிவுள்ளவராகவோ இருத்தல் அவசியமற்றது. வயதோ அல்லது தோலின் நிறமோ இதற்கு எவ்விதமான தடையையும் கொண்டுவருவது இல்லை. தேவனுடைய மீட்பில் இருக்கும், எண்ணிமுடியாத நன்மைகளானது, மிக எளிதாய் ஏற்றுக்கொள்ளும் அடிப்படையில் அமைந்து இருக்கிறது, இப்பரந்த அண்டசராசரத்தில், ஒவ்வொருவரும் இதை அடைந்து கொள்வதற்கு விதிவிலக்கின்றி காணப்படுகின்றனர்.

### நான் ஒரு கிறிஸ்துவை உடையவனாவது எவ்வாறு?

ஒரு எளிய படி எடுத்து வைப்பதை மூன்று பிரிவுகளாய் பிரிக்கலாம். முதலாவது, நான் ஒரு பாவியாய் இருக்கிறேன் என்பதை உணர்ந்து கொள்ளுதல் அவசியம். (ரோமர் 3:23; 6:23; எசேக்கியேல் 18:4; யோவான் 5:24).

இரண்டாவதாக, பூரணமாய் இருக்கும் சர்வ வல்லமையுள்ள தேவனுடன் உறவுகொள்ளும் விருப்பத்தை உணருதல் வேண்டும், மற்றும் அவ்வாறு

உறவுகொள்ள நான் பூரணமற்றவனாய் இருக்கிறேன் என்பதை உணருதல் வேண்டும், நான் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து ஒருவரே இரட்சகர் என்று கண்டுகொள்ள அவசியமாய் இருக்கிறது. (1 கொரி. 15:3; 1 பேதுரு 2:24; ஏசாயா 53:6; யோவான். 3:16).

மூன்றாவதாக, எனது சொந்த சுயசித்தத்தை பயன்படுத்தி, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை எனது இரட்சகராய் ஏற்றுக்கொண்டு, அவரை தனிப்பட்ட விதத்தில் அவர் எனக்காய் மரித்தார் என்று நான் விசுவாசித்து, எனது தனிப்பட்ட வாழ்வின் மூலமாய், அவரை, என் வாழ்விற்கு அவசியமான, தனிப்பட்ட ஒரு நபராக ஏற்றுக்கொள்ளுதல், அவசியமான ஒன்றாய் இருக்கிறது. (யோவான் 1:12; 3:36; அப். 16:31; 4:12).

**இரட்சிப்பின் விளைவுகள்:**

இதன் விளைவுகள் என்பது நம்புவதற்கறிய அற்புதமானதாய் இருக்கிறது:

- எனது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, அகற்றப்பட்டன. (யோவான் 1:29),
- நான் தற்போது, நித்திய ஜீவனைப் பெற்று இருக்கிறேன் (1 யோவான் 5:11,12),
- நான் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாய் மாறி இருக்கிறேன் (2 கொரி. 5:17),
- பரிசுத்த ஆவியானவர், எனது சரீரத்தை தமது வாசஸ்தலமாய் அமைத்துக் கொண்டுள்ளார் (1 கொரி. 6:19),
- நான் ஒருபோதும் அழிந்து போவதில்லை (யோவான் 10:28-30).

இவ்வுண்மைகள் வாழ்வின் மிகப்பெரிய பரிமாற்றங்களாய் இருக்கின்றன. இதுவே எல்லா மக்களுக்குரிய இலக்காய் இருக்கிறது; இதுவே நமது வாழ்வின் மேலான நோக்கமாய் இருக்கிறது. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களை கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைப் பின்பற்றச் செய்யும் இவ்வெளிய போதனைகளால் உற்சாகப்படுத்தி, தேவனுடைய பரிசுத்த குடும்பத்தில் மறுபடி பிறந்து, நித்திய வாழ்வையடைய உற்சாகப்படுத்துங்கள். (மத். 11:28; யோவான் 1:12; அப். 4:12; 16:31).

**© Evangelical Bible College of Western Australia**

Many other Christian resources are available freely from our internet web site: www.ebcwa.org.au

For further information email Brian Huggett brianhuggett@bigpond.com.au

We encourage you to freely copy and distribute these materials to your Pastor and friends. You only, need written permission from EBCWA if you intend using the materials in publications for resale. We encourage wide distribution freely!

## தேவனது திட்டத்தில் அற்புதங்கள்

### பூமிக்குரிய நடக்கையில், அற்புதங்களின் சந்தர்ப்ப சூழல்:

அற்புதங்கள் தனிமைப்படுத்தப்பட்ட காரியமல்ல, நமது வாஞ்சை மற்றும் நோக்கங்களுக்கு பொருத்தமாய் தேவனிடத்தில் கோரும் ஒரு காரியமுமல்ல. நம்மை ஆச்சரியத்திற்குள்ளாக்கும், ஒரு தற்செயலாய் நிகழும் ஒரு காரியமுமல்ல. அற்புதங்கள் என்பது "தேவனது திட்டத்தில்" பிண்ணிப்பினைந்த ஒரு பகுதியாய் விளங்குகிறது. இது எல்லா யுகங்களிலும், மனுக்குலம் வசிக்கும் இந்த அநித்தியமான உலகில் நிகழும் ஒன்றாய் இருந்து வருகிறது. சபை யுகத்தில் வாழும் அனைத்து விசுவாசிகளும், தேவனது திட்டத்தில் நமது பங்கு என்ன என்பதை புரிந்து கொண்டு, கர்த்தருடன் இணைந்து நடந்து கொண்டு, அவர் நமக்காய் வைத்திருக்கும் யாவையும் அணைத்துக் கொண்டு, முற்றிலும் தேவன் எதிர்பார்க்கும் ஒவ்வொரு அவசியமான காரியத்திலும் அனுதினம் கீழ்ப்படிந்து நடப்பது அவசியம்.

நாம் கர்த்தரின் திட்டத்தில் அமைந்து செயல்பட இப்பூமியில் காக்கப்பட்டு வருகிறோம், நாம் கர்த்தரின் இராணுவ வீரர்களாயும், அவரது ஸ்தானாபதியாகவும், அவருக்கு சேவகராகவும் நமக்கு நியமிக்கப்பட்ட எல்லா பணிகளையும் செய்து, குறுகிய கால இவ்வுலக வாழ்வில் வாழ்ந்து முடிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட வாழ்வு செய்ய வேண்டியவர்களாயும் இருக்கிறோம். எபேசியர் 5:18-21. மற்றும் தேவனது சர்வாயுத வர்க்கத்தை எல்லா நேரங்களிலும் தரித்தவர்களாய் இருத்தல் மிகவும் அவசியம். எபேசியர் 6:12-18. "கட்டளைகளுக்கு கீழ்ப்பட்டவர்களாய்" எப்பொழுதும் நடந்து கொள்ளுதல் வேண்டும், இவ்வாறு நம்மிடத்தில் எதிர்பார்க்கப்படுகிற காரியங்களை வாழ்வின் வழியாய் கொண்டு, கீழ்ப்படிதலை அடிப்படையாய் கொண்டு நாம் ஒவ்வொரு அடியும் எடுத்து வைக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

அற்புதங்களின் விளக்கமாவது, வினோதமான அற்புதமான காரியங்கள், அனுதின வாழ்வில், சாட்சிபகரும் போதும், நியமங்களை நிறைவேற்றும் போது நம்மை உயர்த்துவதாயும், பரலோகின் முன் ருசியை மற்றும் அதன் வல்லமையை அளிப்பதாகவும், ஏற்ற சமயங்களில், அவைகள் பூமிக்கு கடந்து வருவனவாயும் இருக்கின்றன. அற்புதங்கள் என்பது "சாதாரண" நிகழ்வு எனக்கூறுவதற்கில்லை, அவைகள் நமது புத்திக்கு அப்பாற்பட்டதாய் இருக்கிறது, மற்றும் இப்பிரபஞ்சம் எவ்வாறு ஒன்றாய் இணைக்கப்பட்டுள்ளது என்பதை அறியும் அறிவிற்கு அப்பாற்பட்டதாயும் இருக்கிறது. .அவைகள் இயற்கை பிரமாணங்களை மீறுவது இல்லை, இருப்பினும் நாம் புரிந்து கொள்வதற்கு அப்பாற்பட்டதாய் இருக்கும், அவைகள், இப்பிரபஞ்சத்தை தேவன் உண்டாக்கினார் என்பதையும் அவர் ஒருவரே அதற்கு பொறுப்பாளர் என்பதை நமக்கு நினைவு படுத்துகிறதாய் இருக்கிறது.

தேவன் சிருஷ்டிக் கர்த்தரும் மற்றும் இரட்சகருமாய் இருக்கிறார். ஆகையால் அவர் சர்வ வல்லமையுடையவராய், அவசியமான ஒவ்வொரு காரியத்தையும், இப்பூமியில் தமது திட்டத்தில் நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார். அற்புதங்கள் அவரது பரிசுத்த குணாதிசயங்கள் மற்றும் அவரது வல்லமை மூலம் இவைகள் இணைந்து அவரது திட்டத்தில் செயல்படுவதாய் இருக்கிறது. அவரது நோக்கம் எப்பொழுதும் அவரது மகிமைக்கு ஏதுவாய் வழிநடத்துகிறதாய் இருக்கிறது. பிசாசுகளின் வல்லமையினாலும் மனிதருக்கு "அற்புதங்கள்" நிகழ்த்தப்பட்டு வருகின்றன, இவற்றைக் குறித்து நாம் எச்சரிப்பு/டன் இருத்தல் அவசியம். 2 **தெசலோனிக்கேயர்** 2:9-12.

எதிராளி மகாப்பெரிய போலியான காரியங்களை செய்வதில் திறமை மிக்கவனாய் விளங்குகிறான், அவன் ஒளியின் தூதனது வேஷத்தில் தோன்றி போலியான அற்புதங்களை செய்கிறவனாய் இருக்கிறான். 2 **கொரி**. 11:13-15. நமது நாட்களில். இப்படிப்பட்டவைகளை எதிர்பார்க்கிறவர்களாய் இருக்கிறோம், பல நூற்றாண்டுகாலமாக, சாத்தானுடைய அற்பு அடையாளங்கள் நிகழ்த்தப்பட்டு வருவதையும், அற்புத அடையாளங்கள் மீது ஆவலாதியாய் உள்ளவர்கள் இப்படிப்பட்ட போலியான அற்புத அடையாளங்களில் சிக்கி தவித்ததை கண்டு வருகிறோம். புறஜாதிய எகிப்தின் மந்திரவாதிகளை மோசே எதிக் கொண்ட போது, 2 **தீமோத்தேயு** 3:8-9, நமது நாட்களில் "அக்கிரம செய்கைக்காரர்" செயல்படுவது போன்று, 2 **தெசலோனிக்கேயர்** 2:7, அவர்கள் பெற்று செயல்படும் வல்லமையானது, சர்வ வல்லவரின் வல்லமைக்குக் கீழான வல்லமையாய் செயல்படுகிறது. நாம் பெற்றிருக்கும் பரிசுத்த ஆவியானவரின் நிறைவினால் உண்டாகும் வல்லமை மிகவும் வல்லமையுள்ளதும், எல்லா வல்லமைகளுக்கும்

மேலானதுமாய் விளங்குகிறது **1 யோவான் 4:4.** காலாகாலங்களில், எதிராளியின் வல்லமையானது பெரிய வல்லமையாய் தோன்றினும், அவை எப்பொழுதும் தேவனது வல்லமைக்குக் கீழானதாகவே இருந்து வருகிறது. தேவனுக்குக் கீழ்ப்படிந்து, பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட வாழ்க்கை செய்யும் விசுவாசிகளுக்கு இப்படிப்பட்ட வல்லமை சாத்தானின் சகல வல்லமைகளையும் மேற்கொள்ள வகை செய்கிறதாய் இருக்கிறது.

"அற்புதங்கள்" என்கிற பாடத்தை நாம் புரிந்து கொள்ள முயலுவோமாக, இதை வேதாகம மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட வேதபாடம் மூலம், முழுவதுமாய் கற்றுக்கொள்ள இருக்கிறோம். எதிராளியானவன் எல்லா விசுவாசிகளையும், வஞ்சித்து, அவர்களை சிதறடிக்கிறவனாய் இருக்கிறான். மதியீனமும், ஆழமற்ற மேற்போக்கான விசுவாசிகளிடம் இவ்வித வஞ்சகங்களை நடப்பித்து வருகிறான். ஆகையால், கர்த்தரின் அற்புதங்கள் சரித்திரத்தில் எவ்வாறு இடம் பெற்றது என்பதையும், அதன் ஆவிக்குரிய முக்கியத்தையும் புரிந்துகொள்ள முயலுவோமாக! இதன் மூலம் எதிராளியின் வேலைக்காரர் வஞ்சிக்கும் வஞ்சக செயல்பாடுகளுக்கு உடன்படாமல், கர்த்தரின் வழியிலும், அவரது திட்டத்திற்கும் வல்லமைக்கும் இசைய, இக்கடைசி காலத்தில் நடந்து கொள்வோமாக! **ரோமர் 1:18-23.**

இவற்றைக்குறித்து **Bible Topic Book** Doctrinal Studies, மூலம் கற்றுக்கொள்ள இருக்கிறோம். தேவனது திட்டத்தில் நிகழ்ந்து வரும் அற்புதங்கள், எச்சூழலில், எவ்வாறு நிகழ்த்தப்பட்டது என்றும், இன்றைய அளவில் நமது வாழ்க்கைச் சூழலில் அற்புதம் எவ்வாறு நிகழக்கூடும் என்பதையும், தேவன் நமது வாழ்வில் எத்தகைய நோக்கத்துடன் அவைகளை செயல்படச் செய்கிறார் என்பதனையும் விரிவாக நாம் கற்றுக்கொள்ள இருக்கிறோம். நாம் இப்புவியில் அவரது சேவை செய்யும்படியாய் இருக்கிறோம், நமது நடக்கையில் தாக்கங்களை ஏற்படுத்தும் வகையில் தேவனது திட்டத்தில், அற்புதங்களின் தேவையை தழுவ வேண்டியர்களாய் இருக்கிறோம். கர்த்தருக்கு அவசியமானவற்றை எல்லாம் செய்ய ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் மிகவும் அவசியம். இது நமது திட்டமல்ல இது அவருடைய திட்டமாய் இருக்கிறது.

இந்த தலைப்பில் "எவ்வித குறுக்கு வழியில்" பரிசீலனை செய்யாது, கர்த்தர் நம் ஒவ்வொருவரிடம் எதிர்பனவற்றை நிறைவேற்றி, கீழ்ப்படிதலுள்ள சேவகராய், மற்றும் ஸ்தானாபதியாய், கர்த்தரின் போர்ச்சேவகராய் செயல்படுவோமாக! அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவோமானால், நாம் அவரது சிநேகிதராய் இருப்போம். **யோவான் 15:7-8, 12-14.** நீங்கள் ஒரு "அற்புதம் செய்பவராய்" இருக்க தேவன் விரும்புவாரென்றால், அவரது திட்டத்தில் நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து

நடக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும், மோசேயைப் போன்று மற்றும் அப்போஸ்தலரைப் போன்று முன்செல்ல ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். தேவன் நமக்காய் திட்டம் வகுக்கிறவராய் இருக்கிறார், நாமல்ல என்பதைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். **எரேமியா 10:23**.

எவ்வகையான அற்புதங்களாய் இருக்கட்டும், அது தேவனால் உண்டாயிருக்குமேயானால், அவைகள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மீதுள்ள நமது அன்பு, மற்றும் அவருக்கு செய்யும் ஆராதனை, மற்றும் சேவை இவற்றை ஒருபோதும் பாதிப்புண்டாக்கி, திசை திருப்பாது இருக்கும். இப்புவியில் வாழும் வாழ்க்கையில், நமது நாம மகிமைக்காய், அற்புதங்களை தேடுவதும், மற்றும் நடப்பிப்பதும் கூடாது. அவைகள் எப்பொழுதும், தேவனது மகிமையைத் தேடுவதாய் இருத்தல் வேண்டும். நாம் எப்பொழுதும் அற்புதங்களினால், திசைதிருப்பட்டு வழிநடத்தப்படுதல் கூடாது. மாறாக தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்றி முடிக்கும்படியாய், தேவன் தாமே அவற்றை நமது வாழ்வில் செய்ய எதிர்பார்த்தல் வேண்டும். நாம் "நாம் அற்புதங்கள் பின்னால் செல்லாதவர்களாய்" [ “miracle chasers/hunters” ] கர்த்தரின் சேவகராய் பணி செய்தல் வேண்டும். அற்புதங்கள் நமது சிந்தையையும், வாழ்வையும் ஆக்கிரமித்து கொள்ளாதவாறு அவைகள் தேவனால் செய்யப்பட எதிர்பார்த்தல் வேண்டும்.

**பொருளடக்கம்**

1. அற்புதங்கள் -- விளக்கங்களும் மற்றும் அபாயங்களும்.

உபதேசங்கள் - தூஷித்தல், அடையாளங்கள் மற்றும் அற்புதங்கள், அற்புதங்கள் மற்றும் தேவனது பரிசுத்த குணாதிசயங்கள்.

2. அற்புதங்கள் நிகழும் சூழல் - தேவனது திட்டம். உபதேசங்கள்: தேவனது திட்டம்.

3. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் வாழ்விலும், ஊழியத்திலும் நிகழ்ந்த மெய்யான அற்புத நிகழ்வுகள்.

உபதேசங்கள் -- ஏசாயா 53 பாடுபடும் ஊழியர், அவரது கீழ்ப்படிதல், அவரது தியாக பலி, அவரது கிரியைகள்.

4. நமது வாழ்விலும் சாட்சியிலும் எதிர்பார்க்கப்படும் அற்புதங்கள்.

உபதேசங்கள் -- கிறிஸ்தவ குணாதிசயங்கள், ஸ்தானாபதி, கிறிஸ்து நம்மில் உருவாகுதல், விசுவாசியின் ஆசாரியத்துவம், நிச்சயம், அற்பணிப்பு, அவருடன் சிலுவையில் அறையப்படல், எதிராளி, விசுவாசத்தால் மேற்கொள்ளுதல், உபவாசம், கனி, பரிசுத்தாவியானவர் பகிர்ந்தளிக்கும் வரம், வாரிசு, கிறிஸ்துவைப் பிரதிபலித்தல், கிறிஸ்துவுக்குள், அவரிடத்தில் பாராட்டும் அன்பு, முதிர்ச்சிக்கான அடையாளங்கள், மனோநிலை, நாம் இவ்வுலகத்தாரல்ல, கீழ்ப்படிதல், ஒப்புக்கொடுத்தல், ஜெபம், வாக்குத்தத்தங்கள், ராஜரீகக் குடும்பம், சேவை, அசையாதிருத்தல், வெளிச்சத்தில் நடந்துகொள்ளுதல் மற்றும் ஜீவித்தல்.

5. எலிசா -- அற்புதங்களைச் செய்யும் ஊழியத்திற்கான சரித்திர எடுத்துக் காட்டு.

உபதேசம் -- எலிசா அற்புதங்களின் ஜீவியம் செய்தவர்.

6. தெய்வீக அற்புதங்களின் பிண்ணனியில் விளங்கும் வல்லமை -- பரிசுத்த ஆவியானவரின் கிரியை.

உபதேசங்கள் -- பரிசுத்த ஆவியானவரின் ஊழியம், பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகள், விக்கிரகவழிபாடு.

7. அற்புதங்கள் -- கர்த்தரின் வாழ்விலும், அவரது அப்போஸ்தலரது வாழ்விலும், நிகழ்ந்த அற்புதங்கள்.

உபதேசங்கள் -- அவைகளின் நோக்கம், கர்த்தரின் அற்புதங்கள், அவரது அப்போஸ்தலரின் அற்புதங்கள், குணமாதல்.

8. "கடைசி நாட்கள்" -- தற்கால நிகழ்வுகளில் எதிர்பார்க்கப்படுவன.

உபதேசம் -- கடசிகாலத்தின் குணாதிசயங்கள், சேவை செய்வதற்கான வல்லமை, மதம்.

Auckland, New Zealand, 2015

**1. விளக்கங்களும் மற்றும் அபாயங்களும்.**

"தூஷித்தல்" என்பதன் அபாயம் குறித்து, இப்பகுதியில் சாதாரணமான ஒன்றாய் எடுத்துக்கொள்ளப்படுவது இல்லை, இப்பூமியில் நாம் கர்த்தரைப் பின்பற்றிநடக்கும் போது, அவர் நம்மை அற்புதத்திற்கென அழைப்பார் எனில், 100% கீழ்ப்படிதலோடு அவற்றை நிறைவேற்ற ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். ஒரு அற்புதம் அவசியமானால், அதைக் கர்த்தர் அருளுகிறவராய் இருக்கிறார், அவ்வாறு கர்த்தர் செய்வதைத் தழுவிக்கொள்ள ஆயத்தமாய் இருத்தல் வேண்டும். நாம் வெட்கப்படுதலோ, எதிர்த்துநிற்றலோ, அற்புதங்களிலிருந்து விலகியிருத்தலோ கூடாது, மாறாக கர்த்தர் எப்பொழுதும் நம்மிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார் என்பதைத் தேடுகிறவர்களாகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை எதிர்பார்த்திருத்தல் வேண்டும்.

நாம் இப்பூமியில் இருக்கும்போது நமது சித்தத்தை அல்ல, எல்லா சந்தர்ப்பத்திலும், கர்த்தருடைய சித்தத்தையே நிறைவேற்றுதல் வேண்டும். இச்சூழலில் எப்பொழுதும் அற்புதத்தை எதிர்பார்த்தல் / காணுதல் வேண்டும். கர்த்தர் என்ன செய்து கொண்டு இருக்கிறார்? கர்த்தர் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார்? நாம் இப்புவியில் வாழ்வது நம் சித்தம் செய்வதற்காக அல்ல, எல்லா சமயங்களிலும் தேவ சித்தம் செய்ய கடமைப்பட்டுள்ளோம். அற்புதத்தை எல்லாச் சூழல்களிலும், இவ்வாறு கண்ணுற வேண்டும். கர்த்தர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? கர்த்தருக்கு அவசியமானது என்ன? இச்சந்தர்ப்பங்களில் கர்த்தருக்கு நம்மில் அவசியமானவைகள் எவை எவைகள்? நமது வாழ்வில், பரிசுத்த ஆவியானவரின் கிரியை மூலம், அவரது மகிமையில் கவனம் செலுத்துதல் வேண்டும். இதன் மூலம் தேவனது நேரடி செயல்பாடுகளுக்காய் விசுவாசத்தில் அடியெடுத்து வைத்து, பரிசுத்த ஆவியானவரது கிரியைகள் மூலம், தேவன் மகிமை படுவதில் கண்ணோக்கம் செலுத்துதல் வேண்டும்.

**தூஷித்தல்:**

1. தேவனது குணாதிசயத்தை வார்த்தையாலோ, செயலாலோ மதியாமல் துணிகரமாய் திட்டுதல், நிந்தித்தல், அவமதித்தல், போன்றவை ஆகும். தூஷித்தல் என்பது தேவனது மகத்துவத்தை திருடுதல், அல்லது அவருக்கு செலுத்த வேண்டிய கனத்தை, மகிமையைச் செலுத்தத் தவறுதல் ஆகும்.

2 தூஷித்தல் அநேக பொருள்நோக்கம் உடையதாய் இருக்கிறது:
அ] தேவனுக்கு விரோதமாய் தூஷித்தல் லேவியராகமம் 24:11-23, ஏசாயா 52:5, எசேக்கியேல் 20:27, வெளிப்படுத்தல் 13:6, 16:11.
ஆ] கிறிஸ்துவுக்கு விரோதமாய் தூஷித்தல். அப்போஸ்தலர் 26:11, யாக்கோபு 2:7.
இ] பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாய் தூஷித்தல். மத்தேயு 12:24-32, மாற்கு 3:22-30, லூக்கா 12:10.
ஈ] தேவனது வார்த்தைக்கு விரோதமாய் தூஷித்தல். சங்கீதம் 107:11, ஏசாயா 5:24.
உ] தூதர்களுக்கு விரோதமாய் தூஷித்தல். யூதா 8, 10.
ஊ] உபதேசத்துக்கு எதிராய் தூஷித்தல். 1 தீமோத்தேயு 6:1.
எ] ஜீவனுள்ள தேவனது சேவகரான விசுவாசிகளுக்கு விரோதமாய் தூஷித்தல். அப்போஸ்தலர் 13:45, 1 கொரி. 4:13, அப். 18:6.
ஏ] தேவனது நாமத்திற்கு எதிராய் தூஷித்தல். ரோமர். 2:24.
ஐ] தேவனது செய்தியாளருக்கு எதிராய் தூஷித்தல். 2 பேதுரு 2:10.
ஒ] மீட்பின் செய்திக்கு எதிராய் தூஷித்தல். ரோமர் 14:16.

3. தேவனது பார்வையில் தூஷணம்.
அ] சத்தியத்தை மறுதலித்தல். 1 தீமோத்தேயு 1:13.
ஆ] தவறான உபதேசம். 1 தீமோத்தேயு 1:20.
இ] விக்கிரக ஆராதனை. நெகேமியா 9:18, 26.
ஈ] பரிசுத்தவான்களை உபத்திரவித்தல். ஏசாயா 52:5.
உ] ஏழைகளை பரிகசித்தல். யாக்கோபு 2:6,7.
ஊ] மாய்மாலம் ரோமர் 2:24, 2 தீமோத்தேயு 3:2.

4. தேவ தூஷணம் என்பதற்கு மற்றொரு அடையாளம், மனிதன் மேசியாவை புறக்கணித்து விட்டு, தங்களது பெருமைகலந்த நம்பிக்கையை, தனது சுயமுயற்சியால், இரட்சகரின்றி இரட்சிப்படைய முயலுவதாகும். யோவான் 3:16-36. நாம் கர்த்தருக்கு சேவை செய்ய இருக்கிறோம் என்பதை மறந்து "அற்புதங்களைத் தொடர்வது" [ “miracle chasing” ] காண்பதற்கும், அனுபவிப்பனவற்றையும் தொடர்வது, கர்த்தரின் பரிசுத்த நாமத்திற்கு

அவகீர்த்தியை கொண்டு வருகிறதாய் இருக்கிறது, சொந்த வாழ்க்கைப்பாதையில் இவைகள் வழிதப்பிச் செல்வதற்கும் அல்லது நிர்மூலமாக்கப்படுவதற்கும் வகை செய்கிறதாய் இருக்கிறது. அவர் நமது இராஜாவும் மற்றும் இரட்சகருமாய் இருக்கிறார், நாம் அவரது சேவையை செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம், நமது சொந்த ஆசைகளை நிறைவேற்றி நாடகமாடுவதற்கல்ல.

## அற்புதங்கள் மற்றும் அடையாளங்கள் / பிரமிக்கச் செய்தல் (விளக்கம்)

"அற்புதம்" என்பதன் செயல் விளக்கம் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. "அற்புதம் என்பது மனுக்குலத்தின் கவனத்தை சிறைப்படுத்தும் நிகழ்வாய் இருக்கிறது. அவைகள் வினோதமாயும், விவரிக்க இயலாத இயல்புள்ள நிகழ்வாயும் இருக்கிறது. இது இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்ட நிகழ்வாய் தோன்றலாம், அதன் காரணம் நாம் எல்லைக்குட்பட்டவர்களாய் நமது அண்ட சராசரத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் அத்தகையதாய் இருக்கிறது. இது ஆவிக்குரிய உலகில் செயல்படும் செயல்பாடுகள், இயல்பான இவ்வுலகில் நிகழும் நிகழ்வாய் இருக்கிறது. ஒரு அற்புத நிகழ்வானது, மனுக்குலத்திற்கு நினைவுபடுத்துவது என்னவெனில், நாம் சிருஷ்டிப்பில் சிருஷ்டிகளாய் இருக்கிறோம், மற்றும் நாம் எப்பொழுதும் பெரிய அளவிலான ஆவிக்குரிய சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், ஆவிக்குரிய செயல்பாடுகளில் தேவதூதர்கள் உட்பட்டு, இடம் மற்றும் காலத்தைக் கடந்தவர்களாய் செயல்பட்டு வருகின்றனர், தேவன் இடம் காலம் இவற்றிற்கு உரியவராய் இருக்கிறார். ஆகையால் அவர் விரும்பும் மற்றும் அடைய எத்தணிக்கும் அனைத்தும் அநித்தியமான இவ்வுலகில், இடம் மற்றும் காலத்திற்கு உட்பட்டு அவர் நோக்கம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. "அடையாள அற்புதம்" [“sign miracle”] என்பது குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், மனிதரின் கவனத்தை ஈர்த்து, சிருஷ்டிகர் வலியுறுத்தும் தேவைகளை கண்டுகொள்ள மற்றும் புரிந்து கொள்ளச் செய்கிறதாய் இருக்கிறது.

## அடையாளங்கள்

1. ஒரு அடையாளம் என்பது ஏதோ ஒன்றிற்காக அல்லது ஒன்றிற்காக எதிர் நோக்குவதாகும்.

அ] அப்படிப்பட்ட காரியங்கள் - தேவாலயம், முடிசூட்டப்படும் சிறப்பு சின்னங்கள், நட்சத்திரங்கள் மற்றும் சீருடைகள்.

ஆ] யூத திருவிழாக்கள் தேவனது திட்டத்தினைக் குறித்துப் பேசின.

இ] பலிமுறைகள், லேவியரது பலிமுறைகள், கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்துப் பேசின.
ஈ] பழக்கவழக்கங்கள், விருத்த சேதனம் செய்தல் போன்ற பழக்கவழக்கங்கள்.
உ] பெயர்கள் ஜனங்கள் மற்றும் இடங்கள் உட்பட.
ஊ] இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகள் அற்புதங்கள் போன்றவை.

2. அடையாளங்கள் தனிப்பட்ட நபர்களுக்கு தேவனால் கொடுக்கப்பட்டு, அவர்கள் அதிகாரத்தை நிச்சயப்படுத்துகிறதாய் இருக்கிறது. (உபாகமம் 13:1-4, நியாதிபதிகள் 6:17, எசேக்கியேல் 12:6,11, எபிரெயர் 2:4).

3. அடையாளங்கள் அவிசுவாசிக்கும் யூதர்களுக்கு, வரவிருக்கும் நியாத்தீர்ப்பைக் குறித்து, எச்சரிப்பளிக்கிறதாய் இருக்கிறது. (ஏசாயா 20:3, 28:11, எரேமியா 6:1, எசேக்கியேல் 4:3).

4. விசுவாசிகளுக்கான அடையாளங்கள், தேவனது கிருபையை அவர்களுக்கு நினைவுபடுத்துகிறதாய் இருக்கிறது. (யாத்திராகமம் 13:9) மற்றும் உடன்படிக்கை (யாத்திராகமம் 31:13,17) மற்றும் அவரது பரிசுத்தம் போன்றவைகளை நினைப்பூட்டுகிறதாய் இருக்கிறது. (எசேக்கியேல் 14:8).

5. கர்த்தரின் வாழ்க்கையானது ஒரு அடையாளமாய் இருந்தது. (மத்தேயு 12:38-42, லூக்கா 2:34-35, யோவான் 6:30-35).

6. அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் போன்றவை அடையாளமாய் இருந்தது. (மத்தேயு 12:39, 24:30, யோவான் 2:18-22, 3:14-15).

7. அப்போஸ்தலர் தற்காலிக அடையாளங்களை வரங்களாய் பெற்று இருந்தனர், இவைகள் அவர்கள் தேவனிடமிருந்து பெற்றிருந்த அதிகாரத்தை நிரூபணம் செய்கிறதாய் இருந்தது. (அப்போஸ்தலர் 14:8-28, 1 கொரி. 1:22, அப்போஸ்தலர் 19:11-12 cf. 1 தீமோத்தேயு 5:23, பிலிப்பியர் 2:25).

8. அடையாளங்களைக் கேட்பது, ஆவிக்குரியத்தன்மைக்கு அடையாளமாகாது. (மத்தேயு 12:38-39, யோவான் 6:30-35, 12:32-34).

9. லூக்கா சுவிஷேசத்தில் முதல் வருகைக்கான அடையாளங்கள்.

அ] கன்னிகைப் பிறப்பு, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசன நிறைவேறுதல், தேவதூதர் மரியாளையும், எலிசபெத்தையும் சந்தித்தல், இவைகள் அனைத்தும் அற்புத நிகழ்வாய் இருக்கிறது. (லூக்கா 1:26-38).

ஆ] மரியாள் எலிசபெத்தை வாழ்த்திய போது, யோவான் ஸ்நானகன் வயிற்றிலிருந்து களிப்பாய் துள்ளியது வரப்போகிற காரியத்துக்கு அடையாளமாய் இருக்கிறது. (லூக்கா 1:5-25, 43-45 cf. சங்கீதம் 110:1).

இ] மரியாளின் தீர்க்கதரிசனம் அவளது குமாரன் இரட்சகராகவும், தியாகபலியாகவும் செயல்படுவார் என்பதைக் குறித்ததாய் இருந்தது. (லூக்.1:54-56)

ஈ] யோவானின் பிறப்போடு சம்பந்தப்பட்ட அடையாளங்கள் (லூக்கா 1:65-66)

உ] சகரியாவின் தீர்க்கதரிசனப் பாடல். (லூக்கா 1:67-80).

ஊ] மேய்ப்பர்களை தேவதூதர்கள் சந்தித்தல். (லூக்கா 2:10-11).

எ] சிமியோனின் பாடல். (லூக்கா 2:25-35).

ஏ] அன்னாளின் பாடல். (லூக்கா 2:36-38).

ஐ] யோவான் ஸ்நானகனது பிரசங்கத்தில், ஏசாய தீர்க்கதரிசியின் அடையாளம். (லூக்கா 3:3-18).

10. யோவான் சுவிஷேசத்தில் உள்ள ஏழு அடையாளங்கள்:

அ] கானா ஊர் கலியாணத்தில். 2:1-11

ஆ] இராஜாவின் மனுஷனது குமாரன் குணமாக்கப்படல். 4:46-54.

இ] சீலோவாம் குளத்தண்டையின் வியாதியாயிருந்த முடவன். 5:1-16.

ஈ] ஐந்தாயிரம் பேரை போஷித்தல். 6:1-14.

உ] பிறவிக் குருடனை குணமாக்குதல். 9:1-38.

ஊ] லாசருவை உயிருடன் எழுப்புதல். 11:1-46.

எ] கர்த்தரின் உயிர்த்தெழுதல். 20,21.

அடையாளங்கள் அற்புதங்களாய் இருக்கலாம், இந்த சுருங்கிய பாடத்தில் இது ஒரு வலுவான செய்தியாய் விளங்குகிறது. நாம் இத்தகைய நிகழ்வின் போது, ஆழ்ந்த சிந்தனையுடனும், ஜெபத்துடனும் இவைகளை எதிர்கொள்ளுதல் வேண்டும். விசுவாசிகள் இத்தகைய நிகழ்வின் போது மிகவும் கவனமாய் இருந்து, இதன் முக்கியத்துவத்தையும், மீட்பின் உண்மைத் தன்மைதனையும் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். நாம் இங்கிருப்பதன் நோக்கம், ஜனங்களை கல்வாரி சிலுவை அடிவாரத்தில் சேர்க்க, ஏதாகிலும் அடையாளங்கள், அற்புதங்கள் நிகழுமேயானால், அவைகள் ஜனங்களை இரட்சிப்பிற்கேதுவாய் வழிநடத்துகிறதாய் இருக்கிறது.

**அற்புதங்கள் மற்றும் தேவனின் பரிசுத்த குணாதிசயம்:**

அற்புதங்கள் தேவனின் தன்மைகளை நிரூபிக்கின்றன.

1. தேவனின் ஏகாதிபதித்துவத்தை கீழ்க்காணும் கர்த்தரின் செயல்கள் விவரிக்கின்றன:

 a) கானாவூரில் தண்ணீரை திராட்சைரசமாய் மாற்றின அற்புதம் கர்த்தரின் சிருஷ்டிப்பின் கிரியையை விவரிக்கின்றது (யோவான்2:1-11)'
 b) கலிலேயாக் கடலில் புயலை அமர்த்தினது அவரின் வல்லமையை விவரிக்கின்றது (மாற்கு4:35-41; மத்தேயு8:18).
 c) 5000 மற்றும் 4000 போஷித்தது (மாற்கு6:33-44; 8:1-9)'
 d) கலிலேயா கடலின் மீது நடந்து சென்றது (மாற்கு 6:47-52).
 e) கெத்சமனேயில் அவர் கைது செய்யப்பட்டது (யோவான்18:6).

2. தேவனுடைய நீதியை கீழ்க்காணும் நிகழ்ச்சி விவரிக்கின்றது:
சீஷர்களுக்கு முன்பதாக கர்த்தர் மலையில் மறுரூபமானபோது, தேவனுடைய பரிசுத்தம் கர்த்தர்மேல் இருப்பதை அவர்கள் கண்டனர். (மத்தேயு 17:1-8; மாற்கு9:2-8; லூக்கா9:28-36).

3. தேவன் நீதிசெய்யும் செய்யும் செயல்களை கீழ்க்காணும் நிகழ்ச்சி விவரிக்கின்றது:
சிலுவைப்பாடுகளுக்கு ஒருவாரத்திற்கு முன்னர், அத்திமரத்தை சபித்த சம்பவம், எவ்வித பிரதிபலிப்பும் இல்லாத கனியற்ற நிலையில் காணப்பட்ட இஸ்ரவேல் மீது வரப்போகும் நியாயத்தீர்ப்பை காண்பிக்கும் அடையாளமாய் விளங்குகிறது. (மத்தேயு 21:18-22; மாற்கு11:12-14, 20-26).

4. தேவனுடைய அன்பு கீழ்க்காணும் நிலையில் விவரிக்கப்படுகிறது.
எல்லா குணமாக்கும் ஊழியங்களும், கர்த்தரின் மனதுருக்கத்தினால், தனது மனித அவதாரம் முற்றிலும் முடிந்து போகும் அளவிற்கு, பாய்ந்தோடியது. வேதாகமத்தில், முப்பத்தாறு முக்கியமான கர்த்தர் குணமாக்கிய சம்பவங்கள் குறிப்பிடபட்டபோதும், அநேக ஆயிரம் அற்புதங்களையும் அவர் செய்தார் என்பதற்கு சில தனிப்பட்ட வசனங்கள் ஆதாரங்கள் அளிக்கின்றன. (eg. மத்தேயு 9:35-36, 14:14, 15:30-31, 8:16-17 etc.).

5. தேவனுடைய நித்திய ஜீவன் கீழ்க்காணும் சம்பவங்கள் மூலம் விவரிக்கப்படுகிறது.
கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் எல்லாவற்றிற்கும் மேலான மகத்தான அற்புதமாய் விளங்குகிறது.

6. தேவனின் சர்வ ஞானம் கீழ்க்காணும் சம்பவம் மூலம் விவரிக்கப்படுகிறது.

a) காணக்கூடாத திரள் கூட்ட மீன்களை அவரது அறிவினால் கண்டு கொண்டார் (மத்தேயு 4:18-22, மாற்கு1:16-20, யோவான்21:1-14).

b) வரி செலுத்தப் போதுமான பணம், மீனின் வாயில் இருப்பதை அறிதல். (மத்தேயு 17:24-27).

c) தமது சர்வ ஞானத்தை நாத்தான்வேலுக்கும், சீகார் ஊரின் கிணற்றண்டையில் சமாரியப்பெண்ணுக்கும் காண்பித்தல் (யோவான் 1:45-51; 4:5-43).

7. தேவனின் சர்வ வியாபகம் கீழ்க்காணும் சம்பவங்கள் மூலம் விவரிக்கப்படுதல்.
தமது வாக்குத்தத்தின் படி விசுவாசிகளுக்கு, பல இடங்களில், அநேகம் கிலோமீட்டருக்கு அப்பால் தோன்றி சத்தியத்தை விளக்கிக்காட்டினார். (மத்தேயு28:20).

8. தேவனின் சர்வ வல்லமை கீழ்க்காணும் சம்பங்கள் மூலம் விவரிக்கபடுகிறது.

லாசரு போன்றோரை மரித்த நிலையிலிருந்து உயிரோடு எழுப்பிய செயல் மூலம் அவரது சர்வ வல்லமை விவரிக்கப்படுகிறது.

9. தேவனின் மாறாத்தனமை கீழ்க்காணும் சம்பவங்கள் மூலம் விவரிக்கப்படுகிறது.
வலை கிழியத்தக்கதாய் சீஷர்கள் மீன் பிடித்த அற்புதம் இயேசு உயித்தெழுதலுக்கு முன்பும், பின்பும் நிகழ்ந்தமை மூலம் அவரது மாறாத்தனமை விவரிக்கப்படுகிறது.

10. தேவனின் உண்மை கீழ்க்காணும் சம்பவங்கள் மூலம் விவரிக்கப்படுகின்றன.
நூற்றுக்கதிபதியின் வேலக்காரன் மற்றும் ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதிபட்டிருந்த போது, கர்த்தர் அவர்கள் பல கிலோ மீட்டர் தொலவிலிருந்தபோதும் தான் சொன்ன அந்த நொடிப்பொழுதில் அவர்கள் குணமானார்கள். (மத்தேயு8:5-13, லூக்கா7:1-10, யோவான் 4:46-54).

11. தேவனின் கிருபை கீழ்க்காணும் சம்பவங்கள் மூலம் விவரிக்கப்படுகின்றன.
கர்த்தர் கைதுசெய்யப்பட்ட அன்று இரவில் மல்கூஸ் என்பவனின் வெட்டப்பட்ட காதை சொஸ்தமாக்கினது (லூக்கா 22:50). தேவனுடைய கிருபைக்கு ஒரு சாட்சியாய் இருக்கிறது, சிலுவையின் பயங்கரங்களுக்கு முன்னர், தன்ன பிடிக்க வந்த மனிதனுக்கு ஆண்டவர் இவ்வற்புதத்தை செய்தார். இந்த அற்புதம் இயேசு இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் கடைசியாய் செய்த அற்புதம் என்பதன் மூலம் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது.

**2. குணமாக்குதல் நிகழும் சூழல் -- தேவனின் திட்டம்:**

**தேவன் - தேவனின் திட்டம்.**

1. கடந்த கால நித்தியத்தில், தேவன் ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு திட்ட,ம் வகுத்திருந்தார், மானிட சரித்திரத்தில் ஒவ்வொரு நிகழ்வும், தீர்மானமும் அத்தீர்மானத்தை காரிய ரூபப்படுத்துகிறது.

2. தேவனது திட்டம் இயேசுக்கிறிஸ்துவின் ஆளத்துவதை மையமாய் கொண்டு செயல்படுகிறது. (1 யோவான் 3:23, எபேசியர் 1:4-6).

3. தேவனுடைய திட்டத்திற்குள் பிரவேசிப்பது கிருபையின் அடிப்படையில் இருக்கிறது. (எபேசியர்2:8, 9) தேவனின் சர்வ வல்லமை மற்றும், மனிதனின் சுயசித்தமும் சிலுவையில் சந்திக்கிறதாய் இருக்கிறது. தேவன் முழுமையாக்கப்பட்ட இரட்சிப்பை கொண்டு வருகிறார், மனிதன் தனது விசுவாசத்தை கொண்டுவருகிறான்.

4. தேவனின் திட்டம், எல்லா நிகழ்வுகளையும் மற்றும் செயல்களையும் உள்ளடக்கி சித்தரிக்கப்பட்டிருக்கிறது. (1 பேதுரு1:2).

5. அவரது திட்டத்தின் கீழ், தேவன் சில காரியங்களுக்கு நேரடியாய் கட்டளை கொடுக்கிறார், சிலவற்றை நிறுவணங்கள், இஸ்ரவேல், மற்றும் சபை மூலம் செய்கிறவராய் இருக்கிறார்.

6. தேவன் மனிதரின் சுயசித்தத்தில் எவ்விதத்திலும் குறுக்கிடாதபடி, அவர் தமது பூரணமான திட்டத்தை வகுத்துள்ளர், அத்திட்டத்தில் காரணங்களும், விளைவுகளும் உள்ளடங்கியுள்ளது. மட்டுமல்லாது தேவைகள் சந்திக்கப்படல், பாதுகாக்கப்படுதல், மற்றும் செயல்பாடுகள் போன்றவைகளும் அடங்கியுள்ளன.

7. தேவனது திட்டத்தில், அநேக செயல்பாடுகள் இருக்கின்றன. அவைகள் அனைத்தும் பூரணமான, நித்தியமான, மாறாத ஒரு முழுமையான திட்டத்தை நிறைவேற்றுவதாய் இருக்கின்றன.

8. தேவனுடைய திட்டம், மனித சுதந்தரத்துடன் முறண்பாடற்ற நிலையில் இருக்கிறது, அது மனித சுயசித்தத்தை எல்லைக்குட்படுத்துவதோ, அல்லது பலவந்தம் செய்வதோ கிடையாது. தேவன் காரணப்படுத்துவதற்கும், அவர் அனுமதிப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை ஏற்படுத்துதல் அவசியம். தேவன் சிலுவையைக் காரணப்படுத்தினார் ஆனால் பாவத்தை அநுமதித்தார். தேவன் பாவத்துக்கு காரணருமல்ல, அதை ஆதரிப்பவரும் அல்ல.

9. அவருடைய திட்டம் மனிதன் சுயசித்தத்தைப்பெற்று இருப்பதை வருணிக்கிறது. தேவன் மனுக்குலத்தில், பாவத்தைக் குறித்து பாராமுகமாய் இருந்ததில்லை. மனிதனின் ஆரம்பம், பூரணமான சூழலிலும், அறியாமையிலுமிருந்து துவங்கியது. மனிதன் பாவம் செய்தபோது சுயமாய் தனது சுயசித்தத்தின்படியே அதை செய்தான். ஆயிரவருட பூரணமான சூழலிலும் மனிதனால் பாவம் செய்ய இயலும், அவன் பாவம் செய்வான்.

10. தேவனுடைய திட்டம் சார்ந்த, தெய்வீக திட்டங்களுக்கும், மற்றும் பூமியில் மனிதன் நடந்துகொள்வதற்கும், ஏற்படுத்தப்பட்ட தெய்வீக பிரமாணங்களுக்குமிடையே உள்ள வித்தியாசத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். தெய்வீக பிரமாணங்கள் தகுந்த நேரத்தில் நிகழும், தெய்வீகத் திட்டங்கள் நித்தியத்தில் நிகழும்.

11. தேவனது திட்டங்கள் அவரது அறிவிலிருந்து வந்தவைகளாகும். அவர் அவைகளை கடந்தகால நித்தியத்தில் நிச்சயமானவைகள் என கண்டுணர்ந்திருந்தார். தேவனது முன்னறிவு ஒரு காரியத்தை நிச்சயப்படுத்துவது இல்லை, ஆனால் கடந்த கால நித்தியத்தில் அக்காரியங்கள் நிச்சயம் என முன்னறியப்பட்டிருந்தது.

12. முன்னறிதலுக்கும், முன் தீர்மானித்தலுக்கும் வித்தியாசமுண்டு. முன் தீர்மானித்தல் நிச்சயமானவைகளை ஸ்தாபிக்கிறது ஆனால் ஸ்தாபிக்கப்பட்ட நிச்சயமானவைகளுக்காக அது அளிக்கப்படுவது இல்லை. இதைத் திட்டமே அளிக்கிறதாய் இருக்கிறது. (ரோமர்8:29, அப்போஸ்தலர்2:23, 1 பேதுரு 1:2).

13. இதினிமித்தம் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் முன்னறியப்பட்டவர்களாய் இருக்கிறார்கள், முன்னறியப்பட்டவர்கள் தெரிந்துகொள்ளப்பட்ட வர்களாய் இருக்கிறார்கள். தேவன் கடந்தகால நித்தியத்தில் தனிப்பட்ட நபரின் சுயசித்தத்தினால் உண்டாகும், வாழ்க்கையின் ஒவ்வொரு தனிப்பட்டப் பிரச்சனையின் போது, அவர்கள் எவ்வழி செல்வர் என தேவன் முன் அறிந்திருந்தார். தேவன் மனித சித்தத்தில் தலையிட்டு அதை வற்புறுத்துவது இல்லை, கொடுக்கப்பட்ட காலத்தில் ஒவ்வொரு சுயசித்தத்தின் வழியையும் அவர் நன்கு அறிவார். சுயசித்தம் தீர்மானித்ததை தேவன் அளிக்கிறவராய் இருக்கிறார். -- நினைவில் கொள்க - நாம் "மனிதரைப் போன்று பேசுகிறவர்களாய் இருக்கிறோம்" மற்றும் மனிதரைப்போன்று காரியங்களை வெளிக்காட்டுகிறவர்களாய் இருக்கிறோம், தேவனது திட்டம் என்பது, இடம், காலம் போன்றவற்றிற்கு அப்பாற்பட்டதாய் இருக்கிறது, நாமும் இடம் காலம் இவற்றிற்கு அப்பாற்பட்ட சூழலில் அதை தெளிவாய் புரிந்து கொள்ளக்கூடியவர்களாய் இருப்போம்.

14. தேவன் தனது சுபாவத்தில் முறண்படாதவராகையால், விசுவாசிக்கு மிக சிறப்பானவற்றை திட்டமிட்டுள்ளார். தேவன் பூரணர், அவரது திட்டம் மற்றும் அவரளிப்பவகளும் அதனிமித்தம் பூரணமானவைகளாய் இருக்கின்றன.

15. சிலுவை கடந்தகால நித்தியத்தில் திட்டமிடப்பட்டு இருந்தது, அனால் கிறிஸ்துவின் மனுஷீக சுயசித்தம் சிலுவைக்கு செல்ல, கெத்சமனேயில் தீர்மானம் எடுக்க வேண்டியதாய் இருந்தது. (மத்தேயு 26:39-42). தேவன் இரட்சிப்பை சிலுவை மூலம் அளிக்கிறார் மற்றும் அது சுயசித்தத்தின் அடிப்படையில் எடுக்கும் தீர்மானத்தினால், ஒருவர் ஏற்றுக்கொள்வதும் மற்றும் அதை நிராகரிப்பதுமாயிருக்கிறது.

16. எவ்விதத் திட்டமும் தன்னில்தானே மனித சுதந்தரத்தை எதிர்ப்பது இல்லை, மனித சுயசித்தத்தின் மூலம் ஒன்றை தெரிவு செய்துவிட்டபொழுது, தேவனது திட்டம் மனித சுதந்தரத்தை வரையறுக்கிறதாய் இருக்கிறது. அதே நேரத்தில் தேவனிடத்தில் அன்பு கூறவும், அவரைப் பாராட்டவும், துதிக்கவும் சுதந்திரம் அளிக்கப்படுகிறது. கிறிஸ்தவ வாழ்க்கை வாழ தேவன் வழிமுறைகளை வகுத்து இருக்கிறார்.

## 3. இயேசுக்கிறிஸ்துவின் வாழ்விலும், ஊழியத்திலும் விளங்கிய அற்புதங்களின் மெய்த்தன்மை:

**கிறிஸ்து - ஏசாயா 53 ம் அதிகாரம்: இயேசுக் கிறிஸ்துவின் பாடுகள்:**

**ஏசாயா 53 ம் அதிகாரம்: இயேசுக்கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்கதரிசனம்.**

ஏசாயா 53 ம் அதிகாரம், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்து, வேதாகமத்தில் தீர்க்கதரிசனமாய் எடுத்துரைக்கும் பிரபலமான புஸ்தகத்தில் ஒன்றாய் விளங்கிவருகிறது. இது நமது இரட்சிப்பிற்கான முழுமையான திட்டமானது "அற்புதகரமானது" இதில் கூறப்பட்டுள்ள அனைத்து தீர்க்கதரிசனமும் அற்புதமாய் இயேசுக் கிறிஸ்துவின் ஆளத்துவத்திலும், அவரது கிரியையிலும் நிறைவேறியுள்ளது. நாம் அற்புதகரமான திட்டத்தில் பங்கு வகிக்கிறவர்களாய் இருக்கிறோம், இயேசுவின் ஆளத்துவம் மற்றும் அவரது செயல்பாடுகள் அனைத்தும் நம்மை மையமாய் கொண்டிருக்கிறது, மற்றும் இதினிமித்தம் எல்லா மெய் அற்புதங்கள் அனைத்தும் அவருக்கு மட்டுமே மகிமை சேர்க்கிறதாய் இருக்கிறது.

தீர்க்கதரிசனம்: 53:1 vq;fs; %ykha;f; Nfs;tpg;gl;lij tpRthrpj;jtd; ahh;? fh;j;jUila Gak; ahUf;F ntspg;gl;lJ?

நிறைவேறுதல் - யோவான் 12:38.

தீர்க்கதரிசனம்: - 53:2 ,sq;fpisiag;NghyTk;> twz;l epyj;jpypUe;J Jsph;f;fpw Ntiug;NghyTk; mtDf;F Kd;ghf vOk;Gfpwhh;@ mtUf;F moFkpy;iy> nrse;jhpaKkpy;iy@ mtiug; ghh;f;Fk;NghJ> ehk; mtiu tpUk;gj;jf;f &gk; mtUf;F ,y;yhjpUe;jJ.
நிறைவேறுதல் - பிலிப்பியர் 2:5-8.

தீர்க்கதரிசனம்: - 53:3 mth; mrl;ilgz;zg;gl;ltUk;> kD\uhy; Gwf;fzpf;fg;gl;ltUk;> Jf;fk; epiwe;jtUk;> ghL mEgtpj;jtUkhapUe;jhh;@ mtiutpl;L> ek;Kila Kfq;fis kiwj;Jf;nfhz;Nlhk;@ mth; mrl;ilgz;zg;gl;bUe;jhh;@ mtiu vz;zhkw;NghNdhk;.
நிறைவேறுதல் - - யோவான்1:11, மத்தேயு 26:38; 27:20-22,

தீர்க்கதரிசனம்: - 53:4 nka;ahfNt mth; ek;Kila ghLfis Vw;Wf;nfhz;L> ek;Kila Jf;fq;fisr; Rke;jhh;@ ehNkh> mth; Njtdhy; mbgl;L thjpf;fg;gl;L> rpWikg;gl;ltnud;W vz;zpNdhk;.
நிறைவேறுதல் - மத்தேயு8:16, 27:41-43.

தீர்க்கதரிசனம்: - 53:5 ek;Kila kPWjy;fspdpkpj;jk; mth; fhag;gl;L> ek;Kila mf;fpukq;fspdpkpj;jk; mth; nehWf;fg;gl;lhh;@ ekf;Fr; rkhjhdj;ij cz;Lgz;Zk; Mf;fpid mth;Nky; te;jJ@ mtUila jOk;Gfshy; FzkhfpNwhk;.
நிறைவேறுதல் - மத்தேயு 27:26-29, கொலோசெயர்1:20, 1 பேதுரு2:24.

தீர்க்கதரிசனம்: - 53:6 ehnky;yhUk; MLfisg;Nghy topjg;gpj; jphpe;J> mtdtd; jd; jd; topapNy NghNdhk;@ fh;j;jNuh ek;nky;yhUila mf;fpukj;ijAk; mth;Nky; tpog;gz;zpdhh;.
நிறைவேறுதல் - ரோமர் 3:23, 2 கொரிந்தியர்5:21.

தீர்க்கதரிசனம்: - 53:7 mth; neUf;fg;gl;Lk; xLf;fg;gl;Lk; ,Ue;jhh;> MdhYk; jk;Kila thia mth; jpwf;ftpy;iy@ mbf;fg;gLk;gb nfhz;LNghfg;gLfpw xU Ml;Lf;Fl;biag;NghyTk;> jd;id kaph;fj;jhpf;fpwtDf;F Kd;ghfr; rj;jkplhjpUf;fpw Ml;ilg;NghyTk;> mth; jk;Kila thiaj; jpwthjpUe;jhh;.
நிறைவேறுதல் - மத்தேயு 27:12-14, 1 பேதுரு 2:23.

தீர்க்கதரிசனம்: - 53:8 ,Lf;fzpYk; epahaj;jPh;g;gpYkpUe;J mth; vLf;fg;gl;lhh;@ mtUila tk;rj;ij ahuhy; nrhy;yp KbAk;@ [PtDs;NshUila Njrj;jpypUe;J mWg;Gz;LNghdhh;@ vd; [dj;jpd; kPWjypdpkpj;jk; mth; thjpf;fg;gl;lhh;.
நிறைவேறுதல் - லூக்கா23:4-33, யோவான்18:3-30.

தீர்க்கதரிசனம்: - 53:9 Jd;khh;f;fNuhNl mtUila gpNujf;Fopia epakpj;jhh;fs;@ MdhYk; mth; khpj;jNghJ IRthpathNdhNl ,Ue;jhh;@ mth; nfhLik nra;atpy;iy@ mth; thapy; tQ;rid ,Ue;jJkpy;iy.
நிறைவேறுதல் - மத்தேயு 27:24, 57-60.

தீர்க்கதரிசனம்: - 53:10 fh;j;jNuh mtiu nehWf;fr;rpj;jkhfp> mtiug; ghLfSf;Fl;gLj;jpdhh;@ mtUila Mj;Jkh jd;idf; Fw;wepthuzgypahf xg;Gf;nfhLf;Fk;NghJ> mth; jkJ re;jjpiaf; fz;L> ePbj;jehshapUg;ghh;@ fh;j;jUf;Fr; rpj;jkhdJ mth; ifapdhy; tha;f;Fk;.
நிறைவேறுதல் - யோவான்3:16, ரோமர்8:32.

தீர்க்கதரிசனம்: - 53:11. mth; jkJ Mj;Jk tUj;jj;jpd; gyidf; fz;L jpUg;jpahthh;@ vd; jhrdhfpa ePjpguh; jk;ikg; gw;Wk; mwptpdhy; mNefiu ePjpkhd;fshf;Fthh;@ mth;fSila mf;fpukq;fisj; jhNk Rke;Jnfhs;thh;.
நிறைவேறுதல் - யோவான்19:34, ரோமர்4:25.

தீர்க்கதரிசனம்: - 53:12 mth; jk;Kila Mj;Jkhit kuzj;jpY}w;wp> mf;fpukf;fhuhpy; xUtuhf vz;zg;gl;L> mNefUila ghtj;ijj; jhNk Rke;J> mf;fpukf;fhuUf;fhf Ntz;bf; nfhz;ljpdpkpj;jk; mNefiu mtUf;Fg; gq;fhff; nfhLg;Ngd;@ gythd;fis mth; jkf;Ff; nfhs;isahfg; gq;fpl;Lf;nfhs;thh;.
நிறைவேறுதல் - மாற்கு15:27, லூக்கா23:34, யோவான்19:28-31.

**கிறிஸ்து - கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் கீழ்ப்படிதல்.**

1. இயேசுக் கிறிஸ்து தனது கீழ்ப்படிதலில், பூரணமானவராய் இருந்தார். (லூக்கா 2:51; பிலிப்பியர் 2:8). கர்த்தர் பிதாவின் சித்தத்திற்கு பூரணமாய்க் கீழ்ப்படிந்ததை கீழ்க்காணும் வேதவசனங்கள் மூலம் மாதிரியாய் அறிந்து கொள்கிறோம்.

2. வனாந்திரத்தில் கர்த்தரின் சோதனை (மத்தேயு 4:1-11), சோதனைக் காலகட்டத்தில் கர்த்தர் அவைகளுக்கு எதிர்த்து நின்றார், அவரது மனு ஷீகத்தில், அவர் தனது தெய்வீக வல்லமை பயன்படுத்தி தேவனது சித்தத்தை நிறைவேற்றினார். (பிலிப்பியர் 2:5-8, எபிரெயர் 10:7).

3. கெத்சமெனே தோட்டத்தில் கர்த்தர் எல்லா சோதனைகளையும் எதிர்த்து நின்றார், அவரது முகத்தைக் கடினமாக்கிக்கொண்டு, எல்லாவித விபரீதங்களையும், பயரங்களையும் சந்திக்க தன்னை தயார் படுத்திக்கொண்டார். . (மத்தேயு 26:38-46, மாற்கு 14:34-42, லூக்கா 22:41-44).

4. ஆண்டவரை எரிச்சலூட்டும்படியான விசாரணையின் போது கர்த்தர் மிகவும் மன உறுதியுடன் நிலையாய் நின்றார். அவர் கைது செய்யும்போது, அதை எதிர்க்கக்கூடிய வல்லமை அவருக்கிருந்தபோதும், அவர் தன்னை கைது செய்கிறவர்களுக்கு அற்பணித்தார். (யோவான் 18:6), அவர் தன்னார்வமுள்ளவராய், ஒரு படையுடனிந்தார், பேதுரு தனது பட்டயத்தைப் பயன்படுத்தியது இதற்கு ஆதாரமாய் இருக்கிறது. (லூக்கா 22:49-51). அவர் தூஷிக்கப்பட்டும் (மத்தேயு 26:67-68), கோலினால் அடிக்கப்பட்டும் (யோவான் 18:22), வாரினால் அடிக்கப்பட்டும் (மத்தேயு 27:26), பரிகசிக்கப்பட்டு அடிக்கப்பட்டும் (மத்தேயு 27:27-31), பிதாவின் திட்டத்தில் இவைகள் அனைத்தும் ஒரு பகுதியாய் இருந்தமையால், அவைகளை அமைதியுடன் சகித்தார். இவ்வாறு எல்லா அநீதிக்கேடுகளான சோதனைகள் யாவையும் எதிர்ப்பின்றி சகித்தார். எவ்விதக் குற்றமும் செய்யாதபடி தீமை அனைத்தையும் சகித்தார். மாறாக அவர் தனக்குக் கேடு செய்கிறவர்களுக்காய் ஜெபித்தார். இரட்சகராகிய அவர் பிலாத்து துவங்கி தனக்கு கேடு செய்தவர் அனைவருக்காய் ஜெபிப்பது அவரின் கடமையாய் இருந்தது. (லூக்கா 23:34, யோவான் 18:37.)

5. ஏரோது அந்திப்பாவால், அற்புதம் செய்யக் கேட்டுக்கொள்ளப்பட்டபோது, (லூக்கா 23:8-11) கர்த்தர் எவ்வித சோதனைக்கும் அத்தருணத்தில் எதிர்த்து நிற்காதபடி, அவனது அவையில் தன்னை சிலுவைக்கு நேராக ஒரு முகப்படுத்தி, ஏரோது அந்திப்பாவின் பாவங்களையும் மன்னிக்க அவர் தன்னை சிலுவையில் ஒப்புக்கொடுக்கப்பட ஆயத்தமானார். (1யோவான் 2:2).

6. சிலுவையை சுமந்துகொண்டு எருசலேமின் வீதியில் இடறி விழுந்த போது, தெய்வீக பெலனைப் பெற்றுக்கொள்ள முயலவில்லை, மாறாக சிரேனே ஊரானாகிய சீமோன், அந்த சிலுவையை சுமந்து கொண்டு வரப் பணிக்கப்பட்டான். (மத்தேயு 27:32, லூக்கா 23:26).

7. அவர் சிலுவையில் தொங்கும்போது, அங்கு குழுமியிருந்த கூட்டத்தினர் அவரை பரிகாசம் செய்து திட்டிய போதும், அவர் அவைகளை பொறுத்துக்கொண்டார். அவர் எல்லாருடைய பாவங்களை சுமந்து தீர்க்கும்படியாக, எல்லா சோதனைகளுக்கும் எதிர்த்து நிற்கிறவராய் இருந்தார். (மத்தேயு 27:39-44, மாற்கு 15:29-32, லூக்கா 23:35-39).

**கிறிஸ்து - கிறிஸ்துவின் தியாகபலி:**

இயேசுக் கிறிஸ்துவின் சிலுவைத் தியாக பலியானது அநேக விளைவுகளை உள்ளடக்கியுள்ளது, அவைகள்

1. விதிக்கப்பட்ட தண்டனை. கலாத்தியர் 3:13, 2 கொரி. 5:21.

2. மற்றொருவருக்காய் தண்டனை அனுபவித்தல். லேவியராகமம் 1:4, ஏசாயா 53:5-6 2 கொரிந்தியர் 5:21 1 பேதுரு 2:24.

3. தன்னார்வத்துடன் தண்டனை அனுபவித்தல். ஆதியாகமம் 22:9, யோவான் 10:18.

4. மீட்கும்படி தண்டனையை ஏற்றுக்கொள்ளுதல். கலாத்தியர் 3:13, எபேசியர் 1:7, 1 கொரி. 6:20

5. பிராயச்சித்தம் செய்தல். ரோமர் 3:25, 1 யோவான் 2:2

6. ஒப்புரவாக்குதல். 2 கொரிந்தியர் 5:18,19 கொலோசெயர். 1:21,22

7. கருதிய பயனைக் கட்டாயமாய் அளித்தல். யோவான் 12:3 20-23 ரோமர் 5:9,10. 2 கொரிந்தியர் 5:21. எபேசியர் 2:13. எபிரெயர் 9:12.

8. தமது அன்பை வெளிப்படுத்துதல். யோவான் 3:16, 1 யோவான் 4:9,10.

**கிறிஸ்து - கிறிஸ்துவின் கிரியையானது, மனிதரின் கிரியையுடன் ஒப்பிடுதல்.**

1. பாவமறியாத இயேசு, நமக்காய் சாபிக்கப்படுதல் (கலாத்தியர் 3:13). ஒருபாவமும் அறியாத நிலமானது சபிக்கப்படுதல்.

2. கிறிஸ்து முள்ளான கிரீடம் தரிப்பிக்கப்பட்டார். (யோவான். 18:8). நிலமானது முள்ளுகளை பிறப்பித்தது.

3. கெத்சமனேயில் ஜெபித்தபொழுது, இரத்தத்தின் பெருந்துளிகள் வியர்வையாய் வெளியேறியது. (லூக்கா 22:44). மனிதன் முகத்தின் வேர்வை சிந்தி தனது அனுதின ஆகாரத்தைப் பெறவேண்டியதாய் இருந்தது

4. கிறிஸ்து மரணத்தூளிலிருந்து கொண்டுவரப்பட்டார். (சங்கீதம் 22:15). - மனிதன் தூளுக்கு திரும்புகிறவனாய் இருக்கிறான்.

5. கிறிஸ்து நமது பாவங்களை சுமந்து ஆவிக்குரிய மரணம் எய்தினார்.- மனிதன் பாவத்தினால் ஆவிக்குரிய மரணம் எய்துகிறவனாய் இருக்கிறான்.

6. கிறிஸ்து சிலுவையில் இருமுறை மரித்தார்: ஆவிக்குரிய நிலையில் சங்கீதம் 22:1,2..2 கொரி. 5:21 சரீரப்பிரகாரமாக யோவான் 19:30. - மனிதன் இரு முறை மரிக்கிறவனாய் இருக்கிறான் ஆவிக்குரிய உடனடி மரணம், இறுதியாக சரீரமரணம். (ஆதியாகமம் 3:6, ஆதியாகமம் 5:5).

**4. நமது வாழ்விலும் மற்றும் சாட்சியிலும் எதிர்பார்க்கப்படும் அற்புதங்கள.**

**கிறிஸ்தவ குணாதிசயம்.**

1. கிறிஸ்தவ குணாதிசயம் என்பது கிறிஸ்துவின் குணாதிசயத்தை ஒத்து இருத்தலாகும். எபேசியர் 4:13.

2. மெய்க்கிறிஸ்த குணாதிசயம் தொடர்ச்சியாய் பாவத்தை அறிந்து அறிக்கை செய்வதினால் உருவாக்கப்படுகிறதாய் இருக்கிறது. 1 யோவான் 1:5-10.

3. கிறிஸ்தவ குணாதிசயமானது தேவனது வார்த்தையினால் போஷிக்கப்படுவதாலும், தேவனது வார்த்தையை பரிசுத்த ஆவியானவரது நிரப்பும் வல்லமையால் உருவாக்கப்படுகிறதாய் இருக்கிறது. எபிரெயர் 4:1-2.

4. வாழ்க்கைக்குரிய தேவ சித்தத்தினால் அது சரிசெய்யப்படுகிறதாய் இருக்கிறது, தினமும் பரிசுத்த ஆவியானவருக்கு செவி சாய்த்து, வாழ்வதற்குரிய விபரங்களை அடைவதும் இதில் அடங்கியுள்ளது. எபேசியர் 4:30, 1 தெசலோனிக்கேயர் 5:19.

5. அற்பணித்து, கீழ்ப்படிந்து வாழும் வாழ்க்கையில், தேவனது வல்லமையால், குணாதிசயமானது உருவாகிறதாய் இருக்கிறது. ரோமர் 12:1-2.

6. பரிசுத்த ஆவியானவரின் நற்கனியால், தேவனது வல்லமைமூலம், குணாதிசமானது பிரதிபலித்து ஜுவாலிக்கிறதாய் இருக்கிறது. கலாத்தியர் 5:22-23, கொலோசெயர் 1:11.

**கிறிஸ்தவ வாழ்க்கை - ஸ்தானாபதித்துவம்**

1. ஓர் ஸ்தானதிபதி தன்னைத்தானே நியமித்துக்கொள்ள இயலாது, அவன் ஓர் தேசத்தை பிரதிபலிக்க அத்தேசத்தால் நியமிக்கப்படுகிறான், அத்தேசத்தின் அரசனை, மற்றும் அத்தேசத்தின் பிரஜையாக தன்னை பிரதிபலிக்கிறான். நாம் ஸ்தானாதிபதித்துவத்திற்காக தேவனால் நியமிக்கப்படுகிறோம். (2 கொரிந்தியர் 5:20)

2. ஓர் ஸ்தானாதிபதி தனக்குத்தானே தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இயலாது. நமது தேவைகள் அனைத்தும் தேவனால் சந்திக்கப்பட்டு, அவரால் நாம் பாதுகாக்கப்பட்டு வருகிறோம். (பிலிப்பிய்ர் 4:19)

3. ஓர் ஸ்தானாதிபதி தன்னைத்தான் பிரதிபலிக்கிறவன் அல்ல. நாம் இப்பூமியில் தேவனை பிரதிபலிக்கிறவர்களாய் இருக்கிறோம். (மத்தேயு 28:19-20)

4. ஓர் ஸ்தானாதிபதி அனுப்பப்பட்டத்தேசத்திற்கு சொந்தமானவன் அல்ல. அனுபவப்பூர்வமாய் நாம் பூமியில் வாழ்ந்தபோதும் நாம் பரலோக பிரஜைகள். (பிலிப்பியர் 3:20, யோவான் 15:19)

5. ஒவ்வொரு ஸ்தானதிபதிக்கும் கட்டளைகள், எழுதப்பட்டுக் கொடுக்கப்படும். தேவன் நமக்கு தமது கட்டளைகள் அனைத்தையும் எழுதப்பட்ட வேதத்தில் கொடுத்துள்ளார். (1 தெசாலோனிக்கேயர் 4:1-2)

6. ஓர் ஸ்தானாதிபதி தனது சொந்ததேசத்தை பிரதிபலித்து வாழ்வதால், அவனுக்கு ஏற்படும் அவமானங்கள் அவனுக்கு சொந்தமானது அல்ல (மத்தேயு 5:11-12)

7. ஓர் ஸ்தானாதிபதி தான் நியமிக்கப்பட்டுள்ள தேசத்திலிருந்து, தனது சொந்த தேசத்திற்கு அழைக்கப்படுவார் என்றால் அது அவர் நியமிக்கப்பட்ட தேசத்துடன் யுத்தத்தை அறிவிப்பதற்கு சமமாய் இருக்கிறது. சபை மத்திய வானுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபின் இப்பூமியில் கொடிய யுத்தங்கள் நிகழ இருக்கின்றன. புத்தியுள்ள கன்னிகைகள் அனைவரும் மத்திய ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவர். (1தெசலோனிக்கேயர் 4:13-17)

**கிறிஸ்தவ வாழ்க்கை - கிறிஸ்து உன்னில் உருவாதல்.**

1. வேதபகுதி (கலாத்தியர் 4:19) "என் சிறு பிள்ளைகளே கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும், உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப் படுகிறேன்.

2. மதிப்பீடு செய்தல்:
"என் சிறு பிள்ளைகளே" - கலாத்திய விசுவாசிகள் பவுலின் ஊழியம் வாயிலாக கர்த்தரிடம் கொண்டுவரப்பட்டவர்கள், இது பவுலின் கர்ப்பவேதனை மூலம் சாத்தியமாயிற்று. பவுல் கடுந்துயரம் மற்றும் வேதனை போன்றவற்றை கலாத்தியருக்காய் அனுபவித்துள்ளார். "உருவாகுமளவும்" இது எதிர்கால சொல்லாய் இன்னும் நிகழாத ஒன்றாய் சித்தரிக்கப்படுகிறது. கிறிஸ்து உங்களில் உருவாதல் என்பது இங்கு சித்தரிக்கப்படுகிறது. (எபேசியர் 3:16,17; பிலிப்பியர் 1:20). இங்கு கிறிஸ்துவின் குணாதிசயம் ஒரு விசுவாசியில் உருவேற்படுவது குறித்து பேசப்படுகிறது.

3. கிறிஸ்து உங்களில் உருவேற்படுவதன் அடிப்படைக் கருத்து:

அ] கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றியுள்ளார். (மத்தேயு 5:17).
ஆ] விசுவாசிப்போருக்கு கிறிஸ்து, நியாயப்பிரமாணத்தின் முடிவாய் இருக்கிறார். (ரோமர் 10:4, கலாத்தியர் 5:18, 23).
இ] எப்படியிருப்பினும், நாம் உன்னதமான பிரமாணத்தை உடையவர்களாய் இருக்கிறோம், அது ஆவிக்குரிய பிரமாணமாயிருக்கிறது. (ரோமர் 8:2-4).
ஈ] பரிசுத்த ஆவியானவரின் நிறைவுடன் புதிய பிரமாணமானது கட்டளையாய் கொடுக்கப்படுகிறது. (எபேசியர் 5:18).
உ] உள்ளாக வாசம் செய்யும் ஆவியானவரே, கிறிஸ்துவின் குணாதிசயத்தை உருவாக்குகிறவராய் இருக்கிறார். (கலாத்தியர் 4:19).
ஊ] கிறிஸ்தவ நடக்கையில், பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவை மகிமைப் படுத்துகிறவராய் இருக்கிறார். (யோவான் 16:14, 7:39).
எ] கிறிஸ்துவை மகிமைப் படுத்துதலானது, விசுவாசிக்குள் நிகழ்வதாய் இருக்கிறது. (1 கொரி. 3:16, 6:19,20).

**கிறிஸ்தவ வாழ்க்கை - சபையுகத்தின் விசுவாசி - ஆசாரியர்.**

1. விசுவாசி சபையுகத்தின் ஆசாரியராய் இருப்பது தைரியத்தை பெற்று இருப்பதைக் காட்டுகிறது. (எபிரெயர் 10:19-21, refer 1 பேதுரு 2:5-9).

அ] இந்த தைரியம் / பற்றுறுதி கிறிஸ்துவின் இரத்தத்தின் அடிப்படையில் கிடைக்கிறதாய் இருக்கிறது. (இது கர்த்தரின் பூரண கிரியையை சிலுவையில் நிகழ்த்தியதால் கிடைக்கிறதாய் இருக்கிறது.) அவரது உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல் இவற்றால் அவர் நமக்கு முன்னோடியாய் திகழ்கிறார். (எபிரெயர் 4:14 -16, 6:19-20).

ஆ] கிறிஸ்துவின் சரீரமானது சிலுவையில் அற்பணிக்கப்பட்டபோது, தேவாலயத்தின் திரைச்சீலையானது மேல்தொடங்கி கீழ் வரைக்கும் இரண்டாய் கிழிந்தது (மத்தேயு 27:51, மாற்கு 15:38, லூக்கா 23:45), இது விசுவாசியான ஆசாரியர் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் தைரியமாய் நுழைய தகுதிபெற்றதை முக்கியப்படுத்திக் காட்டுகிறது.

இ] தேவனது சமூகத்தில் நமது பிரதாண ஆசாரியரான கிறிஸ்துவைப் பின்பற்றி, தேவனுக்கு ஆசாரிய சேவை செய்ய, வேண்டியவர்களாயிருக்கிறோம்.

2. தேவனுக்கு முன்பாக ஒரு விசுவாசியான ஆசாரியர் செய்ய வேண்டிய நான்குவிதமான சேவை: (எபிரெயர் 10:22-25).

வச. 22 - ஆசாரியரான நமது முதல் சேவையானது ஒவ்வொரு நாளும், நமது ஐக்கியம் மற்றும், ஆவிக்குரிய வாழ்வு செய்தலாயும் இருக்கிறது. இது பழைய ஏற்பாட்டு ஆசாரியன் சரீரப்பிரகாரமாய் தன்னைக் கழுவி சுத்திகரித்துக் கொள்வதைப் போன்று இருக்கிறது (யாத்திராகமம் 29:4, 40:30-33, எண்ணாகமம் 8:7) ஆகையால் விசுவாசி, அறிக்கை செய்வதன் மூலமும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஏதுவாய் சேவைக்காக தன்னை சுத்திகரித்துக் கொண்டு ஆயத்தப்படுவதாய் இருக்கிறது. (யோவான் 13:10, எபேசியர் 5:26, யோவான் 17:17, 1 யோவான் 1:9).

ஆ] வச 23 - நமது இரண்டாவது சேவை கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்து நமது உறுதிப்பாட்டை / நம்பிக்கையை அறிக்கை செய்வதாய் இருக்கிறது. (எபிரெயர் 4:14 with 2 கொரி. 5:17-21).

இ] வச 24. ஒரு விசுவாசியான ஆசாரியர் மற்ற சகோதரரின் ஆவிக்குரிய நலன் குறித்து கரிசனையுள்ளவராய் இருத்தல் வேண்டும். (1கொரி. 10:24, கலாத்தியர் 6:2). ஒருவர் பேரில் ஒருவர் அன்பினால் உந்தப்பட்டு. (பரிசுத்த ஆவியானவரால் உண்டாகிற அன்பினால்) சேவை செய்தல் வேண்டும். (ரோமர் 5:5, கலாத்தியர் 5:22, எபேசியர் 2:10).

இ] வச. 25. ஒரு ஆசாரியரான விசுவாசி, நமது சகோதரருடனும், தேவனுடனும் ஐக்கியத்தில் செயல்பட வேண்டியவராய் இருக்கிறார். ஒரு தனிமனிதரான கிறிஸ்தவர் என்பது இல்லை. சபை கூடுகையின்போது, தேவனுடைய இராணுவத்தில், இப்பூமியின் மீது பணிபுரிய ஊக்கமளிக்கப்படுகிறோம், மட்டுமின்றி இப்புவியில் கிறிஸ்துவுக்கு ஸ்தானாபதியாய் இருந்து போதனைகளை கர்த்தரின் கீழான மேய்ப்பர்களிடமிருந்து பெறுகிறவர்களாய் இருக்கிறோம். ஒன்றுபட்டு கூடுவதற்கு தவறுமேயானால், ஐக்கியத்தினால் உண்டாகும் விசுவாசத்தினை மறுதலிக்கிறவர்களாயிருக்கிறோம். (எபே. 4:11-16, 1 கொரி. 12:1-21).

**கிறிஸ்தவ வாழ்க்கை - தன் நம்பிக்கை.**

1. தன்னம்பிக்கையான ஆதாரம். (எரேமியா 17:7)

2. தன்னம்பிக்கையின் விளைவுகள்: The results of confidence:-
a) பாதுகாப்பு. Protection. (நீதிமொழிகள் 3:25-26)
b) பெலன் Strength. (ஏசாயா 30:15)
c) ஆசீர்வாதம். (எரேமியா 17:7)

3. தன்னம்பிக்கைக்கான உதாரணங்கள்.

அ] தேவனின் பராமரிப்பில் (ஆதி. 22:18)

ஆ] தேவனது சர்வ வல்லமையில் (ஆதி. 50:20)

இ] தேவனின் விடுதலையில் (தானியேல் 3:17-18)

ஈ] தேவனின் வல்லமையில் (1 இராஜா. 18:36-39)

உ] தேவனின் பிரன்னத்தில் (சங்கீதம் 71:5)

ஊ] கொடுந்துயரத்தில் (யோபு 13:15)

4. ஜெபம் சம்பந்தமான தன்னம்பிக்கை:-

அ] தன்னம்பிக்கைக்கான வாய்ப்பு (எபேசியர் 3:12).

ஆ] அருகில் இழுத்துக்கொள்ளப்பட தன்னம்பிக்கை. (எபிரெயர் 4:16)
இ] உள்ளே நுழைவதற்கான தன்னம்பிக்கை (எபிரெயர் 10:19-22)
ஈ] கேட்பதற்கான தன்னம்பிக்கை (1 யோவான் 5:14-15)

5. நியாயத்தீர்ப்பின் நாளில் தன்னம்பிக்கை. (1 யோவான் 4:17)

6. விசுவாசியில் அவரது கிரியை பூர்த்தியடைவதில் தன்னம்பிக்கை. (பிலிப்பியர் 1:6)

7. அறிவுரை கூறுவதில் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுதல். (எபிரெயர். 10:35-39)

**கிறிஸ்தவ வாழ்க்கை - அற்பணம் செய்தல்.**

1. அற்பணம் செய்தல் என்பதன் பொருள், சுயத்தைத் தேவனுக்கு முழுவதும் ஒப்புக்கொடுத்தல். (ரோமர் 6:13)

2. "சுயத்தை மறுதளித்தல்" என்கிற மனப்பான்மையை அடைவதை இது காட்டுகிறது, "என் சித்தத்தின்படியல்ல, உமது சித்தத்தின்படியே ஆகக்கடவது" என அற்பணிப்பது இதில் அடங்கியுள்ளது. (மத்தேயு 16:24, 26:39, கலாத்தியர் 2:20).

3. இது ஒன்றே தேவனால் அங்கீகரிக்கப்படுகிற வரமாய் இருக்கிறது. (ரோமர் 12:1,2).

4. தேவாலய பிரதிஷ்டையானது ஒரு விசுவாசியின் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுகிறதாய் இருக்கிறது. வெளிப்பிரகாரம் (சரீரம்) பரிசுத்த ஸ்தலம் (ஆத்துமா) மகா பரிசுத்த ஸ்தலம் (மனித ஆவி).

5. பரிசுத்த ஆவியானவர் உங்களில் வாசம் செய்வதால், நீங்கள் பரிசுத்த பாத்திரமாய் வேறுபடுத்தப்பட்டு இருக்கிறீர்கள். (ரோமர் 12:1-2 cf. 1இராஜாக்கள் 8:1-11).

**கிறிஸ்தவ வாழ்க்கை - கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்படுதல்.**

1. வேதபகுதி: (கலாத்தியர் 2:20) "கிறிஸ்துவுடனேகூட சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும் நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்.

நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்."

2. மதிப்பீடு செய்தல் அல்லது எழுத்தின்படியே மொழியாக்கம் செய்தல்:

அ] கடந்த காலத்தில் நான் கிறிஸ்துவுடனே சிலுவையில் அறையப்பட்டேன், அதன் விளைவாக, எப்பொழுதும் கிறிஸ்துவிலும், அவரது மரணத்திலும் இனம் கண்டுகொள்ளப்பட, எப்பொழுதும் நான் தொடர்ந்து சிலுவையில் அறையப்பட்டுக் கொண்டே இருக்கிறேன். இது Passive voice - ல் [செயப்பாட்டு வினை] கூறப்பட்டுள்ளது, இந்த சிலுவையில் அறையப்பட்ட அனுபவத்தை நான் பெற்று இருக்கிறேன். (இது நான் இரட்சிப்பை பெற்றுக்கொண்ட போது நிகழ்ந்தது). நாம் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப் பட்டதற்கு பின்னர், நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவர்களாய் இருக்கிறோம், காரணம் கிறிஸ்து நியாயப்பிரமாணம் அனைத்தையும் நிறைவேற்றிவிட்டார். (மத்தேயு 5:17). நாம் ஜெயங்கொண்டவர்களாய் இருக்கிறோம். (1 யோவான் 5:4-5.).

ஆ] "இனி நான் அல்ல" - நான் இனி ஒருபோதும் ஜீவிப்பது இல்லை - பாவத்தின் எனது பழைய ஜீவிதம் / வாழ்வு மற்றும் சுயம் மரித்துவிட்டது.

இ] "கிறிஸ்து என்னில் வாழ்கிறார் / ஜீவிக்கிறார்." - கிறிஸ்து தொடர்ந்து என்னில் ஜீவித்துகொண்டே இருக்கிறார். (கலாத்தியர் 4:19). கிறிஸ்து நம்மில் உறவுகொள்வதற்காக, நம்மில் ஜீவிக்கிறவராய் இருக்கிறார். - (வெளி.. 3:20, யோவான் 14:20, 2 கொரி. 13:5, ரோமர் 8:10, கொலோ. 1:27).

ஈ} "நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்."

3. பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தின் மூலம், கிறிஸ்துவின் குணாதிசயம் ஒரு விசுவாசியில் உருவாகி, நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றும் ஒரே வழியாய் இருக்கிறது. (ரோமர் 8:2-4.) நமது சொந்த பலத்தில் நாம் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள இயலாதவர்களாய் இருக்கிறோம் காரணம் பாவத்தன்மையை நாம் பெற்றிருக்கிறோம்.

**கிறிஸ்தவ வாழ்க்கை - எதிராளி**

1. மாம்சீகமாய் வாழும் விசுவாசி தேவனுக்கு எதிராளியாய் / சத்துருவாய் இருக்கிறான். இவ்வகையான மாம்சீகமாய் வாழும் விசுவாசி, எப்பொழுதும் ஐக்கியத்திற்கு புறம்பே வாழ்கிறான், அறிக்கை செய்தலை இவன் ஒரு போதும் பயன்படுத்துவதே கிடையாது. (ரோமர் 8:7-8).

2. பின்வாங்கி ஜீவிக்கும் விசுவாசி சிலுவைக்கு எதிராளியாய் / விரோதியாய் இருக்கிறான். (பிலிப்பியர் 3:18).

3. பிசாசுகள் கூட தேவனுக்கு விரோதிகளாய் இருக்கின்றனர். (1 கொரி. 15:24,25; எபிரெயர் 10:13).

4. அவிசுவாசிகளும் தேவனுக்கு விரோதிகளாய் இருக்கின்றனர். (ரோமர் 5:10; கொலோசெயர் 1:21).

5. பின்வாங்கி ஜீவிக்கும் விசுவாசிகளுக்கு சிட்சை அளிக்கும் போதகர், அவர்கள் பார்வையில் எதிராளியாய் இருக்கிறார். (கலாத்தியர் 4:16.)

**கிறிஸ்தவ வாழ்க்கை - விசுவாசம் - விசுவாசத்தினால் மேற்கொள்ளுதல்.**

1. விசுவாசத்தால் தேவனது சித்தத்திற்கான நிபந்தனைகளை வாழ்விற்காக கற்றுக்கொண்டு, நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம். - ரோமர் 8:28, 1 தெசலோனிக்கேயர் 3:3; 5:18.

2. விசுவாசத்தினால் தேவனுடன் ஐக்கியத்தை ஏற்படுத்திக்கொண்டு, ஒளியில் நடக்கிறவர்களாய் இருக்கிறோம். - 1 யோவான் 1:7.

3. விசுவாசத்தால் ஒவ்வொரு நாளும் முறண்பாடற்ற நிலையில், நமது நடத்தையை பரீசலனை செய்து, அறிந்த எல்லாப் பாவங்களையும் அறிக்கை செய்து வருகிறோம். - 1 கொரி. 11:28, 31, 1 யோவான் 1:9.

4. விசுவாசத்தினால் தேவனது வார்த்தையை, உணவைக்காட்டிலும் அதிக அவசியமென்று கருதிப் பெற்றுவருகிறோம். - மத்தேயு 4:4; 5:6, 2 பேதுரு 3:18

5. விசுவாசத்தினால் கிருபாசனத்தை சரீரப்பிரகாரமாக அணுகி, தைரியமாய் ஒவ்வொரு தேவைகள், சகாயம் போன்றவற்றைக் கேட்டுப்

பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம், மற்றும் ஒவ்வொரு கவலையையும் அவர் மீது வைத்துவிடுகிறவர்களாய் இருக்கிறோம். - எபிரெயர் 4:15-16; 1 பேதுரு 5:7.

6. விசுவாசத்தினால் பிசாசுக்கு எதிர்த்து நின்று அவன் ஓடிப்போவதைக் காண்கிறவர்களாய் இருக்கிறோம். - எபேசியர் 6:10-13, 1 பேதுரு 5:8.

7. விசுவாசத்தினால் ஆவிக்குரிய காரியங்களை சிந்திக்கவும், தியானிக்கவும் செய்து அதற்கு முதன்மையான இடத்தைக் கொடுக்கிறவர்களாய் பழக்கப்படுத்தி வருகிறோம். - பிலிப்பியர் 4:6-9.

8. நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறவர்களாய் இருக்கிறோம். - 2 கொரி. 5:7.

**கிறிஸ்தவ வாழ்க்கை - உபவாசித்தல்:**

1. உபவாசித்தலுக்கான மெய்யான நோக்கம், சாதாரணமாக ஜெபித்தலுக்கும், வேதபாடத்திற்கெனவும் நேரத்தை செலவிடுவதாகும். இது அற்புதம் செய்வதற்கான வல்லமையை வெளிப்படுத்தும் மந்திர செயல்பாடு அல்ல. [The true purpose of fasting is to spend time ordinarily spent in things such as eating and sleeping to prayer and Bible study.  It is not a magical activity to release power for miracles.]

2. உபவாசம் என்பது உணவை மறுத்து, காலை 6:00 மணி முதல் மாலை 6:00 வரை இருப்பதாகும்.

3. யூதர்கள் பிராயச்சித்த நாளில் உபவாசிப்பர். (லேவியராகமம் 16:29-31; எண்ணாகமம் 29:7). இவ்வேதபகுதிகளில் உபவாசித்தல் என்பது "ஆத்துமாவை சிறுமைப் படுத்துதல்" என்கிற பதத்தால் அறியப்படுகிறது. இது தேவன் மீது ஒருநிலைப்படுதலை குறிப்பதாய் இருக்கிறது.

4. உபவாசத்தை தவறான மனநிலையில் செய்வது மனித கிரியைகளைக் காட்டுவதாய் இருக்கிறது, ஆகையால் இது தேவனது பார்வையில் ஏற்றுக்கொள்ளப்படாததாய் இருக்கிறது. (ஏசாயா 58:3-4, எரேமியா 14:12). இது ஏதோ ஒன்றை தேவனிடமிருந்து பெறும்படியாய் இராது, தேவனது வழிகளைத் தேடுவதாய் இருக்கிறது.

5. உபவாசம் என்பது எப்பொழுதும் தேவனுக்கு முன்பாக தாழ்மைப் படுவதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. (சங்கீதம் 69:10).

6. இயேசு தனது சோதனை காலத்தில், நாற்பது நாள் இரவும் பகலும் உபவாசித்தார். (மத்தேயு 4:2).

7. கிறிஸ்தவர்கள் உபவாசிக்கும் போது, அது ஒரு தனிநபருக்கும் தேவனுக்கும் இடையே சம்பந்தப்பட்டதாய் இருக்கிறது. (மத்தேயு 6:16-18). உபவாசிக்கும் கிறிஸ்தவர், அதை எல்லோரும் காண்கிறவகையில் செய்யக்கூடாது, அதன் நோக்கம் மனநிலையை அமைதிபடுத்தி, தேவனது வழிகளை அடுத்த நாளுக்காகவும், வாரங்களுக்காகவும், ஆண்டிற்காகவும் கண்ணோக்குவதாகும்.

8. உபவாசத்தில் ஜெபத்திலும், வேதத்தைக் கற்றுக்கொள்வதிலும் அதிக நேரத்தை செலவிடுவது பயனுள்ளதாய் இருக்கிறது.
[அ] பெரிய தீர்மானங்களை எடுப்பதற்காக கிறிஸ்தவர்கள் அல்லது சபைகள் உபவாசித்தன. (அப்போஸ்தலர் 13:2,3.).
[ஆ] சில வகையான பிசாசுகளை அகற்றுவதற்கு உபவாசிக்கப்பட்டன. (மத்தேயு 17:21; மாற்கு 9:29).
[இ] எழுப்புதலுக்காய் உபவாசித்தனர். (உ.ம். தென்கொரிய எழுப்புதல்) (e.g. the post-war revival in South Korea).

**கிறிஸ்தவ வாழ்க்கை - பரிசுத்த ஆவியானவரின் கனி.**

1. பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவது வாழ்வில் கனியை உருவாக்கும். (அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்) (கலாத்தியர்5:22-23) . "ஆவியின் கனி" என்பது ஒருமை வாக்கியம், இது குறிப்பிடத்தக்கது - எல்லா நற்பண்புகளும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும்பொழுது ஒரே நேரத்தில் உருவாகின்றன.

2. ஆவியின் கனியானது கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுத்தப்படுகிறது:

- ரோமர் 14:17 - நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியானவரால் உண்டாகும் சந்தோஷம்.

- கொலோசெயர் 3:12-15. உருக்கமான இரக்கம், தயவு, மனத்தாழ்மை, சாந்தகுணம், நீடிய பொறுமை, மன்னித்தல், அன்புகூறுதல், சமாதானம், நன்றியுடனிருத்தல்.
- 1 தெசலோனிக்கேயர் 1:2. விசுவாசம், அன்பு, பொறுமை, நம்பிக்கை.

3. இதன் அடிப்படை நோக்கம் தேவனை வாழ்வில் பிரதிபலித்தல் ஆகும் (எபேசியர் 5:1) நாம் இரட்சிக்கப்பட்டபின்னர் இப்பூமியில் இருப்பதன் நோக்கம் கனி கொடுப்பதற்காக ஆகும். (யோவன் 15:16, பிலிப்பியர் 4:17).

4. நாம் தேவனுடைய வார்த்தையை கேட்பதினால் கனி கொடுக்கிறோம். (மாற்கு4:20-28). மற்றும் அதனை வாழ்விற்கு கைக்கொள்வதன் மூலம் கனிகொடுக்கிறோம். (எபிரெயர்4:2).

5. வளர்ந்து கனிகொடுக்கத்தவறும்போது, விசுவாசி தெய்வீக சிட்சைக்கு உள்ளாகிறார், மேலும் விசுவாசிக்கு அகால மரணம் கூட நேரிடலாம். (லூக்கா13:6-9 யோவான்15:2).

6. கனி கொடுத்தலின் அடிப்படையைக்கொண்டே நித்தியத்தில் பிரதிபலன்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. (1 கொரிந்தியர் 3:10-15, 2 கொரிந்தியர் 5:10)

7. கனிகொடுத்தல் மற்றும் ஆவியின் வரம் இவைகளைக் குழப்பிக்கொள்ளக்கூடாது. .இவைகள் ரோமர். 12:6-8; 15:18-19; 1 கொரிந்தியர் 12:8,10; 1 கொரி. 12:28-30; எபேசியர் 4:1 போன்ற வேதபகுதிகளில் பட்டியலிடப்பட்டுள்ளன.

8. ஒருவர் கிறிஸ்தவரை அவரது கனியால் அறிவர் (மத்தேயு 7:16-20; லூக்கா 6:43-45; 1 யோவான் 3:10 & 11; யோவான் 15:8) குறிப்பாக அவர்களது அன்பைக் கொண்டு அறிவர் (யோவான் 13:35) ஆனால் அவர்களது வரங்களைக் கொண்டல்ல, சாத்தானது வரங்களால் போலி ஊழியர் சாத்தானைப் பிரதிபலிக்கிறவர்களாய் இருக்கின்றனர். (2 தெச. 2:9).

9. மூன்று இயல்பான கனிவர்க்கம், ஆவிக்குரிய கனியைக் குறித்த கருத்துகுறிப்பை அளிக்கின்றன: ஆப்பிள் -- அன்பு, திராட்சை -- மகிழ்ச்சி, மாதுளை -- சமாதானம்.

10. கலாத்தியர் 5: 22-23 ஆவியின் கனியானது மூன்று பகுதிகளாய் பிரிக்கப்படுகின்றன.

அ] அன்பு, சந்தோஷம், சமாதானம் - தேவனிடம் பயன்படுத்தும் கனி.
ஆ] நீடிய பொறுமை, தயவு, நற்குணம் - பிறரிடம் பயன்படுத்தும் கனி.
இ] விசுவாசம் [Faithfulness], சாந்தம், இச்சையடக்கம் - தனக்குதானே பயன்படுத்திக்கொள்ளும் கனி.

ஆவிக்குரிய கனியானது மெய்யான ஆவிக்குரிய தன்மையை வகையறுக்கிறதாய் இருக்கிறது, இதற்காய் எவ்வித அற்புதமும் உங்களைச் சூழ நிகழ்வது இல்லை. மத்தேயு 7:13-23.

**கிறிஸ்தவ வாழ்க்கை - வரங்கள்: ஆவிக்குரிய வரங்கள்.**

1. மூன்று பொதுவான வேதபகுதிகள், ஆவிக்குரிய வரங்களைப் பட்டியலிடுகின்றன. (எபேசியர் 4:11, 1 கொரி. 12:28-30, ரோமர் 12:3-8).

2. ஆவிக்குரிய வரங்கள் அளிக்கப்படுவதன் நோக்கம், சபையில் சேவை செய்வதற்கும், சபையை கட்டியெழுப்புவதற்கும் ஆகும். (எபேசியர் 4:8-13)

3. ஆவிக்குரிய வரங்களை பரிசுத்த ஆவியானவர் ஒருவர் இரட்சிப்படையும் போது தந்தருள்கிறார். (1 கொரிந்தியர். 12).

4. சில வரங்கள் தற்காலிகமானது (1 கொரி. 13:8-10) மற்றவைகள் நிரந்தரமானவைகள் (1 கொரி. 12:28 cf. 1 கொரி. 13:8).

5. தற்காலிக வரத்தை ஒருவர் வேதாகமமானது பகுக்கப்பட்டு முற்றுபெற்றதற்கு முன் பயன்படுத்தி வந்தனர். தற்காலிக வரத்தின் நோக்கம் என்னவெனில், வேதாகமம் பகுக்கப்பட்டு முற்றுப்பெறுவதற்காக அளிக்கப்பட்டது. (1 கொரி. 13:8-10).

6. ஆவிக்குரிய வரங்கள் செயல்பாடு அனைத்தும், முற்றிலும் பரிசுத்த ஆவியானவரது நிறைவை சார்ந்து இருக்கிறது, அப்பொழுது மட்டுமே அதன் முழுப்பயனையும், வல்லமையையும் உணர முடியும். அவைகள் தனிப்பட்ட சந்தோஷத்திற்காகவோ அல்லது சுயலாபத்திற்காகவோ அளிக்கப்படவில்லை, அவைகள் சபையின் பிரயோஜனத்திற்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் அளிக்கப்பட்டு இருக்கின்றன. (அப்போஸ்தர் 2:4)

**கிறிஸ்தவ வாழ்க்கை - வாரிசு உரிமை:**

1. விசுவாசிகள் தேவனது வாரிசுகளாய் இருக்கின்றனர், கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டுள்ளபடியால், அவர்கள் புத்திரர்களாய் கருதப்படுகின்றனர். (ரோமர் 8:17)

2 வாரிசுத்தன்மையானது, நித்திய ஜீவனுக்குரிய உத்திரவாதத்தை அளிக்கிறதாய் இருக்கிறது. (தீத்து 3:7).

3. கிறிஸ்தவர்களின் சுதந்திரமாவன:
[அ] கிறிஸ்துவுக்குள் அவர்களின் சுதந்திரம். (எபேசியர் 1:11)
[ஆ] வெளிச்சத்திற்குள் அவர்களின் சுதந்திரம். (கொலோசெயர் 1:12).
[இ] ஆவியானவரால் உத்தரவாதம் பெறுதல். (எபேசியர் 1:13,14).
[ஈ] பரலோகத்தில் அவர்களின் சுதந்திரம். (1 பேதுரு 1:4).
[உ] அழியாத சுதந்திரம். (1 பேதுரு 1:4)
[ஊ] மாசற்ற சுதந்திரம். (1 பேதுரு 1:4)
[எ] வாடாத சுதந்திரம் (1 பேதுரு 1:4)
[ஏ] இவ்வகை சுதந்திரம் விசுவாசிகளுக்கு மட்டும். (1 பேதுரு 1:5).
[ஐ] காக்கப்படுகிறவர்களுக்கான சுதந்திரம். (1 பேதுரு 1:5).

**கிறிஸ்தவ வாழ்க்கை - கிறிஸ்துவின் நடத்தையைப் பிரதிபலித்தல்: [CHRISTIAN LIFE – IMITATE CHRIST]**

1. பிரதிபலித்து நடத்தல் என்பது சீஷத்துவத்தின் அஸ்திபாரமாய் விளங்கி வருகிறது. மற்றும் இதுவே பயிற்சியின் போது, அதிக நிச்சயமானதும், விரைவான முறையுமாய் இருக்கிறது. - 1 கொரி. 4:16.

2. கொரிந்தியர்கள் பவுலைப் பிரதிபலித்து நடக்கிறவர்களாய் இருந்தனர், பவுல் கிறிஸ்து இயேசுவை பிரதிபலித்து நடக்கிறவராய் இருந்தார். இந்தச் சூழலில், பிரதிபலித்து நடத்தல் என்பது, ஊழியத்தினிமித்தம் சுய தியாகமாய் நடப்பதைக் குறிக்கிறதாய் இருக்கிறது. 1 கொரி. 10; 23-33, 11:1, பிலிப்பியர்.. 3:8-19.

3. விசுவாசிகள் கிறிஸ்துவைப் பிரதிபலித்து வாழவேண்டியவர்களாய் இருக்கின்றனர். கிறிஸ்து காணக்கூடாத தேவனின் குணாதிசயங்களைப்

பிரதிபலித்து வாழ்கிறவராய் விளங்கினார். முக்கியமாய் மன்னிக்கிற சுபாவத்தில், தேவனது அன்பை வெளிக்காட்டுகிறவராய் விளங்கினார். எபேசியர் 4:32, 5:1-2

4. பேதுரு, தேவனது வார்த்தையை போதிக்கும் ஊழியர்கள், போதனை பெறுவர்களுக்கு முன்மாதிரியாய் இருக்க ஊக்கமளிக்கிறார். 1 பேதுரு 5:2-3.

5. உதாரணமாய் இருப்பதற்கு முன்னர், முதலாவது பிரதிபலிக்கிறவராய் இருத்தல் மிகவும் அவசியம். 1 தெசலோனிக்கேயர் 1:6-7.

6. பிரதிபலிப்பது, என்பது இயேசுக்கிறிஸ்துவின் ஆரம்ப போதனைமுறையாய் திகழ்ந்தது. 1 பேதுரு 2:21.

7. "என்னைப் பின்பற்றுங்கள்" என அழைப்பது பண்டைய நாட்களில் ரபிமார்கள் தங்களது சீஷர்களை கற்றுக்கொள்ளவும் மற்றும் அவர்களை பிரதிபலித்து வாழும்படியான அழப்பாய் இருந்தது. மத்தேயு 4:19, யோவான் 21:19,22.

8. பிரதிபலித்தல் என்பதன் அடிப்படைக் கருத்து ஒத்துப்போதல் என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. - மத்தேயு 10:24-25; லூக்கா 6:40.

9. இந்த அடிப்படைக் கருத்தானது சீஷர்கள் தங்களது பயிற்சி நிறைவு பெற்ற போது நிறைவேறித்தீர்ந்தது. - அப்போஸ்தலர். 4:13

10. ஒரு போதனை அளிக்கும் போதகர் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கிறவராயும், விசுவாசத்தில் அவர் பிரதிபலிக்கிறவராயும் திகழ்தல் அவசியம். எபிரெயர் 13:7.

## கிறிஸ்தவ வாழ்க்கை -- கிறிஸ்துவுக்குள்

1. இரட்சிப்பின்போது, சபையுகத்தில் வாழும் ஒவ்வொரு விசுவாசியும், கிறிஸ்துவின் சரீரத்திற்குள் பிரவேசிக்கின்றனர். இவ்விதமாய் கிறிஸ்துவுடன் இணைக்கப்படுகின்றனர். இதன் பின்னர் "கிறிஸ்துவுக்குள்" என்கிற நிலையையும் அடைகிறார்கள்.

2. ஆவியானவரின் ஞானஸ்நானம், நம்மை கிறிஸ்துவுடன் இணைக்கிறது, (அப்போஸ்தலர்1:5; 1 கொரிந்தியர் 12:13; எபேசியர்4:5). பரிசுத்த ஆவியானவர், விசுவாசியை கிறிஸ்துவுடன் இணைக்கிறார்.

3. ஸ்தானம் சார்ந்த நற்சூழலில் அமையப்பெற்ற சத்தியம், மாம்சீகத்திற்குரிய மற்றும் ஆவிக்குரிய விசுவசிகளுக்குரியது, மட்டுமல்லாது, விசுவாச துரோகிகளான விசுவாசிகளுக்கும் மற்றும் முதிர்ச்சியடைந்த விசுவாசிகளுக்கும் உரியது. (1 கொரிந்தியர்1:2,30).

4. ஸ்தானம் சார்ந்த நற்சூழலில் அமையப்பெற்ற சத்தியம், விசுவாசியை, நித்தியத்தில், தெய்வீக நியாயத்தீர்ப்புக்கு விலக்கி பாதுகாக்கிறது. (ரோமர்8:1).

5. ஸ்தானம் சார்ந்த நற்சூழலில் அமையப்பெற்ற சத்தியம், விசுவாசியை, தேவனுடன் நித்தியமாய் வாழ தகுதிப்படுத்துகிறது.

a) நித்திய ஜீவன் (1 யோவான் 5:11,12).

b) நமது குற்றங்களை கிறிஸ்துவின் மீது சுமத்தி, தேவனின் நீதியை அடைதல். (2 கொரிந்தியர் 5:21).

6. ஸ்தானம் சார்ந்த நற்சூழலில் அமையப்பெற்ற சத்தியம், தெரிந்துகொள்ளுதல் மற்றும் முன்குறித்தல் இவ்விரண்டிற்கும் திறவுகோலாய் இருக்கிறது. (எபேசியர்1:3-6).

7. ஸ்தானம் சார்ந்த நற்சூழலில் அமையப்பெற்ற சத்தியம், புது சிருஷ்டியை உருவாக்குகிறது. (2 கொரிந்தியர் 5:17; எபேசியர் 2:10).

8. ஸ்தானம் சார்ந்த நற்சூழலில் அமையப்பெற்ற சத்தியம், விசுவாசிக்கு நித்திய பாதுகாப்பை உறுதிப்படுத்துகிறது. (ரோமர்8:38,39).

9. ஸ்தானம் சார்ந்த நற்சூழலில் அமையப்பெற்ற சத்தியம், புலப்படுத்தும் இரு காரியங்கள்:

a) கடந்தகாலம்: கிறிஸ்துவின் மரணத்தில் இனங்கண்டுகொள்ளுதல். (ரோமர்6; கொலோசெயர் 2:12; 3:3).

b) நிகழ்காலம் (மற்றும் எதிர்காலம்) - கிறிஸ்துவின் "புதிய உயிர்த்தெழுதலின் ஜீவனில்" இனங்கண்டுகொள்ளுதல்.

10. தற்பொழுது ஸ்தானம் சார்ந்த நற்சூழலில் அமையப்பெற்ற சத்தியம், விசுவாசி கிறிஸ்துவுடன் உள்ள இணைப்பில் சில காரியங்களை தெரிவிக்கிறது.

a) நித்திய ஜீவன் (1 யோவான்5:11,12).

b) தேவனுடைய நீதி (2 கொரிந்தியர்5:21).
c) தெரிந்து கொள்ளுதல் (எபேசியர்1:4).
d) இறுதி முடிவு (எபேசியர் 1:5)
e) பிள்ளைகளாகுதல் (யோவான் 1:12; 1 யோவான் 3:1,2).
f) சுதந்திரவாளிகள் (ரோமர்8:16,17)
g) பரிசுத்தமாக்கப்படுதல் (1 கொரிந்தியர் 1:2,30).
h) இராஜ்ஜியம் (2 பேதுரு 1:11).
i) ஆசாரியத்துவம் (எபிரெயர்10:10-14; 1பேதுரு 2:5,9).

11. கிறிஸ்துவுக்குள் நமது புதிய நிலை என்பதன் பொருள், இவ்வுலகிலிருந்து வேறுபிரிக்கப் பட்டவர்களாயிருக்கிறோம் என்பதாகும். எபேசியர் 2:6.

12. கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகளாயிருக்கிற போது, கிறிஸ்துவுக்கு ஸ்தானாபதியாயிருக்கிறோம் என்கிற புதிய ஊழியத்தை பெற்று இருக்கிறோம்..2 கொரிந்தியர் 5:17-21 1 கொரிந்தியர் 3:6, 6:4.

13. கிறிஸ்துவுக்குள் நாம் ஒருபோதும் தனிமையில் இல்லை. கொலோசெயர்3:4, யோவான் 17. நாம் கிறிஸ்துவுடன், பரிசுத்த ஆவியானவருடன், மற்ற கிறிஸ்தவர்களுடன் தோழமையைப் பெற்றவர்களாயிருக்கிறோம்.

14. நாம் சதாகாலமும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருடன் இணைக்கப்பட்டு இருக்கிறோம். நாம் பிதாவிலும், பிதா நம்மிலும் இருக்கிறார். - எபேசியர் 4:6, நாம் கிறிஸ்துவிலும், கிறிஸ்து நம்மிலும் இருக்கிறார் - யோவான் 14:20, கொலோசெயர்1:26, நாம் ஆவியானவரிலும், ஆவியானவர் நம்மிலும் இருக்கிறார். - ரோமர்8:9.

15. நாம் அவரது சரீரத்தின் அங்கங்களாயிருக்கிறோம்., மெய்யான திராட்சை செடியாகிய கிறிஸ்துவில் நாம் கிளைகளாய் இருக்கிறோம். அவரது மாளிகையில் ஜீவனுள்ள கற்களாயிருக்கிறோம். அவரது மந்தையின் ஆடுகளாயிருக்கிறோம், அவரது மணவாட்டியின் ஒரு பகுதியாய் இருக்கிறோம், அவரது இராஜ்ஜியத்தில் ஆசாரியர்களாயிருக்கிறோம், அவரது மகிமைக்காய் வேறுபிரிக்கப்பட்ட பரிசுத்தராய் இருக்கிறோம்.

16. ஸ்தானம் சார்ந்த நற்சூழலில் அமையப்பெற்ற சத்தியத்தின் குணாதிசயங்கள் ஆறு பகுதிகளாய் பிரிக்கப்படுகின்றன.

a) இது அனுபவிக்கும் ஒன்றல்ல - உணர்ச்சி வசப்படக்கூடியதோ, பரவசப்படக்கூடியதோ அல்ல.

b) இது வளரும் ஒன்றல்ல - காலப்போக்கில் அல்லது நித்தியத்தில் சீர்ப்படுத்தக்கூடியதும் அல்ல

c) இது மனிதத் தகுதி, ஆற்றல், அல்லது மனித நற்கிரியை இவைகளுடன் சம்பந்தப்பட்டது அல்ல, ஸ்தானம் சார்ந்த நற்சூழலில் அமையப்பெற்ற சத்தியத்தின் கடந்தகால விளவுகளைப்பற்றிய, மறைமுகக்கருத்துக்கள் இங்கு காணக்கூடியதாய் இருக்கின்றன. தேவனுடைய திட்டத்தில் மனிதனுடைய நற்கிரியைகளுக்கு இடம் இல்லை.

d) இது நித்தியத்தன்மை வாய்ந்தது. தேவனாலோ, தூதர்களாலோ, அல்லது மனுக்குலத்தாலோ மாற்றி அமைக்க இயலாது.

e) இது தேவனுடைய வசனத்தினால், மட்டுமே அறியப்படுகிறதாய் இருக்கிறது.

f) இது இரட்சிப்பின் போது முழுமை பெறப்படுகிறது.

**கிறிஸ்தவ வாழ்க்கை -- அன்பு:**

1. தேவன் செய்தவைகளுக்காகவும், அவரது எல்லாநன்மைகளுக்காகவும், அவர் தேவனாய் இருப்பதற்காகவும் நாம் அவரில் அன்புகூறுவது, முழுமையான பாராட்டுதலுக்குரியதாய் இருக்கிறது.

2. கிரேக்க மொழியில் அன்பு என்ற சொல்லுக்குரிய வார்த்தைகள்.

**a)** ஏறாஸ் (eros) (பாலுணர்வு சார்ந்த அன்பு) இப்பதம் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படவில்லை.

**b)** ஸ்டார்கே (storge) (நட்பு சார்ந்த அன்பு) இப்பதம் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படவில்லை.

**c)** அகாப்பே (agape) (மற்றவர்களிடம் கூறும் அன்பு, அளவுக்கதிகமாய் ஒருவரில் பாராட்டப்படும் அன்பு, பயபக்திக்குரிய அன்பு, பணிந்து கொள்ளுவதற்கும், மரியாதை செலுத்துவதற்கும் பொங்கி எழும் அன்பு. அன்பு கூறப்படுகிறவரிடத்தில், மனதுருக்கத்துடனும், தன்னலம் காருதாமல் செலுத்தப்படும் தியாக அன்பு.)

**d)** பிலயோ (phileo) (தழுவுதல் மற்றும் முத்தமிடும் அன்பு. இவ்வன்பு சிநேகம்பாராட்டுதலை குறிக்கிறது மற்றும் தன் சிநேகிதருக்காக செய்யப்படும் காரியங்களையும், சிநேகிதரிடத்தில் காட்டப்படும் அன்பு என அர்த்தம் கூறப்படுகிறது.)

3. நமது ஆண்டவர், யோவான் 21:15-19 ல் அகாப்பே அன்பினால் தன்னுடன் உறவுகொள்ளவேண்டும் என்கிற உண்மையை பேதுருவுக்கு தெளிவுபடுத்தினார். அகாப்பே அன்பின் மூலம் கர்த்தருக்கு சேவை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தினார், மற்றும் விசுவாசிகள் மற்ற விசுவாசிகளிடம் அகாப்பே அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்பதும் இதில் அடங்கியுள்ள பாடம் ஆகும்.

4. இவ்வுலகம் அளிக்கும் பொருட்கள் மீது அன்பு கூறாதிருங்கள் 1 யோவான்2:15-17.

5. உண்மையான தேவ அன்பு எப்பொழுதும் சகோதர அன்புக்கு வழிநடத்தும் 1 யோவான் 1:3 -11, 1 யோவான் 3:1-3, 10, 4:7 -12, 19,

6. மெய் அன்பு ஆராதனையிலும், சேவையிலும் வெளிப்படுத்தப்படுகிறதாய் இருக்கிறது 1 யோவான் 5:1-5.

7. தேவனிடத்தில் கொள்ளும் அன்பு அவரது வார்த்தையின் அறிவினால் பெருக்கெடுக்கிறது மற்றும் வளருகிறது 1 கொரிந்தியர்2:9.

8. இந்த ஆழமான அன்பு கர்த்தரை குறித்து மற்றவர்களிடம் சாட்சி பகருவதில் வெளிப்படுகிறது2 கொரிந்தியர் 5:14.

9. தேவன் பூரணமான, மாற்றமில்லாத அன்பினால் ஒவ்வொரு விசுவாசியையும் நேசிக்கிறார், காரணம் அவரது நேசக்குமாரனுடன் நாம் இணைக்கப்பட்டுள்ளோம்.

10. அவிசுவாசிகளும் கூட அகாப்பே அன்பை பெற்று இருக்கின்றனர், இருப்பினும் அவர்கள் வெளிச்சத்தைக் காட்டிலும் இருளையே அதிகம் விரும்புகிறவர்களாய் இருக்கின்றனர். யோவான் 3:19.

11. கிறிஸ்தவ வாழ்வின் முக்கிய அம்சமாய் திகழ்வது பிறரிடத்தில் அன்பு கூறுவதாகும்.

12. அன்பு கூறுதல் மூன்று வகையாக பிரிக்கப்படுகின்றன:
[அ] தேவனுக்கான அன்பு.
[ஆ] மனைவிக்கான அன்பு.
[இ] மனுக்குலத்தில் பிறரிடத்தில் பாராட்டும் அன்பு.

13. மனைவிக்கான அன்பு சரீரம் உட்படுகிறதாய் இருப்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. மற்ற வகையான அன்பு ஆத்துமா மற்றும் ஆத்துமா, ஆவி உட்படுகிற அன்பாய் இருக்கிறது.

14. தேவனுக்கான அன்பு:

[அ] தேவனுக்கான அன்பு என்பது, தேவன் நம்மிடம் பாராட்டும் அன்பிற்கு பிரதியுத்தரம் செய்தல். (உபாகமம் 6:5)

[ஆ] இவ்வகையான அன்பானது நமது முதிர்ச்சியைச் சார்ந்ததாய் இருக்கிறது. ( பிலிப்பியர் 1:20,21; எபேசியர் 3:17-19; 1 யோவான் 4:17-18).

[இ] சபை யுகத்தில் ஒரு விசுவாசி தேவனிடத்தில் அன்பு செலுத்துவது என்பது பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதன் மூலம் இடம் பெறுகிறதாய் இருக்கிறது. பாவத்தை அறிக்கை செய்தல் என்பது இதில் அதிக முக்கியமான இடத்தை வகிப்பதாய் இருக்கிறது. (எபேசியர் 5:2, c/f 5:18)

[ஈ] இயேசுக் கிறிஸ்து ஆரம்ப கர்த்தாவாய் இருந்து கிருபை மூலம் தேவனிடம் அன்பு கூறச்செய்கிறவராய் இருக்கிறார். (எபேசியர் 5:25-27; 1 யோவான் 4:8-10; 4:19).

[உ] ஒரு விசுவாசி தனது சுயசித்தத்தை பயன்படுத்தி, தேவனிடத்தில் அன்புகூறுகிறவராய் இருக்கிறார்.

[ஊ] ஒரு விசுவாசி கிறிஸ்துவிடம் அன்பு செலுத்தாத பட்சத்தில் விசேஷமான சாபத்திற்குக் கீழாகவும், தொடர்ச்சியான சிட்சைக்கும் உள்ளானவராய் இருக்கிறார். (1 கொரி. 16:22).

[எ] தேவனுக்கான அன்பு, தேவனுக்காய் கிரியை செய்யும்போது உருவாகிறதாய் இருக்கிறது, சாட்சி கொடுக்கும் போது இது சாத்தியமாகிறது. (2 கொரி. 5:14)

[ஏ] இவ்வகையான அன்பு கிருபையினால் ஆரம்பமாகிறதாய் இருக்கிறது மற்றும் இது ஒரு விசுவாசியில் தேவனிடத்திலும், மனுக்குலத்தோர் மீதும் கிருபை கூறும் மனப்பான்மை மூலம் பெருகுகிறதாய் இருக்கிறது. (தானியேல் 9:4; சங்கீதம் 31:23; 119:132; 1 கொரி. 2:9)

[ஐ] தேவனிடத்தில் அன்பு கூறுவது, பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் அனைவருக்கும் கட்டளையாய் அளிக்கப்பட்டு இருந்தது. (உபாகமம் 6:5; 10:12; 11:1; 11:13).

[ஒ] தேவனிடத்தில் அன்பு கூறுவது என்பது, மெய்யான மனமகிழ்ச்சியின் அடிப்படையிலும், மனுகுலத்தின் மீது அன்பு கூறுவதன் அடிப்படையிலுமாய் இருக்கிறது. (உபாகமம் 30:16)

[ஓ] தேவனிடத்தில் அன்பு கூறுவது யுத்த கலத்தில் தைரியத்தை அளிக்கிறதாய் இருக்கிறது. (யோசுவா 23:10-11).
[ஔ] வார்த்தையின் மூலம் நாம் தேவனைக் காண்கிறபடியால், அவரது வார்த்தையின் மூலமே அவரிடத்தில் அன்பு கூற சாத்தியமுண்டாகிறதாய் இருக்கிறது. ( சங்கீதம் 119:165-167, 1 பேதுரு 1:8).

15. மனைவியினிடத்தில் அன்புகூறுதல்:

[அ] இவ்வகையான அன்பு எதிர்பாலரிடம், காண்பிக்கும் வண்ணம், கடந்த கால நித்தியத்தில் தேவன் வடிவமைத்துள்ளார், உங்களுக்கு திருமணம் இல்லாத விரதத்துவமாகிய வரம் இல்லையென்றால் மட்டும் இது சாத்தியமாகிறதாய் இருக்கிறது. (உன்னதப்பாட்டு 8:6-7).
[ஆ] இவ்வகையான அன்பு மரணத்தைக் காட்டிலும் வலிமை மிக்கதாய் இருக்கிறது. இது தேவன் அளிக்கும் நன்மையானவைகளில் ஒன்றாய் இருக்கிறது.
[இ] இவ்வகையான அன்பை மரணத்தால் அழிக்க முடியாது. (பிரசங்கி 9:5-6).
[ஈ] இவ்வகையான அன்பு பிரத்தியேகமாய் ஒரு நபரிடம் மட்டுமே காட்டப்படுகிறதாய் இருக்கிறது. (நீதிமொழிகள் 5:18-19).
[உ] இத்தகைய அன்பு இருவரும் இல்லாது இருக்கும் போது பாதுகாக்கப்படுகிறதாய் இருக்கிறது. (உன்னதப்பாட்டு 1:13, 4:6) இருவரும் இருக்கும் போது கொண்டாடப்படுகிறது (உன்னதப்பாட்டு 2:4). ஆண் ஒரு பெண்ணுக்கு நேசக்கொடியாய், பாதுகாப்பாய் இருக்கிறான்.
[ஊ] மனைவியினிடத்தில் அன்பு கூறுவது கர்த்தருடன் உள்ள உறவைச் சித்தரிக்கிறதாய் இருக்கிறது. (எசேக்கியேல் 16:8, எபேசியர் 5:23-33).
[ஒ] மனோரீதியான பாவமானது எல்லா வகையான அன்பை தாக்குகிறதாய் இருக்கிறது. (1 யோவான் 5:18).
[ஓ] ஒவ்வொருவரின் வாழ்வில் அன்பு கூறுவதற்கான சமயத்தை தேவன் ஒதுக்கியுள்ளார். (பிரசங்கி 3:8)

16. பிறரிடத்தில் அன்புகூறுதல்:

[அ] பிறரிடத்தில் அன்பு கூறுதல் என்பது பெரிதான உறுதி மற்றும் வல்லமை போன்றவற்றை உடையதாய் இருக்கிறது. (2 சாமுவேல் 1:26, நீதிமொழிகள் 27:9,10, யோவான் 15:13, கலாத்தியர் 5:4).
[ஆ] பிறரிடத்தில் அன்பு கூறுதல் என்பது சுமூக உறவையும் மற்றும் சாதகமான சூழ்நிலைகளையும் அளிப்பதாய் இருக்கிறது. (ரோமர் 13:10, நீதிமொழிகள் 10:12)

[இ] பிறரிடத்தில் அன்பு கூறுதல் மாய்மாலத்திலிரு விடுவிக்கிறதாய் இருக்கிறது. (ரோமர் 12:9).

[ஈ] பிறரிடத்தில் அன்பு கூறுதல் புறப்பட்டு செல்வதாயும் மற்றும் நோக்கமுடையதாயும் இருக்கிறது. (கலாத்தியர் 5:13, 2 சாமுவேல் 1:26).

[உ] பிறரிடத்தில் அன்பு கூறுதல் கிருபை அடைவதற்கு உயர்த்துகிறதாய் இருக்கிறதாய் இருக்கிறது. (பிலமோன் 9-12).

[ஊ] பிறரிடத்தில் அன்பு கூறுதல் விரோதத்தை ஏற்படுத்தி, கீழ்க்கண்டவற்றால் அழிவைப் பெறுகிறது:

i) மன நிலை சார்ந்த பாவங்களால் (யோபு 19:19, நீதிமொழிகள் 16:28)

ii) நாவின் பாவங்களால். (நீதிமொழிகள் 17:9).

iii) தேசிய அளவிலான பேரழிவால். (எரேமியா 6:21-23, 20:4-6).

[எ] பிறரிடத்தில் அன்புகூறுதல் போலியானதாய் இருக்க சாத்தியமுண்டு. (நீதிமொழிகள் 19:6-7).

[ஏ] பிறரிடத்தில் பாராட்டும் அன்பானது தெய்வீக சிட்சையினால் அகற்றப்படுகிறதாய் இருக்கிறது. (சங்கீதம் 38:11, 88:18)

17. நாம் தேவனின் அகாப்பே அன்பை (AGAPE=ultimate concern) சிலுவை மூலம் பெறுகிறவர்களாய் இருக்கிறோம். 1 யோவான் 4:10,19, யோவான் 3:16.

18. நாம் எல்லோருக்கும் சுவிஷேசம் அறிவித்து, அனைவரும் தேவ அன்பை கண்டுகொள்ளுமாறு செய்தல் வேண்டும். மத்தேயு 28:18-20.

19. நாம் தேவனது அன்பை பிறருக்கு காட்டி செயல்படும் மனநிலை வேண்டும். 1 யோவான் 4:12, யோவான் 13:35.

20 ஒரு விசுவாசி மற்ற விசுவாசியிடம் அன்பு காட்ட கட்டளை பெற்றுள்ளனர். யோவான் 13:34, 1 யோவான் 4:7,8, பிலிப்பியர் 2:2-8.

21. நாம் கிறிஸ்துவுக்குள் வளருகிறோம், மற்றும் அவரது வார்த்தையானது நம்மில் மாற்றங்களை ஏற்படுத்துமேயானால் நாம் பிறரில் அன்பு கூறுகிறவர்களாய் இருப்போம். 1 பேதுரு 3:18. அன்பு ஆவியானவரின் கனியில் ஒன்றாய் இருக்கிறது.

22. அகாப்பே அன்பு ஒரு விசுவாசியில் இருக்கும்போது, அது நித்தியத்திற்கு அடுத்த காரியமாய் இருந்து, பிறருக்கு செய்யும் ஒவ்வொரு காரியங்களிலும்,

நித்தியத்திற்கடுத்த நிலையை மனதில் கொண்டு செய்யப்படுகிறதாய் இருக்கிறது. 1 கொரி. 13:1-8.

23. நாம் விசுவாசிகளிடம், அவர்களது நடைமுறை வாழ்க்கையில் அன்புபாராட்டி அவர்களது ஆவிக்குரிய வளர்ச்சியிலும், மற்றும் சரீரப்பிரகாரமான நலனிலும் கரிசனை உள்ளவர்கள் என்பது அவர்களுக்குக் காட்டுகிறவர்களாய் இருக்கிறோம். 2 தெசலோனிக்கேயர் 3:15, யாக்கோபு 5:13-16, 1 தீமோத்தேயு 5:1-3, 1 தெசலோனிக்கேயர் 5:11-24.

24. நாம் பிறரை நமது வார்த்தையாலும், செய்கைகளாலும் அன்புகூறும் பெலனைப் பெற்றுள்ளோம், காரணம் நாம் தேவ அன்பினால் அதிகம் அதிகம் நேசிக்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம். நாம் அதிகம் நேசிக்கப்படுகிறோம், நம்மை நேசிக்கிறவர் நமக்குள் இருக்கிறார். நாம் எப்பொழுதும் அவரது நேசத்தைப் பெறுகிறவர்களாய் இருக்கிறோம். ரோமர் 8:37, யோவான் 13:1, 20:2, 21:7,20, 15:9, எபேசியர் 2:4, 5:2, 25, வெளி. 1:5.

**<u>கிறிஸ்தவ வாழ்க்கை -- முதிர்ச்சி -- முதிர்ச்சியின் அடையாளங்கள் (ரோமர் 15:1-15)</u>**

1. மற்றவர்களுக்கு உதவி செய்தல் (வச 1-3). முதிர்ச்சியுள்ள விசுவாசிகள் பெலவீனரின் பெலவீனங்களை தாங்குவர் (வச 1 cf. கலாத்தியர் 6:2). பவுல் முதிர்ச்சியின் பெலத்தில், தன்னை ஒரு விசுவாசியாய் உட்படுத்திக்கொள்கிறவராய் இருக்கிறார்.

அ] ஒரு முதிர்ச்சியுள்ள விசுவாசி கீழ்க்கண்ட குணாதிசயங்களால் அறியப்படுகிறார்.

i) உபதேசங்களை முழுமையாய் அறிந்திருத்தல்.

ii) வாக்குத்தத்தங்களை அறிந்திருத்தல்.

iii) பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதற்கு அதிகபட்ச நேரத்தை செலவளிப்பார்.

ஆ] பெலவீனமுள்ள அல்லது முதிர்ச்சியடையாத விசுவாசி கீழ்க்கண்ட குணங்களால் அறியப்படுகிறார்.

i) இவர் ஒரு புதிய விசுவாசியாய் இருக்கிறார்.

ii) இவர் வேதவசனங்களை அறியாத அறியாமையுள்ள விசுவாசியாய் இருக்கிறார்.

இ] முதிர்ச்சியடைந்த விசுவாசி பெலவீனமுள்ள விசுவாசியின் பெலவீனங்களை கீழ்க்கண்டவிதத்தில் தாங்குகிறவராய் இருக்கிறார்:

i) வேத வசனங்களைக் குறித்த தகவல்கள் அனைத்தையும் அளிக்கிறார் (உபதேசங்கள், வாக்குத்தத்தங்கள், நடக்க வேண்டிய வழிமுறைகள் போன்றவற்றை கற்றுக்கொடுக்கிறார்). இதை அவர் தனது தனிப்பட்ட உரையாடல் மூலம், மற்றும் நடைமுறை மூலம் செய்தல் வேண்டும்.

ii) வேத வசனத்தின் அடிப்படையில் அறிவுரை அளிக்கிறார்.

iii) கிருபையை வலியுறுத்தி, மற்றவர்களின் பிரச்சனைகளை கவனித்து அறிந்து அவர்களுக்கு உதவி செய்கிறார்.

ஈ] முதிர்ச்சியடைந்த விசுவாசி தனக்கே பிரியமாய் நடந்துகொள்பவர் அல்லர் (வச 1,2).

i) இவர் சுயத்திற்கு உணவளிக்கிறவர் அல்லர், அல்லது மற்றவர்களுக்கு உதவுவதை தற்புகழ்ச்சியாய் எடுத்துக்கொள்பவர் அல்லர். இவர் சுயமகிமையைத் தேடாது, தேவனது மகிமையைத் தேடுகிறவராய் இருக்கிறார்.

ii) கிறிஸ்துவே இதற்கு உன்னதமான முன்மாதிரியாய் இருக்கிறார். (வச 3).

கிறிஸ்து தனக்கே பிரியமாய் நடக்கவில்லை, அவர் மனிதனாய் இருக்கும்போது, நாம் ஒருக்காலும் அனுபவித்திராக நெருக்கங்களை, அவர் பெற்றுக்கொண்டார். பழைய ஏற்பாடு கூறுகிறது, "உம்மை நிந்திக்கிறவர்களின் நிந்தை என் மேல் விழுந்தது" இது சிலுவையில் நிகழ்ந்த நிகழ்வைக் குறிக்கிறதாய் இருக்கிறது. பவுல் மேசியாவின் சங்கீதம் என சங்கீதம் 69:9 ஐ குறிப்பிடுகிறார். கிறிஸ்து நமது பாவங்களை சிலுவையில் சுமந்த போது சொல்லொன்னா நெருக்கத்திற்குள்ளானார்.

2. தேவனது வார்த்தையைக் குறித்த அறிவு (வச 4).

a) ரோமர் நிரூபம் எழுதப்பட்ட காலத்தில் பழைய ஏற்பாடு மட்டுமே (கடந்தகாலத்தில் எழுதப்பட்ட காரியங்கள்) வேத வாக்கியங்களாய் இருந்தன. முழுமையாய் தொகுக்கப்பட்டப் [canonical Holy Bible ] பரிசுத்த வேதாகமம் இப்பொழுது நமக்கு கிடைக்கிறதாய் இருக்கிறது.

b) வேதவாக்கியங்களின் நோக்கம்:

i) கற்றுக்கொள்வதற்கு - தேவன் நாம் அறிந்து கொள்ள விரும்பும் உபதேசங்கள்.

ii) பொறுமை - விசுவாசமானது தூரமாய் இருந்த சந்ததியிலிருந்து வருகிறதாய் இருக்கிறது. ஒவ்வொரு காலத்திற்கும் உரிய நம்பிக்கை.

iii) ஆறுதல் - வாழ்க்கையின் சோதனை மற்றும் கடினமான நேரங்களில் ஆறுதலடைய.

iv) நம்பிக்கை - எதிர்காலத்தைப் பற்றியது. எங்கு செல்லப்போகிறோம் என விசுவாசிகள் அறிதல் மூலம் உண்டாகும் நம்பிக்கைக்காய்.

3. மனப்பான்மைகள் (வச 5-6).

விசுவாசிகள் மற்றவர்களைக் காணும் போது, தெய்வீகக்கண்ணோட்டத்தில் காணுதல் வேண்டும். மற்றும் "மற்றவர்களுடன் மனமொத்தமவர்களாய் இருத்தல்" வேண்டும். இரட்சிப்பிற்கு பின் அவர்களது வாழ்வின் ஒரே நோக்கம், "ஒரே மனது, ஒரே வாய் தேவனை மகிமைபடுத்துவதாய் இருத்தல் வேண்டும்." (வச 6). தெய்வீகக் கண்ணோட்டத்தில் இது மட்டுமே சாத்தியமாய் இருத்தல் வேண்டும்.

i) நாம் எல்லோரும் கிருபையினால் இரட்சிக்கப்பட்டோம். கிறிஸ்து நாம் அவருக்கு விரோதிகளாய் இருக்கும் போது நமக்காய் மரித்தார். (ரோமர் 5:8).

ii) நம் எல்லோருக்கும் ஆவிக்குரிய சிலாக்கியம், பொறுப்புகள் யாவும் ஒரேவிதமாய் இருக்கின்றன. (ஆவிக்குரிய வரங்களைத் தவிர).

iii) ஒவ்வொரு விசுவாசியும் பாவத்தன்மையைப் பெற்றுள்ளனர் ஆனால் அதை வித்தியாசமான விதங்களில் வெளிப்படுத்துகிறவர்களாய் இருக்கின்றனர்.

iv) ஆவிக்குரியனவற்றை நாம் அனைவரும் ஒரே விதத்தில் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம். (பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவது) மற்றும் எல்லோரும் தேவனது வார்த்தையினால் ஒரே விதத்தில் வளருகிறவர்களாயிருக்கிறோம்.

v) தேவன் எல்லா விசுவாசிகளையும் ஒரே விதமான அன்பினால் அன்புகூறுகிறவராய் இருக்கிறார். அவருடன் தற்காலிக ஐக்கியத்தில் இருந்த போதிலும், இல்லாது இருந்த போதிலும் அவரது அன்பில் எவ்வித மாற்றமும் இல்லை.

4. கிருபையின் அடிப்படையில் ஐக்கியம் (வச 7).

அ] கிறிஸ்து நம் ஒவ்வொருவரையும் ஏற்றுக்கொண்டது போலவே, விசுவாசிகள் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

ஆ] கிறிஸ்து அவர்களை தேவனது மகிமைக்காக கிருபையில் ஏற்றுக்கொண்டார்.

5. இஸ்ரவேல் மற்றும் சபை இவற்றுக்கிடையே உள்ள வேறுபாட்டினை புறிந்துகொள்ளுதல் (வச 8-12).

அ] கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் கீழ் ஊழியராய் இருந்தார். (வச. 8).

i) நியாயப்பிரமாணத்தின் விவரணையின் கீழ் கிறிஸ்து பிறந்தார், ஊழியம் செய்தார், மரித்தார், உயிர்த்தெழுந்து, பரலோகம் ஏறிச்சென்றார்.

ii) இதினிமித்தம் இயேசு கூறிய (மத். 16, மற்றும் யோவான் 14-17 தவிர்த்து) அனைத்தும் மோசேயின் பிரமாணத்தை பற்றியதாய் இருந்தது. இஸ்ரவேலருக்கு அளிக்கப்பட்ட, நிபந்தனையற்ற நான்கு உடன்படிக்கைகளை உறுதிபடுத்துகிறதா யும் இருந்தது. எதிர்காலத்தில் மேசியா அவர்களது இராஜாவாய் இருப்பார் என்பதும் அதில் அடங்கும். சில அடிப்படைகள் அவர் அளித்தது, கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறைக்காய் நிரூபங்களில் திரும்ப எடுத்து கூறப்பட்டுள்ளது.

ஆ] நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் முன்னர் (வச. 9) யூதர்களுக்கு ஆபிரகாமின் உடன் படிக்கை, மற்றும் பாலஸ்தீனிய உடன்படிக்கை வாக்குத்தத்தமாய் இருந்தன, இவைகள் புறஜாதியார் தேவனது இரக்கைத்தை மகிமைபடுத்துவதற்காய் இருந்தன.

இ] பவுல் மேற்கோள் காட்டும் இடத்தில்(சங். 18:49; உபாகமம் 32:43; சங்.117; ஏசா 11:1-10). இயேசுக்கிறிஸ்து ஈசாயின் வேரிலிருந்து தோன்றிய தாவீதின் வம்சத்தில் பிறந்த இயேசுக்கிறிஸ்து புறஜாதியாரையும் கூட ஆழுவார் என குறிப்பிடுகிறார்.

6. செயல்பட வைக்கும் விசுவாசம் (வச 13).

அ] நம்பிக்கையின் தேவன் விசுவாசியை சந்தோஷத்தினாலும் சமாதானத்தாலும் விசுவாசிப்பதன் மூலம் நிரப்புகிறவராய் இருக்கிறார். விசுவாசமே மார்க்கமாய் இருக்கிறது.

ஆ] விசுவாசமானது இரட்சிப்பு, ஐக்கியத்தைத் திரும்பப்பெறுதல், பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுதல், உபதேசம், வாக்குத்தத்தங்கள் போன்றவற்றை செயல்படுத்துவதற்கு உறுதுணையாய் இருக்கிறது.

7. கிருபையின் செயல்பாட்டை அறிவது: (வச 14,15).

அ] முதிர்ந்த விசுவாசியானவன் தான் பெற்ற அனைத்தும் தேவனது கிருபையால் பெற்றுள்ளான் என்பதையும், மற்றும் அவன் செயல்படுவது கிருபையின் அடிப்படையில் என்பதையும் உணருகிறவனாய் இருக்கிறான்.

ஆ] கிருபையானது ஒருவிசுவாசியில் வெளிப்படும் விதம்:

i) இரட்சிப்பில் (எபேசியர் 2:8,9).
ii) ஜெபத்தில் (எபிரெயர் 4:16)
iii) பாடுகளில் (2 கொரி. 12:9).
iv) வல்லமையை விடுவிக்கிறதில் (2 தீமோத்தேயு 2:1).
v) வளர்ச்சி மற்றும் நிலையானத் தன்மை (2 பேதுரு 3:18).
vi) திரும்ப சேர்க்கப்படுதல் மற்றும் ஐக்கியம் (எபிரெயர் 12:15; 1 யோவான் 1:9).
vii) கிரியைகளைச் செயல்படுத்துதல் (1 கொரி 15:10; 2 கொரி. 6:1; 9:9).
viii) கிறிஸ்தவ வாழ்க்கை முறை (2 கொரி. 1:12, எபிரெயர் 12:28).

**கிறிஸ்தவ வாழ்க்கை - மனநிலை சார்ந்த செயல்பாடுகள்: [CHRISTIAN LIFE – MENTAL ATTITUDE]**

1. செயல்பாடுகள் அல்லது மனநிலை சார்ந்த செயல்பாடுகள் என்பதன் விளக்கம்: மனதானது எதன் அடிப்படையில் செயல்படுகிறதாய் இருக்கிறது, ஆன்மீக ரீதியில் சிந்தித்து எவ்வகையில் செயல்படுகிறதாய் இருக்கிறது என்பதாகும்.

2. ஒவ்வொருவிசுவாசியும், மனுஷீக மற்றும் தெய்வீக கண்ணோட்டத்தைக் குறித்து, உள்ளான முறண்பாடுகளைச் சந்திக்கிறவர்களாய் இருக்கின்றனர். மனித சரித்திரத்தில், மனிதன் வீழ்ச்சிக்குப் பின்னர் இவ்விரு மனநிலைகளும் மனுக்குலத்தில் ஒரு பெரிய யுத்தத்தையே உருவாக்கி வருகிறது. (ஏசாயா 55:7-9).

3. நாம் நமது ஆத்துமாவில் தெய்வீகக் கண்ணோட்டத்துடன் இருக்க கட்டளைப் பெற்றுள்ளோம். சாத்தானுடைய கண்ணோட்டத்தை தவிர்க்க கேட்டுக்கொள்ளப்படுகிறோம். (உலகப்பிரகாரமான கண்ணோட்டத்தையும் தவிர்த்தல் வேண்டும்). 2 கொரி. 1:7, 10:5. (உபதேசங்கள் மூலம் இவ்வகை தெய்வீக கண்ணோட்டத்தினை பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம்).

4. ஒருவரது மனப்பான்மை ஒருவரின் குணாதிசயத்தையும் அவரது வாழ்க்கையையும் தீர்மானிக்கிறதாய் இருக்கிறது - நீ எதை சிந்திக்கிறாயோ, நீ அதைப்போலவே இருக்கிறாய். (நீதிமொழிகள் 23:7).

5. கிறிஸ்தவர்களாகிய நாம், கிறிஸ்துவில் இருந்த சிந்தை நம்மிலும் இருக்குமாறு கட்டளை பெற்றுள்ளோம். நமது வாழ்விற்கான தேவனது திட்டமானது, புதுவிதமான மனப்பான்மையை நமது ஆத்துமாவில் அளிக்கிறதாய் இருக்கிறது. அது மனித கண்ணோட்டம், பாவ மனப்பான்மை போன்றவற்றை அளிக்காது, புதிய கண்ணோட்டத்தை நமக்களிக்கிறதாய் இருக்கிறது. (1கொரி. 2:16, 2 கொரி. 10:4-5 ரோமர். 12:2, பிலி. 2:5, 2 தீமோ. 1:7)

6. வேதாகமம் போதிப்பதைப் போன்றே எல்லா விசுவாசிகளும் சபை ஐக்கியத்தில் பங்குபெறுதல் வேண்டும். பிலிப்பியர் 2:2.

7. வேதாகமத்தைக் குறித்த அறிவு [கிறிஸ்துவின் சிந்தை] 1 கொரி. 2:16. மற்றும் பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள் விசுவாசியின் சிந்தை யானது இருத்தல் வேண்டும். தெய்வீகக் கண்ணோட்டம் உடையவராய் இருத்தல் அவசியம். (ரோமர் 12:2).

8. சரியான மனநிலையானது மனமகிழ்ச்சியை உண்டாக்குகிறதாய் இருக்கிறது. (பிலிப்பியர் 2:2), தன்நம்பிக்கையை உருவாக்குகிறது (2 கொரி.5:1,6,8), நிலையானவற்றை உண்டாக்குகிறது (ஏசாயா 26:3-4, பிலிப்பியர் 4:7, 2 தெசலோனிக்கேயர் 2:2), மனதாரக் கொடுப்பதை உருவாக்குகிறது. (2 கொரி. 9:7), அன்பை உண்டாக்குகிறது. (1 கொரி. 13:5)

9. மனிதக்கண்ணோட்டம் உலகப்பிரகாமானது என அழைக்கப்படுகிறது. (ரோமர் 12:2, கொலோசெயர் 3:2).

10. சாத்தானின் கொள்கைகளை பின்பற்றுதல் தீமையாய் இருக்கிறது. மத்தேயு 9:4, கலாத்தியர் 6:3. மன நிலை சார்ந்த பாவங்கள் சுயமான துயரங்களை தூண்டுகிறதாய் இருக்கிறது.. (நீதிமொழிகள் 15:13).

11. தெளிவான சிந்தை இல்லாத மனநிலையில், விசுவாசியின் மனநிலையானது முறண்பாடுகள் நிறைந்து காணப்படுகிறது. ஏசாயா 55:6-9, யாக்கோபு 1:7-8.

12. மெய்யான குணாதிசயத்தின் நிலைத்தன்மையானது, இவ்வகையில் மட்டும் வருகிறதாய் இருக்கிறது. பிலிப்பியர் 4:7, 2 தெசலோனிக்கேயர் 2:2.

13. கொடுப்பது மனநிலையைச் சார்ந்ததாய் இருக்கிறது. 2 கொரி. 9:7. அன்பு மனநிலையைச் சார்ந்ததாய் இருக்கிறது. . 1 கொரி. 13: உபாகமம் 6:5,10:12.

14. உலகப்பிரகாரமாய் இருப்பது மனநிலையைச் சார்ந்ததாய் இருக்கிறது. அது கிருபையற்ற சிந்தையாய் இருக்கிறது, அது தேவனுடைய திட்டத்திற்கு எதிராய் செயல்படுகிறது. கொலோசெயர். 3:2.

15. சேவையில் தன்னம்பிக்கை, பொதுவான வாழ்க்கை முறையானது "தெய்வீக கண்ணோட்டத்தை" அளிப்பதன் மூலம், கீழ்க்கண்ட முன்னேற்றங்களை அளிக்கிறது.
[அ] வாழ்வில் நிலையானத் தன்மையை அளிக்கிறது. யாக்கோபு 1:8.
[ஆ] ஆத்துமாவில் செழிப்பை அளிக்கிறது. பிலிப்பியர் 4:7.
[இ] கர்த்தருக்காய் கொடுக்கச் செய்கிறது. 2 கொரி. 9:7
[ஈ] உலகப்பிரகாரமாய் வாழ்வதைத் தவிர்த்து, ஆவிக்குரிய வாழ்க்கை செய்ய வைக்கிறது. ரோமர் 12:2, கொலோசெயர் 3:2.
[உ] தீமையாய் இருப்பதைத் தவிர்த்து சுத்தமாய் வாழச்செய்கிறது. மத்தேயு 9:4
[ஊ] திமிரற்ற [பெருமையற்ற] வாழ்வு செய்யவைக்கிறது. கலாத்தியர் 6:1-5.
[எ] உள்ளான அழகை ஏற்படுத்துகிறது. 1 தீமோத்தேயு 2:9,10,15.

**கிறிஸ்தவ வாழ்க்கை -- இவ்வுலகத்திற்குரியர்கள் அல்ல.**

1. ஒரு விசுவாசி வித்தியாசமான ஸ்தானத்தைப் பெற்றவராய் இருக்கிறார். (1 கொரிந்தியர் 15:22). ஆதாமுக்குள் எல்லோரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லோரும் உயிருள்ளோராய் இருக்கிறார்கள்.

2. ஒரு விசுவாசியின் பிறப்பு வித்தியாசமானதாய் இருக்கிறது. (யோவான் 3:5-7, தீத்து 3:5). இயற்கையான சந்ததி மற்றும் திரும்ப உருவாக்கப்படுதல் [Natural generation versus regeneration]. எல்லோரும் இவ்வுலகில் பிறந்துள்ளனர். விசுவாசிகள் மட்டும் மறுபடியும் பிறக்கிறவர்களாய் இருக்கின்றனர். இது பிசாசுக்குரிய உலகின்று வெளியே உள்ள அனுபவத்தைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

3. ஒரு விசுவாசி வித்தியாசமான சேவையை உடையவராய் இருக்கிறார். அவிசுவாசி அவர்களது பிதாவாகிய பிசாசானாவனைச் சேவிக்கிறவர்களாய்

இருக்கின்றனர். (யோவான் 8:44) விசுவாசிகள் கிறிஸ்துவை சேவிக்கிறவர்களாய் இருக்கின்றனர் (யோவான் 13:16, 15:20)

4. ஒரு விசுவாசி வித்தியாசமான நோக்கமுடையவராய் இருக்கிறார். (1 கொரி. 6:19, 20, ரோமர் 15:6). உலக அமைப்பில் ஒரு அவிசுவாசி சுய மனநிறைவைத் தேடுகிறவராய் இருக்கிறார். விசுவாசியோ தேவனது மகிமையின் கீழ் அமைந்து வாழ்கிறார்.

5. ஒரு விசுவாசி வித்தியாசமான வல்லமை உடையவராய் இருக்கிறார். (கலாத்தியர் 5:16). மாம்சீகத்தின் சக்தி மற்றும் அதற்கு எதராக பரிசுத்த ஆவியானவரின் வல்லமை ஒப்பிடப்படுகிறது. சாத்தானின் உபதேசம் மற்றும் அதற்கு எதிராக தேவனது வார்த்தையாகிய சத்திய வேதம் ஒப்பிடப்படுகிறது.

6. ஒரு விசுவாசி வித்தியாசமான வாழும் வழிதனை உடையவராய் இருக்கிறார். (எபேசியர் 4:22, 2:13). உலக வழியில் வாழும் வாழ்க்கையானது மதம் மற்றும் சமயக் கோட்பாடுகளை தழுவி வாழும் வாழ்க்கையாய் இருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கைக்குரிய வழியானது இயற்கைக்கு அப்பாற்பட்ட வாழ்க்கையாய் இருக்கிறது.

7. நாம் வித்தியாசமான முடிவை உடையவர்களாய் இருக்கிறோம். (யோவான் 3:36, 3:18). இவ்வுலகமானது பிசாசுக்கும் அவனது தூதர்களுக்கும் ஆயத்தமாக்கப்பட்டுள்ள அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலுக்கு நேராய் முன்னேறிக்கொண்டு இருக்கிறது. விசுவாசியானவன் பரலோகிற்கு நேராய் முன்னேறிக்கொண்டு இருக்கிறார்.

## கிறிஸ்தவாழ்க்கை -- கீழ்ப்படிதல்

1. பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம் (1 சாமுவேல் 15:22; நீதிமொழிகள் 21:3; 28:9). தேவனது சித்தித்தில் இல்லாது எப்படிப்பட்ட "ஆராதணை" செய்தாலும் அது தேவனால் ஏற்றுக்கொள்ளப்படாது.

2. கீழ்ப்படிதல் என்பது நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றாய் இருக்கிறது. கீழ்ப்படிதலின் அடிப்படைப் பயிற்சி குழந்தை பருவத்தில் இருந்து துவங்க வேண்டியதாய் இருக்கிறது. in (யாத்திராகமம் 20:12 and உபாகமம் 5:16), "உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக." (நீதிமொழிகள் 4:3,4; 22:6; 29:15-17; எபிரெயர் 5:8).

3. பிள்ளைகளுக்கு கீழ்ப்படிதலை அன்பு கூறும் செயலாய் கற்றுக்கொடுத்தல் வேண்டும் (நீதிமொழிகள் 3:12; 19:18; 23:13-14).

4. நமக்கு மேல் உள்ள அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல் வேண்டும் (யாத்திராகமம் 20:12; 22:28; லேவி. 19:3; உபாகமம் 5:16; ரோமர் 13:1-5; எபேசியர் 6:1-5; கொலோசெயர் 3:18-22; தீத்து 3:1).

5. அதிகாரத்தில் உள்ளவர்களை தேவன் அந்த ஸ்தானத்தில் நியமித்துள்ளார். (ரோமர் 13:1).

6. அதிகாரத்தில் உள்ளவர்களுக்குக் கீழ்ப்படிதல், தேவனுக்குக் கீழ்ப்படிதலைக் காட்டுகிறது. (நீதிமொழிகள் 24:21; எபேசியர் 6:7; கொலோசெயர் 3:23-24; ரோமர். 13:5).

7. அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு கீழ்ப்படியாது இருத்தல் தேவனுக்கு கீழ்படியாதிருத்தலைக் காட்டுகிறது. (ரோமர் 1:30; 13:2).

8. இருப்பினும் அதிகாரிகள் தேவனுக்கு விரோதமான காரியங்களுக்கு கீழ்ப்படிய வற்புறுத்தும் போது, அவற்றிற்கு கீழ்ப்படிய மறுத்தல் வேண்டும். (அப்போஸ்தலர் 4:19; 5:40-42).

9. ஐந்தாவது கட்டளை (யாத்திராகமம் 20:12; உபாகமம் 5:16) இக்கட்டளை மட்டுமே வாக்குத்தத்துடன் அமைந்துள்ளது (நீதிமொழிகள் 10:17; எபேசியர் 6:1-3). சமுதாயத்தில் உள்ள சமூக வாழ்வில் மட்டுமே ஜனங்கள் கீழ்ப்படிந்து வாழ சாத்தியம் அமைந்து இருக்கிறது.

10. இந்தக்கட்டளையானது புறக்கணிக்கப்பட்டு, குடும்பத்தில் உள்ள அதிகாரம் மறுதலிக்கப் படுமேயானால், சமுதாயமானது சீக்கிரத்தில் அராஜகத்தில் நழுவிச்செல்ல வேண்டியதாய் இருக்கும். (ஏசாயா 3:12; நீதிமொழிகள் 29:21; 30:21-23; ரோமர் 1:30).

**CHRISTIAN LIFE – PRAYER**

## கிறிஸ்தவ வாழ்க்கை - ஜெபம்

1. தேவன் பராமரிப்பு அளிப்பவர் என்பதை நாம் அறிந்து இருக்கலாம், ஆனால் நாம் அவருடன் சரியான தொடர்பு ஏற்படுத்திக்கொண்டால்தான் அவரின் பராமரிப்பை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

a) ஜெபம் என்பது ஒரு விசுவாசி தேவனுடன் தொடர்பு கொள்ளும் வழிமுறையாய் இருக்கிறது.

b) பரிசுத்த வேதாகமம் தேவன் மனிதனுடன் தொடர்புகொள்ளும் வழியாய் இருக்கிறது.

2. ஜெபத்தில் அடங்கியுள்ள வாக்குத்தத்தங்கள்:

- a) மத்தேயு 21:22 விசுவாசத்துடன் நாம் கேட்கவேண்டும்.
- b) மத்தேயு 18:19 குழுவாய் ஜெபித்தலின் வல்லமை.
- c) சங்கீதம் 116:1,2. தேவன் எப்பொழுதும் நமது ஜெபத்தை கேட்கிறவராய் இருக்கிறார்.
- d) ஏசாயா 65:24 நாம் ஜெபிக்கும்பொழுது தேவன் பதில் அளிப்பவராய் இருக்கிறார்.
- e) மத்தேயு 7:7 நாம் ஜெபிக்க கட்டளை பெற்று இருக்கிறோம்.
- f) யோவான் 14:13-14 அவரது நாமத்தினால் நாம் எதை வேண்டுமானாலும் கேட்கலாம்.
- g) பிலிப்பியர் 4:6 ஜெபம் நன்றி செலுத்துதலுடன் இருக்க வேண்டும்.
- h) 1 தெசலோனிக்கேயர் 5:17 நாம் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும்.
- i) எபிரெயர் 4:16 நாம் தைரியமாய் கிருபாசனத்தண்டைக்கு வர முடியும்.

3. ஜெபம் நான்கு பகுப்பாய் பிரிக்கப்படுகிறது:

- a) பாவங்களை அறிக்கை செய்தல் (1 யோவான்1:9).
- b) நன்றி செலுத்துதல் (1 தெசலோனிக்கேயர் 5:18).
- c) மற்றவர்களுக்காய் பரிந்து பேசுதல் (எபேசியர் 6:18).
- d) ஒருவரின் சுயத்தேவைகளுக்காய் விண்ணப்பித்தல் (எபிரெயர் 4:16).

4. ஜெபத்தின் வல்லமை:

a) தனிப்பட்ட நிலையில் - எலியாவும் சர்வாங்க தகனபலியும். (1 இராஜாக்கள்18:36-39).

b) கூடி ஜெபித்த பொழுது - சிறைச்சாலையிலிருந்து பேதுரு விடுவிக்கப்படுதல். (அப்போஸ்தலர்12:1-18).

5. பதிலளிக்க இயலாத ஒரு ஜெபம், நமது கர்த்தர் சிலுவையில் ஜெபித்த ஜெபம். (சங்கீதம் 22:1-18).

6. ஜெபம் யாரை நோக்கி ஏறெடுக்கபட வேண்டும்?

a) நேரடியாய் பிதாவை நோக்கி ஏறெடுக்கப்பட வேண்டும். - (மத்தேயு 6:5-9).

b) குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் ஏறெடுக்கப்பட வேண்டும். - (எபிரெயர் 7:25).

c) பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் ஏறெடுக்கப்பட வேண்டும்.- (ரோமர் 8:26-27).

குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் நமக்காய் பரிந்து பேசுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

7. ஜெபம், விண்ணப்பம் மற்றும் நமது வாஞ்சை என இரண்டாய் பிரிக்கலாம்.

a) விண்ணப்பம் - நீங்கள் எதைக்கேட்கிறீர்கள்? (உ.ம். ஒரு புதிய வாகனம்)

b) வாஞ்சை - விண்ணப்பத்திற்குப் பின் இருப்பது வாஞ்சையாகும் (உ.ம். மகிழ்ச்சி ஏனென்றால், நீங்கள் புதிய வாகனத்தை பெற்று இருக்கிறீர்கள்)

8. ஜெபம் நான்கு விதங்களில் இணைந்து செல்லக்கூடும்.

a) பதிலளிக்கப்பட்ட விண்ணப்பம் - வாஞ்சைகள் பதிலளிக்கப்படாத நிலை சங்கீதம் 106:15 - யாத்திராகம சந்ததிக்கு காடைகள் அளிக்கப்பட்டது. 1 சாமுவேல் 8:5 - இஸ்ரவேலை ஆழும்படியான ராஜா கொடுக்கப்பட்டது.

b) விண்ணப்பங்கள் பதில் அளிக்கப்படவில்லை - வாஞ்சைகள் பதிலளிக்கப்பட்டன. ஆதியாகமம் 18:23 சோதோம் பாதுக்காக்கப்படுதல். 2 கொரிந்தியர் 12:7 - பவுலின் சரீரத்திலிருந்து முள் அகற்றப்பட ஏறெடுக்கப்பட்ட விண்ணப்பம்.

c) விண்ணப்பங்கள் பதிலளிக்கப்பட்டன - வாஞ்சைகளும் பதில் அளிக்கப்பட்டன. 1 இராஜாக்கள் 18:36-37 - எலியா பலிசெலுத்த அக்கினிக்காய் விண்ணப்பித்தல். லூக்கா 23:42 சிலுவையில் தொங்கின கள்ளனின் ஜெபம். இவ்வகை ஜெபமே பூரண ஜெபமாய் கருதப்படுகிறது.

d) விண்ணப்பங்கள் பதில் அளிக்கப்படவில்லை - வாஞ்சைகளும் பதிலளிக்கப்படவில்லை இவ்வறு பதில் இல்லாமைக்கு ஒன்பது முக்கியமான காரணங்கள் உண்டு.

9. பதில் அளிக்கப்படாத ஜெபத்திற்கான காரணங்கள்:

a) விசுவாசக்குறைவு. (மத்தேயு21:22).
b) சுய விருப்பங்களுக்காய் ஜெபித்தல் (யாக்கோபு4:3).
c) அறிக்கை செய்யப்படாத பாவங்கள் (சங்கீதம் 66:18).
d) மனதுருக்கமற்ற நிலை (நீதிமொழிகள்21:13).
e) பெருமை மற்றும் சுய நீதி (யோபு 35:12-13).
f) ஆவியானவரின் நிறைவு இல்லாமை (எபேசியர்6:18).
g) கீழ்ப்படியாமை (1 யோவான் 3:22).
h) தெய்வீக சித்தத்தில் இல்லாது இருப்பது (1 யோவான் 5:14).

பதிலற்ற ஜெபத்திற்கு பொதுவான காரணங்கள், ஏதோ ஒரு வகையில் பாவம் வாழ்வில் இருப்பதாகும், அறிந்த பாவங்களை 1 யோவான்1:9ன் படி, அறிக்கை செய்வதன் மூலம் இப்பிரச்சனைக்கு தீர்வு காண இயலும்.

10. பரிந்து பேசும் ஜெபம்:

இப்படிப்பட்ட ஜெபம், ஜெபத்தின் நான்கு பகுப்பில் ஒன்றாய் விளங்குகிறது.

1. பாவங்களை அறிக்கை செய்தல்
2. நன்றிசெலுத்துதல் 3. பரிந்து பேசி ஜெபித்தல் 4. சுயத்தேவைகளுக்காய் ஜெபித்தல்.

a) பரிந்து பேசும் ஜெபத்தின் வல்லமை 1 இராஜக்கள்18:42-46ல் போதிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படை சித்தாந்தத்தை யாக்கோபு 5:16-18ல் காண்கிறோம்.

b) ஜெபத்தில் மேற்கொள்ளும் வல்லமையை அப்போஸ்தலர் 12 ம் அதிகாரத்தில் காட்டப்பட்டுள்ளது.

c) அவிசுவசிக்காய் பரிந்து பேசும் ஜெபம் (ரோமர் 10:1).

d) அறிப்படாத விசுவாசிக்காய் பரிந்துபேசும் ஜெபம் (கொலோசெயர்1:3-11).

e) அறியப்பட்டுள்ள விசுவாசிக்காய் பரிந்துபேசும் ஜெபம் (எபேசியர்1:15-23).

11. உண்மையான கர்த்தரின் ஜெபம். யோவான் 17 ம் அதி.

a) உம்முடைய குமாரன் உம்மை மகிமைபடுத்தும்படி நீர் உம்முடைய குமாரனை மகிமைபபடுத்தும் (வச. 2 cfபிலிப்பியர் 2:9-11).

b) உலகம் உண்டாகிறதற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்தில் மகிமைப் படுத்தும்.(வச. 5)

c) உலகம் மற்றும் தீமை இவைகளினின்று விசுவாசிகள் பாதுகாக்கப்பட.(வச.11, 15)

d) விசுவாசிகளின் பரிசுத்தத்திற்காக (வச. 17)

e) விசுவாசிகளின் ஆவிக்குரிய ஒற்றுமைக்காக (வச. 21)

f) உலகம் விசுவாசிக்கத்தக்கதாய் (வச. 21).

g) விசுவாசிகள் பரலோகில் அவருடனிருந்து அவரைக்காணவும், அவரது மகிமையை பகிர்ந்து கொள்ளவும் (வச. 24)

**கிறிஸ்தவ வாழ்க்கை -- முதலுரிமை -- சிலுவை -- உங்களது சிலுவையை எடுத்துக்கொள்ளுதல்**:

1. வேதபகுதி -- மத்தேயு 10:38. "**தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல.**"

2. மத்தேயுவில் கூறப்படும், தன் சிலுவை என்பதன் பொருள் என்ன?

[அ] இதுவே சிலுவைக் குறித்து மத்தேயுவில் முதன் முறையாய் குறிப்பிடும் குறிப்பாய் இருக்கிறது.

[ஆ] இது இயேசு கிறிஸ்துவின் சிலுவை குறித்து குறிப்பிட வில்லை. மாறாக ரோமர் ஒருவரை சிலுவையில் அறையும் பழக்கவழக்கத்தினை குறிப்பிடுகிறது. ரோமர்கள் ஆயிரக்கணக்கான யூதர்களை யூதேயாவில் சிலுவையில் அறைந்து படுகொலை செய்தனர்.

[இ] ஒருவர் மரணதண்டனை பெறும்பொழுது தன் சிலுவையை சுமந்து சென்று அதில் மரண தண்டனை பெறுவது சாதாரணமான நிகழ்வாய் இருந்தது. நியாயத்தீர்ப்பு பெற்ற நபர் தனது சிலுவையை சுமந்து, தண்டனை பெறுபவராய், எல்லாராலும் புறக்கணிக்கப்பட்டு, கிருபையற்ற நிலையில் காணப்படுவர்.

[ஈ] சிலுவையை சுமந்து செல்வது என்பதன் பொருள், கிறிஸ்துவையும், அவரது சிந்தையையும் மேற்கொள்வது என்பதாகும். [1 கொரி. 2:16] எல்லாவற்றிற்கும் முன்பாக, உங்களை சுற்றிலும் உள்ளவர்களால், புறக்கணிக்கப்பட்டு, ஏளனம் செய்யப்படுதலைக் காட்டுகிறது.

3. இயேசு கிறிஸ்து சிலுவை சென்றதினிமித்தம் அவரது குடும்ப உறவானது மிகவும் கொடுமைக்குள்ளானது.

[அ] தனது தாயாகிய மரியாளை இயேசு, யோவானிடம் ஒப்புவித்தார்.

[ஆ] தனது பரலோகத் தந்தையிடமிருந்து உலகத்தாரின் பாவங்களுக்காக அவர் சிலுவையில் நியாயந்தீர்க்கப்பட்ட போது பிரிக்கப்பட்டார்.

4. கிறிஸ்தவ வாழ்க்கை. முதலுரிமை -- தாயையும், தந்தையையும் வெறுத்துவிடல் மத்தேயு 10:37. -- [கீழே காண்க]

**கிறிஸ்தவ வாழ்க்கை. முதலுரிமைகள் -- தாயையும், தந்தையையும் வெறுத்துவிடல்:**

வேதபகுதிகள்:

**லூக்கா 14:26.** "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்க்கமாட்டான்.

**மத்தேயு 10:37.** தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவவன் எனக்குப் பாத்திரன் அல்ல. .

2. லூக்காவில் தோற்றமளிக்கும் பிரச்சனை: -- இயேசுக்கிறிஸ்துவின் சீஷராகும் பொருட்டு, ஒரு நபர் மற்றவர்களை வெறுத்துவிடல் வேண்டும்.

3. மதிப்பீடு செய்தல்:
[அ] இந்த வசனத்தில் காணப்படும் முக்கியமான பிரச்சனை வெறுத்துவிடுதல் என்ற வினைச்சொல் ஆகும்.
[ஆ] "hate" - MISEO "வெறுத்துவிடல்" என்ற சொல், ஒப்பிட்டுப் பார்க்கும் சொல்லாய் பயன்படுத்தப்பட்டுள்ளது, "குறைவாய் அன்புகூறுதல்" "கைவிடுதல்" "குறைவாய் மதிப்பிடல்" போன்ற அர்த்தங்களை இச்சொல் உள்ளடக்கியுள்ளது.
[இ] இதன் வெளிச்சத்தில் ஒரு நபர் கிறிஸ்துவின் சீஷனாய் இருப்பதற்கு, தனது குடும்பத்தையும், தனது ஜீவனையும் கூட வெறுத்து, இயேசு கிறிஸ்துவுக்கு முதன்மையான இடமளித்தல் வேண்டும்.

4. முடிவுரை:

கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒரு நபர், கிறிஸ்துவின் சீஷனாய் இருப்பதற்கு, கர்த்தராகிய இயேசு அவரது வாழ்வில் முதன்மையான இடத்தை வகிக்கிறவராய் இருத்தல் வேண்டும். (கொலோசெயர் 1:18). ஒருவர் வாழ்வில் பாவம் இருக்குமேயானால் அந்நபரில் சுயம் இயேசுவைவிட முக்கியமான இடத்தை மேற்கொள்ளும், இதினிமித்தம் ஒருவர் ஐக்கியத்தைவிட்டு விலகி மாம்சீகமாய் ஜீவிக்கும் விசுவாசி ஒரு சீஷனல்ல.

## கிறிஸ்தவ வாழ்க்கை -- தேவனது குடும்பத்தின் இராஜரீகம்.

1. விளக்கம்:
சபையுகத்தின் அனைத்து விசுவாசிகளும், தனிப்பட்ட இராஜரீக அமைப்புக்குள்ளானவர்களாய் இருக்கின்றனர். வெளி. 1:6. இப்படிப்பட்ட இராஜரீகம் வேதாகம உபதேசத்தின் ஆவிக்குரிய அடிப்படைக் கருத்தாய் இருக்கிறது. ஆரம்ப காலந்தொட்டு, ஒவ்வொரு சந்ததியிலும் புதிய சந்ததி இடம் பெறும்போது, சபையுகத்தில் மட்டும் இந்த சந்ததியானது இத்தகைய நித்திய இராஜரீகத்தைப் பெறுகிறதாய் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

2. சபையுகத்தில் விளங்கி வரும் இராஜரீகத்தின் அடிப்படை:
அ) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் இராஜரீகத்தின் அடிப்படையில் அருளப்படுகிறதாய் இருக்கிறது. அப்போஸ்தலர் 1:5; ரோமர் 6:3,4.
ஆ) சபை யுகத்திற்கு முன்போ அல்லது பின்னரோ ஒரு விசுவாசியும், இரட்சிப்பின் போது, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக்கொள்வது என்பது இயலாத காரியமாய் இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் என்பது இந்த சபை யுகத்தில் மட்டும் நிகழும் பிரத்தியேகமான ஒன்றாய் இருக்கிறது. கொலோசெயர் 1:25,26
இ) ஒவ்வொரு யுகத்தின்போதும், விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரால், கிறிஸ்துவுக்குள் புதுப்பிக்கப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். ஆனால் சபை யுகத்தில் மட்டும் விசுவாசி கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெறுகிறவராய் இருக்கிறார். 1 கொரி. 12:13.

3. ராஜரீகத்திற்கான முன்நிகழ்வு:

அ) மெல்கிசேதேக்கின் இராணுவ அணியின் ஒழுங்கானது, முன்நிகழ்வு மற்றும் அமைப்பை அளிக்கிறதாய் இருக்கிறது. எபிரெயர் 5:6-10.

ஆ) எப்படியிருப்பினும் மெல்கிசேதேக்கு சாலேமின் இராஜாவாவதற்கு இராஜரீகத்தைப்பெற்றிருந்தபோதிலும், இயேசுகிறிஸ்து தாவீதின் வம்சாவழியில் இராஜரீகத்தைப் பெறப் பிறந்தவராய் இருக்கிறார். மத்தேயு 1.
இ) ஆவியானவரின் ஞானஸ்நானம் மூலம், ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவுடன் இணைக்கப்படுகிறவர்களாகிறார்கள், இதினிமித்தம் விசுவாசிகள் கிறிஸ்துவின் சரீரம் என அறியப்படுகிறார்கள். கொலோசெயர். 1:18
ஈ) சபையுகத்தில் ஒவ்வொரு விசுவாசியும், கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாகி, நித்தியமாகவும், தனிப்பட்ட நிலையிலும் இராஜாதி இராஜாவுடன் சம்பந்தப்படுகிறவர்களாகிறார்கள். கலாத்தியர் 3:26-29.
உ) கிறிஸ்துவின் சரீரம் நிறைவடையும் போது, சபை யுகமானது நிறைவுக்கு வருகிறதாய் இருந்து, உயிர்த்தெழுதலில் அல்லது சபை எடுத்துக்கொள்ளப்படுவதில் முடிவடைகிறதாய் இருக்கிறது. மத்தேயு 25:1-13; I தெசலோனிக்கேயர் 4:16-18.
ஊ) உபத்திரகாலத்தில் சபையாகிய மணவாட்டியானவள், சத்துருக்களைப் "பாதபடியாக்க" ஆயத்தமாக்கப்படுகிறாள். கிறிஸ்துவின் இரண்டாம் கட்ட வெற்றியைக்கொண்டாட அவரது அனைத்து விரோதிகளும் அவர் பாதபடியாக்கிபோடப்படுகின்றனர். எபிரெயர் 1:13.

4. இராஜரீகத்திற்கான அடையாளம்:
அ) இராஜரீகத்தின் அடையாளமானது ஒரு முன்நிகழ்வாய் இராது, உலக அளவில் பரிசுத்த ஆவியானவரின் வாசம் செய்தலாய் இருக்கிறது. 1 கொரிந்தியர் 6:19-20.
ஆ) பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்தலின் நோக்கம் இயேசு கிறிஸ்துவை மகிமைபடுத்துவதாய் இருக்கிறது. யோவான் 7:37-39.

5. இராஜரீகத்தின் பாதுகாப்பு.
அ) பரிசுத்த ஆவியானவரின் முத்திரையிடும் ஊழியமானது, ஒருவிசுவாசியின் நித்தியபாதுகாப்பை உறுதி செய்கிறதாய் இருக்கிறது. எபே. 1:13-14.
ஆ) ஸ்தானம் சார்ந்த பரிசுத்தமாக்கப்படுதல், ஒவ்வொரு விசுவாசியையும் அரண்மனையில் (பரலோகில்) எந்நாளும் தாபரிக்கச் செய்கிறது. எபே. 1:3,4,11.

6. இராஜரீகத்தின் செயல்பாடு:
அ) ஒரு விசுவாசி ஆவிக்குரிய முதிர்ச்சியை நோக்கமாய் கொண்டு, இராஜரீக அணிவகுப்பைப் பெறும்போதும், தேவதூதர்களின் முறண்ப்பாட்டினால் ஒழுங்கு சார்ந்த ஜெயத்தை பெற்றுக்கொள்வதன் மூலமும் முன்னேறிச் செல்லுதல் வேண்டும்.

ஆ) ஒரு விசுவாசி இராஜரீக அந்தஸ்தை நிறைவேற்றி, புதுமையான ஆசாரியத்துவத்தை அதில் முன்மாதிரியாய் செயல்படுத்துதல் வேண்டும். எபிரெயர் 7-13.

7. எதிர்கால இராஜரீகம்.
கிறிஸ்துவின் சரீரத்தில், ஒரு அங்கமாய் இருப்பவர்களும், இராஜரீக ஆசாரிய அங்கம் வகிப்போரும், (I பேதுரு 2:9), சபை யுகத்தில் உள்ள அனைத்து விசுவாசிகளும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவருடன் கடந்து வந்து, சாத்தானை எதிர்க்கும் போரில் ஈடுபட்டு, முறையான வெற்றியை அடைவர். அதைத்தொடர்ந்துள்ள கிறிஸ்துவின் ஆயிரம் வருட அரசாட்சியிலும் பங்கடைவர். I தெசலோனிக்கேயர் 3:13; வெளி. 5:10.

## <u>கிறிஸ்தவ வாழ்க்கை -- சேவித்தல்</u>

1. நமது வாழ் நாள் முழுவதும் நம்மை அற்பணித்து தேவனை சேவிப்பது நமது கடமையாய் இருக்கிறது. (ரோமர் 12:1).

2. அவரை சேவிப்பதில் முழுமனது மிகவும் அவசியமாய் இருக்கிறது. நியாதிபதிகள் 5:2, 8:25, ஏசாயா 1:19, 2 கொரிந்தியர் 8:3.

3. பெரிய காரியங்களில் ஆற்றப்படும் சேவை, சிறிய காரியங்களில் உள்ள உண்மையைப் பொறுத்ததாய் இருக்கிறது.

4. ஒரேவிதமான வாழ்வும், நெருக்கங்களும் சரியான மனப்பான்மையுடன் உருமாற்றமடையச்செய்யும் தருணங்களாய் இருக்கின்றன. (மத்தேயு 6:33).

5. நாம் செய்யும் ஒவ்வொன்றையும் கர்த்தருக்காய் செய்ய வேண்டும். (கொலோசெயர் 3:17).

6. கிறிஸ்துவுக்கு செய்யப்படும் சேவையானது, தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதாயும், மனிதரால் அங்கீகரிக்கப்படுவதாயும் இருக்கவேண்டும். (ரோமர் 14:18).

7. நமது கிரியைகள் நிறைவேற்றி முடிக்கப்படக்கூடியதாய் இருக்கவேண்டும். யோவான் 4:34, 17:4, அப்போஸ்தலர் 20:24, 2 தீமோத்தேயு 4:7.

8. கிறிஸ்துவின் முன்மாதிரி. மத்தேயு 20:28, லூக்கா 22:27, பிலிப்பியர் 2:7.

9. நமது சேவையின் தன்மைகள்:
எதிர்பார்க்கப்படுகிறது எபிரெயர் 12:28.
உடனடியாய் செயலாற்றப்படவேண்டும். மத்தேயு 21:28.
மிகுதியாய் இருக்கிறது 1 கொரிந்தியர் 15:58.
தகுதியைப்பொருத்து இருக்கிறது. மத்தேயு 25:22, லூக்கா 12:48.
தேவனோடு ஒத்துழைப்பதாய் இருக்கிறது. 2 கொரிந்தியர் 6:1.
தனிப்பட்டநிலையில் இருத்தல் வேண்டும் (லூக்கா 16:13).
ஆவியின் வல்லமையில் இருக்கவேண்டும். (ரோமர் 1:9).
தெய்வபயத்துடன் எடுத்துக்கொள்ளவேண்டும். (எபிரெயர் 12:28).
அன்பினால் ஏவப்படவேண்டும். (கலாத்தியர். 5:13).

10. சேவிப்பது என்பது:
கிறிஸ்துவைப் பின்பற்றுவது. (யோவான் 12:26).
அவருக்காய் எல்லா கிறிஸ்தவர்களும் சேவை செய்கின்றனர். (கொலோ. 3;24).
சேவை தேவனுக்கு செய்வதாய் இருக்கிறது. (அப்போஸ்தலர் 27:23).

11. சேவிப்பதற்கு அவசியமானவைகள்:
விக்கிரகங்களைவிட்டு விலகியிருத்தல் (1 தெசலோனிக்கேயர். 1:9).
உபவாசித்தலும், ஜெபமும் (லூக்கா 2:37).
தேவ வசனத்தைப்போதிப்பது (அப்போஸ்தலர் 6:1-4).

12. சேவையின் ஆதாயங்கள்:
தேவனை மகிமைப்பதுத்துகிறது மத்தேயு 5:16, யோவான் 15:8.
வாழ்வில் பெருக்கத்தை ஏற்படுத்துகிறது 1 தீமோத்தேயு 6:18-19.
பிரதிபலிக்கும் முன்மாதிரியை கொடுக்கிறது தீத்து 2:7.
மற்றவர்களின் பணியை ஊக்குவிக்கிறது. எபிரெயர் 10:24.
பிறர்நலத்தில் அக்கரை கொள்ளச்செய்கிறது லூக்கா 10:36-37.
வாழ்வின் பாரங்களை இலகுவாக்குகிறது கலாத்தியர் 6:2,16.
அன்பை நிலைநாட்டுகிறது யோவான் 21:15-17.
விசுவாசத்தை நிலைநாட்டுகிறது. யாக்கோபு 2:17-18, 1 பேதுரு 2:12.
கிறிஸ்துவைப்போன்றது. யோவான் 13:12-15.

13. சேவகனின் முன்மாதிரி: (ஆதியாகமம் 24).

தன் எஜமானின் சொல்தவறாது செயல்படுதல்.(வச.2-9)நாம் தேவனுக்குக் காத்திருக்கவேண்டும், அவரது நேரத்திற்கு முந்திக்கொள்ளக்கூடாது.

எஜமான் அனுப்பிய இடத்திற்குச் சென்றான். (வச.4,10).பூகோள ரீதியாக தேவனுடைய சித்தத்தில் இருக்கவேண்டும்.

எஜமான் சொன்னதை செய்தான். செயலாற்றும்படி ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவன் பணியை வைத்திருக்கிறார், நமது பணிக்குரிய பகுதியில் கவனம் செலுத்த வேண்டும். வழிவிலகி செல்லக்கூடாது.

அவன் ஜெபத்துடனும், நன்றியுடனும் காணப்பட்டான். நாம் எப்பொழுதும் நம் வல்லமை எங்கிருந்து வருகிறது என உணர்ந்துகொள்ளுதல் வேண்டும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், செழிப்பையும் அடையும்போது பெருமை கொள்ளக்கூடாது.

அவன் தொடர்ந்து செயல்படுகிறதில் கவனமுள்ளவனாய் இருந்தான். (வச.17-18, 21).நாம் சுவிஷேசவேலையில் கவனமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். (ரோமர் 1:14-16).

தன்னைக்குறித்து எதையும் பேசாமல் தன் எஜமானனைக்குறித்து பேசினான். நாம் என்னவாய் இருக்கிறோம் நாம் யாராய் இருக்கிறோம் என்பது முக்கியமல்ல, கிறிஸ்து என்னவாய் இருக்கிறார் அவர் யார் என்பதே மிகமுக்கியமானதாய் இருக்கிறது.

உண்மையான காரியத்தைக்கூறி சரியான முடிவெடுத்தான். (வச.49)நாம் சுவிஷேசத்தையும், மற்ற உபதேசங்களையும் தெளிவாய் அறிவித்து, விளைவுகளை எதிர்பார்க்கவேண்டும்.

**கிறிஸ்தவ வாழ்க்கை -- உறுதி நிலை: [CHRISTIAN LIFE – STABILITY].**

1. தேவன் நம்மை காக்கவும் மற்றும் ஆசீர்வதிக்கவும் வல்லவராய் இருக்கிறார். (எபேசியர் 3:20, எபிரெயர் 7:25).

2. தேவனது வார்த்தையில் நாம் வளரும்போதும், தேவனை அறிகிறதினாலும் நம்மில் உறுதி நிலை வருகிறது. முதிர்ச்சியானது அதனுடன் உறுதி நிலையை கொண்டுவருகிறது. (2 பேதுரு 3:18, 2 தீமோத்தேயு 1:12).

3. ஒவ்வொரு நெருக்கத்தின் போது, விசுவாச வாழ்வின் உறுதிநிலையானது அசைக்கப்படுகிறதாய் இருக்கிறது, வாழ்வில் உபதேசங்களைக் கைக்கொள்ளாத நிலையில் இது இடம்பெறுகிறதாய் இருக்கிறது. (யாக்கோபு 1:6, எபேசியர்4:14, வெளிப்படுத்தல் 3:8).

4. சாத்தானின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க உறுதி நிலை மிகவும் அவசியமாய் இருக்கிறது. உபதேசமின்றி இருப்பது அபாயத்துக்குரியதாய் இருக்கிறது. நாம் கீழ்க்கண்டவாறு இருக்க எதிர்பார்க்கப்படுகிறோம்.

அ) தேவனது வார்த்தையில் உறுதியாய் நிற்றல் வேண்டும். 1 கொரி. 16:13.

ஆ) நமது சுதந்தரத்தில் உறுதியாய் நிற்றல் வேண்டும். கலாத்தியர் 5:1 cf. ரோமர் 14:1ff, 8:9-13.

இ) ஒரே ஆவியுடன் உறுதியாய் நிற்றல் வேண்டும். (no pettiness) பிலிப்பியர் 1:27.

ஈ) கர்த்தரில் உறுதியாய் நிற்றல் வேண்டும். (in fellowship) பிலிப்பியர் 4:1.

உ) உபதேசத்தில் உறுதியாய் நிற்றல் வேண்டும். 2 தெசலோனிக்கேயர் 2:5, 16,17.

5. பெலமும், உறுதி நிலையும் கர்த்தருடன் நெருங்கிய உறவு கொள்ளும்போது வருகிறதாய் இருக்கிறது. விசுவாசத்தின் மூலம் நாம் நிற்கிறோம். 2 கொரி. 1:24, சங்கீதம் 59:17, 62:7, 144:1.

6. தேவன் தனது விரல் நுனியில், நமக்காய் சர்வ வல்லமையை விளங்கப்பண்ணுகிறவராய் இருக்கிறார். ஏசாயா 59:1.

7. நமது விசுவாசம் இப்படிப்பட்ட வல்லமையினால் நிற்கிறதாய் இருத்தல் அவசியம். இதனால் நாம் காக்கப்பட்டு வருகிறோம், இதில் நாம் நம்பிக்கை உடையவர்களாய் இருக்க வேண்டும். 1 கொரி. 2:5, 1 பேதுரு 1:5, யோவான். 16:33.

8. பரிசுத்த ஆவியானவரின் கிரியை மூலம், நம்மை நிற்கசெய்து வருகிறார், மற்றும் அவரது வார்த்தையினாலும் நம்மை நிற்கச்செய்துவருகிறார். ரோமர் 14:4, யூதா 24.

9. பெலமும், உறுதி நிலையும் நமது வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் தாக்கத்தாலும், வேதவசனங்களாலும் அவற்றை விசுவாசித்து கைக்கொள்வதினால் வருகிறதாய் இருக்கிறது உ.ம். சாராள் எபிரெயர் 11:11, பவுல் 2 கொரி, 12:8-10.

10 நெருக்கத்தின் கீழ் ஒரு விசுவாசியின் உறுதித் தன்மையானது விளங்குகிறதாய் இருக்கிறது 2 பேதுரு 1:3-16.

**கிறிஸ்தவ வாழ்க்கை -- அற்பண வாழ்வு.**

1. இதன் பொருள் சேவையில் மற்றொருவருக்கு சேவை செய்ய ஒருவர் தன்னை தாழ்மைப்படுத்துவதைக் காட்டுகிறது. அது உங்களது நன்மையை கருதுவதாய் இருக்கிறது. ஆதியாகமம் 16:9, 1 பேதுரு 5:6, எபிரெயர் 13:17.

2. நம்மை முற்றிலும் தேவனுக்கு அற்பணித்தல் அவசியமாய் இருக்கிறது. யாக்கோபு 4:7, ரோமர். 12:1-2. கர்த்தர் தம்மைத்தாமே மரணபரியந்தம் கீழ்ப்படிந்து தம்மைத் தாமே தாழ்த்தினது போல, நாமும் அற்பணித்தல் அவசியமாய் இருக்கிறது. பிலிப்பியர் 2:18.

3. நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியால், சபைக்குள் இருக்கும் ஒவ்வொருவருக்காய் முற்றிலுமாய் நம்மை அற்பணித்தல் அவசியம். இது எவ்வித தனிப்பட்ட ஆர்வத்தையும் காட்டாது, பிறரின் ஆவிக்குரிய தேவைகளை மனதில் கொண்டு செயல்படுவதைக் குறிக்கிறது. எபேசியர் 5:21.

4. சபையின் போதகர் தேவ வசனத்திலிருந்து போதிக்கும்பொழுது, சபைக்குள் விசுவாசிகள் அவரது போதக அதிகாரத்திற்கு அற்பணிப்பதைக் காட்டுகிறது. எபிரெயர் 13:17, 1 கொரி. 16:6, 1 பேதுரு 5:5.

5. திருமண வாழ்வில் மனைவியானவள் தனது புருஷனுக்கு தன்னை முற்றிலும் அற்பணித்து வாழ்தல் வேண்டும். அவள் தனது புருஷனை தனது ஆவிக்குரிய தலைவனாய் மதித்து அவனைக் கனம்பண்ணுதல் இதில் உள்ளடங்கியுள்ளது, மற்றும் அவன் தனது மனைவிக்கு சம்ரட்சகனாய் விளங்குகிறான். எபேசியர் 5:22, கொலோசெயர் 3:18, தீத்து 2:4 -5.

6. பிள்ளைகளும் கூட தனது பெற்றோருக்கு தங்களை அற்பணித்து அவர்களில் அன்புகூறுதல் வேண்டும், அவர்கள் தேவனது அதிகாரத்திற்கு கீழாய் இருக்கிறார்கள். கொலோசெயர் 3:20.

7. எல்லா விசுவாசிகளும் அவர்கள் வாழும் தேசத்தின் சட்ட நியமங்களுக்கு அற்பணித்தல் வேண்டும், அச்சட்ட நியமங்கள் தேவனது கட்டளைகளை மீறாது இருத்தல் வேண்டும். ரோமர் 13:1, 2, மத்தேயு 22:21, 1 பேதுரு 2:13-17, exception example, அப்போஸ்தலர் 4:15-20, 5:40-42.

8. வேலைக்காரர் தங்களை வேலைக்கு நியமித்துக்கொண்டவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் கீழானவர்களாய் இருக்கிறார்கள். கொலோசெயர் 3:22-25, எபேசியர் 6:5-8, தீத்து 2:9, 10, 1 பேதுரு 2:18-24.

9. அதிகாரத்தில் உள்ளவர்கள், தங்களுக்கு கீழானவர்கள் மீது, விஷேச கடமையுணர்வுள்ளவர்களாய் இருக்கிறார்கள். கொலோசெயர் 4:1.

**கிறிஸ்தவாழ்க்கை -- துன்பப்படுதல் அல்லது உபத்திரவப்படுதல்:**

1. எல்லாவிதத் துன்பங்களும் ஆதாமின் பாவத்தால் வந்த விளைவே.

2. தேவன் ஏகாதிபதியாய் இருக்கிறார் மற்றும் அவர் துன்பங்களை இவ்வுலகில் ஒருநோக்கத்துடன் அனுமதிக்கிறார். (ரோமர் 8:28).
a) ஜனங்கள் உதவியற்ற நிலையில் தம்மை நோக்கி அவர்கள் அழைக்க அனுமதிக்கிறார்.
b) விசுவாசத்தை பரீட்சிக்க மற்றும் வளர்க்க, அதன் மூலம் தனக்கு மகிமை வருவித்துக்கொள்ள அனுமதிக்கிறார்..

3. நித்தியத்தில் விசுவாசிகளுக்கு பாடுகள் / துன்பங்கள் இருக்காது. (வெளிப்படுத்தல் 21:4)

4. அவிசுவாசிகள் நித்திய நித்தியமாய் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் வேதனைப்படுவார்கள். (வெளிப்படுத்தல்20:12-15).

5. துன்பங்களுக்கு காரணங்கள்:
a) சொந்த பாவங்களுக்கான சிட்சையாய் இருக்கலாம்,
b) மற்றவர்களின் பாவத்தால் புறங்கூறுதல், யுத்தம், குற்றம் இழைத்தல் போன்றவைகளால் இருக்கலாம்.
c) சொந்த செயல்களால் அனுபவிக்கும் துன்பங்கள், புகைபிடித்தலால் வரும் வியாதிகளால், உக்கிராணத்துவத்தில் மிகவும் பெலவீனமாயிருந்து அதனால் வரும் வறுமையாகிய துன்பம், குடிப்பழக்கத்தினால் வரும் வறுமை சரீர வியாதிகள் போன்றவை.
d) ஏகாதிபதியாகிய தேவனுடைய சித்தத்தின் படி - ஆரோக்கியத்தில், தட்பவெப்ப நிலையில் வரும் துன்பங்கள்.

6. துன்பங்களுக்கான அடிப்படை நோக்கங்கள்:

a) எல்லா துன்பங்களும் கிறிஸ்தவ நடக்கையில் ஆசீர்வாதங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. (1 பேதுரு 1:7, 8, 4:14).

b) சிட்சைகளும் கூட மீண்டும் ஐக்கியப்பட வடிவமைக்கப்பட்டுள்ளது.. (எபி. 12:6).

c) துன்பங்கள், கிருபையின் அடிப்படையை பின் தொடர்கின்றன (ரோமர்8:28, 1 தெசலோனிக்கேயர் 5:18).

7. கிறிஸ்தவப் பாடுகளுக்கான காரணங்கள்:

a) பின்மாற்றம் அல்லது மாம்சீக காரியங்களில் மாற்றம் ஏற்பட சிட்சை அளிக்கப்படுகிறது. (சங்கீதம் 38).

b) தேவனை மகிமை படுத்துவதற்காக. (யோபு1:8-12, லூக்கா 15:20, 21).

c) உபதேசங்களை விவரிப்பதற்காக (ஓசியாவின் தீர்க்கதரிசன ஆகமம்).

d) கீழ்ப்படிதலை சார்ந்து இருக்கும்படி (பிலிப்பியர் 2:8, எபிரெயர்5:8).

e) பெருமையை கீழடக்க (2 கொரிந்தியர் 12:7-10).

f) விசுவாசத்தில வளர (1 பேதுரு1:7, 8).

g) கிறிஸ்துவுக்கு சாட்சியாய் இருக்க (2 கொரிந்தியர் 13:4).

h) தேவனுடைய வல்லமையை நிரூபிக்க . (2 கொரிந்தியர் 11:24-33,
2 கொரிந்தியர் 12:7-10).

i) ஆவிக்கேற்ற கனி கொடுக்க (2 கொரிந்தியர் 4:8-11).

j) பிறர் துன்பப்படும்போது அவர்களுக்கு உதவியாய் இருக்க. (2 கொரிந்தியர் 1:3-5).

k) ஐக்கியத்திலிருந்து வெளியே ஜீவிக்கும் விசுவாசிகளுடன் மறைமுகமாய் செயல் பட. (ரோமர் 14, 1 கொரிந்தியர் 12:12, 13, 26, 1 சாமுவேல்21, 1 நாளாகமம் 21).

8. துன்பங்களுடன் ஈடுபாடு கொள்ளுதலும் -- அனுதின ஆவிக்குரிய கட்டளைகளை கடைபிடித்தலும்:

ஒரு விசுவாசியாய் இருப்பதற்கு துன்பங்களுடன் அவர் சம்பந்தபட வேண்டியதாய் இருக்கிறது. இது விநோதமான ஒன்று அல்ல. அது நமது கடமையாய் இருக்கிறது. அது ஒரு இராணுவ வீரர், நீண்ட நாட்கள் யுத்த முகாமில் இருந்து தீங்கு அனுபவிப்பதற்கு ஒப்பாய் இருக்கிறது. அவர் எவ்வித குறைபாடும் கூறாது, அதை மரியாதையுடனும், பெலத்துடனும் செய்கிறவராய் இருக்கிறார். குறிப்பு: -- இதன் பொருள் அற்புதங்கள் எல்லா வியாதிகளையும் குணமாக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ஒரு நோக்கத்துடன் நமது வாழ்வில் இவைகள் நேரிடும்போது, யோபுவுக்கு நேர்ந்தது போல, நம்மையும் திகைக்கவைக்கிறதாய் இருக்கிறது. அது வியாதியுடனும் மற்றும் மரணத்துடனும் கர்த்தரை சேவிக்க வைக்கிறது.

எதிராளியுடன் செய்யும் யுத்தத்தில் "**அனுதினம் அநுசரிக்க"** வேண்டிய ஐந்து கட்டளைகள், இவைகளை சபையின் யுகத்தில், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் கைக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். 1 பேதுரு 5:8,9. அவைகள் நம்மை கர்ச்சிக்கிற சிங்கம் போன்றவனிடத்திலுருந்து நம்மைப் பாதுக்காக்கும்.

அ] **தெளிந்த புத்தி**! -- எல்லா சந்தர்ப்பங்களிலும் இச்சையடக்கமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும், எவ்வித உணர்ச்சிகளும் நம்மை தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள அனுமதிக்கக்கூடாது, அல்லது மற்ற குடிப்பழக்கமோ அல்லது போதை வஸ்துகளோ நம்மை அடிமைப்படுத்த அனுமதிக்கக்கூடாது. பரிசுத்த ஆவியானவர் மட்டுமே நம்மைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள அனுமதித்தல் வேண்டும். ரோமர்13:11-13. 1 தெசலோனிக்கேயர் 5:6 -8.

ஆ] **விழிப்புடனிருத்தல்**! -- எல்லா சமயங்களிலும், அபாயம் நேரிடும் என அறிந்து, விழிப்புடனும் இருத்தல் வேண்டும். காக்கும் வேலையை செய்யும் போது நிர்விசாரம் கூடாது.

இ] **எதிர்த்து நிற்றல்**! -- பிசாசானவன் கொண்டுவரும் ஒவ்வொருகாரியத்திற்காக அவனுக்கு எதிராய் எதிர்த்து நிற்றல் வேண்டும். தீமையை முழுவதுமாய் சகித்து, அவற்றிற்கு எதிர்த்து நிற்றல் நமது வாழ்வின் ஒரு பகுதியாக வேண்டும். இவ்வசனங்களையும் ஒப்பிட்டுப்பார்க்க: லூக்கா4:3-12, எபேசியர் 4:27, 6:11-13, யாக்கோபு 4:7.

ஈ] **அப்போஸ்தருக்கு ஒரு முறை அளிக்கப்பட்ட விசுவாசத்தில் உறுதியாய் தரித்து இருத்தல்:** -- முறிந்து போகாது இருங்கள் தாக்குதலின் போது, உறுதியாய் ஒரு போர்ச்சேவகன் தரித்து நிற்பது போன்று, உறுதியாய் தரித்து நில்லுங்கள். அப்போஸ்தல உபதேசத்தில் உறுதியாய் நில்லுங்கள்; அவர்கள் கைக்கொண்டவற்றைக் கைக்கொள்ளுங்கள். ஸ்தல சபையில் இணைக்கப்பட்டவர்களாய் இருங்கள் ஒன்றுபட்டு வாழுங்கள் ஒவ்வொருவருடனும் நெருக்கமாய் இசைந்து இருங்கள்.

உ] நீங்கள் தனித்து இருக்கவில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள்! -- எல்லா விசுவாசிகளும் தங்களது கர்த்தருக்காய் நிற்கும்போது, நெருக்கங்களினால் உபத்திரவப்படுகிறார்கள்.

**5. எலிசா -- இவரது அற்புத ஊழியத்தின் விளைவை கற்றறிதல். [ELISHA – A CASE STUDY OF MIRACULOUS MINISTRY]**

**எலிசா -- அற்புதங்கள்.**

1. வேதபகுதி 1 இராஜாக்கள் 19 - 2 இராஜாக்கள் 2:9,13.

2. சுயசரிதை:

எலிசா, இப்பெயரின் பொருள் "இரட்சிப்பின் தேவன்" இவர் யோர்தான் பள்ளத்தாக்கில், ஆபேல் மெகோலா ஊரைச் சார்ந்தவர். (1 இராஜாக்கள் 19:16). இவரது தந்தை ஒரு சாப்பாத்தியனாய் இருந்தார். இவர் அழைப்பின் போது 12 ஏர்மாடுகளைப் பூட்டி உழவுசெய்கிறவராய் இருந்தார். (1 இராஜாக்கள் 19:19) இது அவரது குடும்பம் சௌகரியமான வாழ்க்கை செய்துவந்ததை சித்தரிக்கிறது. எலியா தனது சால்வையை எலிசாவின் மீது போட்டு அவனை அழைத்தார். அவர் தனது ஏர் மாடுகளை இரண்டினை அடித்து எலியாவை பின்பற்றிச் செல்லுமுன் விருந்து செய்தார். 2 இராஜாக்கள் 19:21. இவரது ஊழியமானது 50 ஆண்டுகாலமாய் இருந்தது கி.மு 896 முதல் கி.மு. 839 வரை நீடித்தது. ஆரம்ப காலத்தில் இவரது ஊழியம் சமாரியாவில் ஆகாப் இராஜா அரசாண்ட காலம் முதல் யோசியா இராஜா காலம் வரை நீடித்தது. எலிசாவின் ஊழியமானது மிகவும் குறைவான பிரச்சனைகள் உள்ள காலத்தில் அமையப்பெற்று இருந்தது, அடையாளங்களும், அற்புதங்களும் சாமுவேல் தீர்க்க்தரிசி காலத்தின் போது நிகழ்ந்ததாய் இருந்தது. இவருக்கு அளிக்கப்பட்ட விஷேச வரங்களினால், இவருக்கு ஜனங்கள் நடுவே பெரிய வரவேற்பு இருந்தது. எலியாவும், எலிசாவும் மோசே மற்றும் யோசுவாவிற்கு ஒப்பிடப்படுகின்றனர். அற்புதங்களைச் செய்யும் எலிசா, எலியாவின் ஊழியத்திற்கு பின் இவர் செய்த ஊழியமானது, (யோவான் ஸ்நானகனது ஊழியத்திற்கு, ஊழியத்தில் ஈடுபட்ட இயேசுவுக்கு ஒப்பனையாக இருக்கிறது, யோவான் 1:15-21. எலிசா தனது 85 லிருந்து 90 வயதில் மரித்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.

3. பரிசீலனை செய்தல்:

தன்னை ஊழியத்திற்கு அழைத்து ஏற்படுத்தின, தான் பின்பற்றிச் சென்ற எலியா அக்கினி இரதங்களால் பரலோகிற்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்னர், எலிசா,

எலியா செய்த அற்புதங்களைப் பார்க்கிலும் இரண்டு மடங்கு அதிகமாய் நிகழ்த்தினார். ( 2 இராஜாக்கள் 2:11).

அ) யோர்தானை இரண்டாக பிளத்தல் (2 இராஜாக்கள் 2:13,14) இது எலியா பரலோகிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் உடனடியாய் எலிசாவால் செய்யப்பட்ட அற்புதம்.

ஆ) எரிகோவில் தண்ணீர் விநியோகம் (2 இராஜாக்கள் 2:19-22) குடிக்க இயலாத தண்ணீரில் உப்பை போட்டு அந்த தண்ணீரை குடிநீராய் மாற்றிய அற்புதம். எலிசா செய்த இந்த அற்புதம் இன்று வரைக்கும் எரிகோவின் கிணற்று தண்ணீர் ஆரோக்கியமடைந்து குடிநீராய் பயன்பட்டு வருகிறது.

இ) சிறு பிள்ளைகளை சபித்தல் (2 இராஜாக்கள் 2:23,24), எலிசாவை சிறுபிள்ளைகள் பரிகாசம் செய்தமையால், அவர் சபித்தபோது பெண் கரடிகள் காட்டிலிருந்து வந்து அவர்களைக் கொன்று போட்டது.

ஈ) மோவாபியர் தோற்கடிக்கப்படல் (2 இராஜாக்கள் 3:1-27) இது எலிசாவின் முன்னறிப்பின்படியே நிகழ்ந்தது.

உ) விதவை வீட்டில் எண்ணெய் (2 இராஜாக்கள் 4:1-7), ஏழை விதவையின் வறுமை போக்க, அவளை பொருளாதார நிலையில் ஆசீர்வதிக்கும்படி இதை எலிசா செய்தார். இது அவளது குமாரரை அடிமைத்தனத்திலிருந்து தப்புவித்தது.

ஊ) சமைத்த பாத்திரத்தில் விஷம் (2 இராஜாக்கள் 4:38-41), இது விஷமுள்ள தாவரங்களை பாத்திரத்தில் போட்டு சமைத்ததினால் ஏற்பட்ட விளவு, அற்புதத்திற்கு பின்னர், விஷம் மாறி, உண்ணத்தக்க விதத்தில் அது மாறியது.

எ) இருபது அப்பங்கள் (2 இராஜாக்கள் 4:42-44) இவைகள் 100 பேருக்கு போதுமான அளவுக்கு பெருகச்செய்து, அவர்களுக்கு பரிமாறப்பட்டது.

ஏ) நாமான் குஷ்டரோகத்தை குணமாக்கியது. (2 இராஜாக்கள் 5).

ஐ) கோடாரியை தண்ணீரின் மீது மிதக்கச்செய்தது. (2 இராஜாக்கள் 6:1-7).

ஒ) தோதானில் எலிசா அக்கினி இரதங்களால் பாதுகாக்கப்பட்டது. (2 இராஜாக்கள் 6:11-23).

ஓ) சமாரியாவின் பஞ்சகாலத்தில், மிகுதியான உணவுபதார்த்தங்கள் வழங்கப்படும் என முன்னறிவித்தல். (2 இராஜாக்கள் 6:24 - 7:20).

ஔ) மரித்த மனிதன் உயிர்ப்பெறுதல் (2 இராஜாக்கள் 13:21) மரித்த பிரேதத்தை எலிசாவின் கல்லறையில் எரிய எலிசா தீர்க்கதரிசியின் எலும்புகள் பிரேதத்தில் பட்டவுடன் அந்த பிரேதம் உயிர்பெற்று எழும்பியது.

ஃ) இயேசுவைக் குறித்த விளக்கங்கள் பழைய ஏற்பாட்டில் பல விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. எலிசாவினால் செய்யப்பட்ட அற்புதங்களுக்கு ஒத்த நிலையில் புதிய ஏற்பாட்டில் கர்த்தரால் செய்யப்பட்டுள்ளது.

i) தண்ணீர் மீது நடத்தல் - யோர்தானைப் பிளத்தல்.

ii) தண்ணீர் திராட்சை இரசமாய் மாறுதல் - உப்புத்தண்ணீர், சுவைமிகுந்த குடிதண்ணீராய் மாறுதல்.

iii) அத்திமரம் சபிக்கப்படுதல் - சிறுபிள்ளைகள் சபிக்கப்படுதல்.

iv) லாசருவை உயிருடன் எழுப்புதல் - சூனேமித்தியாளின் மகனை உயிருடன் எழுப்புதல்.

v) 5000 பேரை போஷித்தல் - 100 பேரை போஷித்தல்.

vi) குஷ்டரோகத்தை குணமாக்குதல் - நாமானின் குஷ்டத்தை குணமாக்குதல்.

vii)தேவ தூதர்கள் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தல் - அக்கினிமயமான இரதம் இவருக்கு பாதுகாப்பு அளித்தல்.

4. அடிப்படைக் கருத்துக்கள்:

அ) அற்புதமான வழிகளில் விசுவாசிகளை கர்த்தர் காக்க இயலும். (அப்போஸ்தலர் 12:5-11).

ஆ) தேவன் தமது ஊழியர்கள் பயனுள்ள நிலையில் சேவை செய்ய அவர்களது தேவைகளை அளிக்க இயலும். (யோவான் 16:23-24).

இ) தேவனை எல்லாவற்றிலும் முதன்மையாய் வைக்கும்போது, செய்யும் எல்லாக்காரியங்களிலும் ஆவிக்குரிய ஜெயத்தை அருளுகிறவராய் இருக்கிறார். (யோசுவா 1:8).

ஈ) நீங்கள் மரித்த பின்னரும், நீங்கள் செய்த கிரியைகள் பயனுள்ளவைகளாய், ஆவிக்குரிய மரணத்தை தழுவியர்களை உயிர்பெறச் செய்கிறதாய் இருக்கிறது. (வெளிப்படுத்தல் 14:13.).

.

**6. தெய்வீக அற்புதங்களின் பின்னணியில் விளங்கும் வல்லமை -- பரிசுத்த ஆவியானவரின் கிரியை:**

<u>பரிசுத்த ஆவியானவர்: புதிய ஏற்பாட்டில் அவரது ஊழியம்.</u>

1. அவிசுவாசிகளுக்கு அவரது ஊழியம்:

a) தடைசெய்கிறவர் (2 தெசலோனிக்கேயர் 2:7). சபையுகத்தில் அவிசுவாசிகள் தடைசெய்யப்படாது இருப்பார்கள் என்றால் சாத்தானால்

ஏற்படுத்தப்படும் ஒரு உலக அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கும். சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு இது செயலாக்கப்படும்.

b) கண்டித்து உணர்த்துதல் (யோவான்16:7-11).

i) பாவம் (கண்டித்து உணர்த்தப்படுதல்) - அவிசுவாசத்தில் நிலைத்து இருக்கும் தடை..

ii) நீதி - தேவன் முற்றிலும் நீதிபரராய் இருக்கிறார், மனிதன் தனித்தன்மையற்ற நீதியை உடையவனாய் இருக்கிறான் அவனது இரட்சிப்பிற்கு தேவனது நீதி அவசியமாய் இருக்கிறது.

iii) நியாயத்தீர்ப்பு - சாத்தான் மற்றும் எல்லா அவிசுவாசிகளும் நியாயந்தீர்க்கப்பட்டு இருக்கின்றனர்.

c)மறுபிறப்பு (யோவான்3:5).

ஆவியில்லாத மனிதனால் ஆவிக்குரியவைகளை அறியமுடியாது. சுவிஷேசம் ஆவிக்குரியதாய் இருக்கிறது, பரிசுத்த ஆவியானவர் அவிசுவாசிக்கு சுவிஷேசத்தை உண்மையாக விளங்கப்பண்ணி, விசுவாசத்தின் மூலம் "மறுபிறப்பை" அந்நபரில் ஏற்படுத்துகிறார். (1 கொரிந்தியர் 2:14).

2. இரட்சிப்பில் விசுவாசிக்கு,

a) மறுபிறப்படையச்செய்தல் (யோவான் 3:1-16, தீத்து3:5).

b) ஞானஸ்நானம் (அப்போஸ்தலர்1:5, 1 கொரிந்தியர்12:13, எபேசியர்4:5)கிறிஸ்துவோடு இணைக்கப்பட மற்றும் கிறிஸ்துவின் சரீரத்தில் ஓர் அங்கமாக ஞான்ஸ்நானம் பெறுகிறோம். இதை பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதுடன் குழப்பக்கூடாது.

c) வாசம்பண்ணுதல் (ரோமர்8:9, 1 கொரிந்தியர்6:19, 20) ஒருவிசுவாசியின் இரட்சிப்பிலிருந்து அந்நபரில் பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுகிறார்.

d)முத்திரையிடப்படுதல் (2 கொரிந்தியர் 1:22, எபேசியர்1:13, 4:30). இந்த ஊழியம் தேவனுடன் உங்கள் எதிர்கால சம்பந்தப்பட்டது, இது நித்திய பாதுகாபுக்கு உத்திரவாதம் அளிக்கிறது..

e) ஆவிகுரிய வரங்களை பகிர்ந்தளித்தல்: (1 கொரிந்தியர்12:11). ஒவ்வொரு விசுவாசியும், இரட்சிப்பின் போது, கிறிஸ்துவின் சரீரத்தில் செயலாற்ற, ஆவிகுரிய வரங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

3. இரட்சிப்படைந்த விசுவாசிக்கு: (ஆவிக்குரிய நிலையில்) பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் ஒருவர் இரட்சிப்படைந்த பின்னர், தேவன் அந்நபருக்கென நியமித்துள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ வழிநடத்துது. (எபேசியர் 2:10, 5:18).

a) பரிசுத்த ஆவியனவரால் நிரப்பப்படுதல் (ஆவிக்குரிய நிலையில் பாவங்களை அறிக்கை செய்தல் மூலம், வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுப்பதன் மூலம் அவரால் நிரப்பப்படுகிறோம்.) (1 யோவான்1:9எபேசியர்5:18).

b) பரிசுத்த ஆவியானவரால் ஒரு விசுவாசி நிரப்பப்படும்போது, அவர் அந்நபரில் இயேசுக் கிறிஸ்துவின் குணங்களை உருவாக்குகிறார். (கலாத்தியர் 4:19, 5:22, 23)

c) கிறிஸ்துவை மகிமைப் படுத்துகிறார். (யோவான்7:39, 16:14, 1 கொரி.6:19, 20).

d) நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறார். (ரோமர்8:2-4).

**பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகள்:**

இது பரிசுத்த ஆவியானவர் வித்தியாசமான சூழல்களில், இடங்களில் மற்றும் பலவிதமான வழிகளில் செயல்படுவது முறண்படுகிறதாய் இருக்கிறது. அந்தியோகியா மற்றும் இக்கோனியா போன்ற இடங்களில் அவரது செயல்பாடுகளை பரிசீலனை செய்வோம். இது பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகளில் பெரிய மாற்றங்களை காண்பிக்கிறதாய் இருக்கிறது. (அப்போஸ்தலர் 15:22-35) (அந்தியோகியா), (அப்போஸ்தலர் 14.1-7) (இக்கோனியா),

1. அந்தியோகியாவில் பிரசங்கித்தல் மட்டும் நிகழ்ந்தது. இக்கோனியாவில் பிரசங்கம் மற்றும் அற்புதங்கள் நிகழ்ந்தது.

2. விசுவாசிகள் வெற்றியுள்ள செயல்பாடுகளை அடிப்படையாய் கொண்டு ஒரு அமைப்புமுறைகளை வழிவகுத்தல் கூடாது.

3. காரணம் பரிசுத்த ஆவியானவரின் அற்புதங்கள் இக்கோனியாவில் நிகழ்ந்தது போல எல்லா இடங்களிலும் பின்தொடரவில்லை.

4. அற்புதங்களின்றி, அந்தியோகியாவில் பிரசங்கம் மற்றும் போதனைகள் மூலம் அதே வெற்றியானது நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

5. ஒரு விசுவாசியின் ஊழியம், பரிசுத்த ஆவியானவருடன் சம்பந்தப்பட்டதாய் இருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட ஊழியம் உபதேசம் அல்லது வாய்மொழியாக அறிவிக்கப்படலாம், இயற்கைக்கு அப்பாற்பட்ட வியப்பிற்குரிய செயல்பாடுகள் அதோடு இருக்கவேண்டும் என்பது அவசியமற்றது

6. ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியானவரை இக்கோனியத்தில் நிகழ்ந்தது போன்று, அந்நிய பாஷை மற்றும் குணமாதல் போன்ற நிகழ்வுகள் தங்கள் ஊழியம் செய்யும் சூழலில் நிகழவேண்டும் என வற்புறுத்துதல் கூடாது. கடந்த காலங்களில் இது போன்றவற்றை தேவன் அனுமதித்தார், அதைப்போன்றே தற்காலத்திலும் அவைகள் நிகழ வேண்டும் என எதிர்பார்த்தல் தவிக்கப்பட வேண்டும்.

7. அற்புதமான வகையில் குணமாதல், மற்றும் அந்நிய பாஷை போன்றவைகளை தேவனிடம் எதிர்பார்த்து, அவர் அவைகளை நிகழுமாறு வற்புறுத்துதல், தேவனது திட்டத்திற்கு எதிராய் ஒரு விசுவாசி செயல்படுவதற்கு ஒப்பனையாய் இருக்கிறது.

8. அற்புதங்கள் எப்பொழுதும் தேவனது வார்த்தைகளின் செய்திக்கு நேராய் கவனத்தை திசைதிருப்புவதாய் இருக்கிறது. அது வல்லமைக்கோ, ஆவிக்குரிய தன்மைக்கோ ஒரு அடையாளமாய் பயன்படுத்தப்பட்டது இல்லை.

i) செய்திக்கே முக்கிய இடம் அளிக்கப்பட்டது, அற்புதத்திற்கு அல்ல.

ii) அற்புதங்களை வலியுறுத்தி, ஒரு செய்தியும் அளிக்கப்படாமல், நாம் செய்தி அளிப்பதிலிருந்து வழிவிலகுதல் கூடாது. பரிசுத்த ஆவியானவர் செய்திக்கே முக்கியத்துவம் அளித்து வலியுறுத்துகிறவராய் இருக்கிறார்.

iii) இன்றைய அளவில் அற்புதங்கள், அந்நிய பாஷைகள் மற்றும் குணமாக்குதல் போன்றவைகள், தேவனது வார்த்தையை அறிவிப்பதற்கு பெருந்தடைகளாய் விளங்கி வருகின்றன.

**விக்கிரக ஆராதனை:**

1. விக்கிரக ஆராதனையானது தடைசெய்யப்பட்டுள்ளது. (யாத்திராகமம் 20:3,4,23; 23:24; உபாகமம் 4:28; 5:7; 6:14; 7:16; 8:19).

2. பத்துக்கற்பனையில் முதலாவது கற்பனையானது மனநிலையில் விக்கிரக ஆராதனையானது தவிர்க்கப்படுகிறது, இரண்டாம் கற்பனையில் வெளிப்படையாய் விக்கிரக ஆராதனையானது தடை செய்யப்படுகிறதாய் இருக்கிறது.

3. விக்கிரக ஆராதனையானது ஆவிக்குரிய வேசித்தனமாய் இருக்கிறது, தேவனிடத்தில் அன்புகூறுவதற்கு விரோதமாய் இது ஒரு விசுவாசியில் செயல்படுகிறதாய் இருக்கிறது. (எரேமியா 3:8-10; எசேக்கியேல் 16:23-43; 23:24-30; வெளிப்படுத்தல் 17:1-5).

4. மனநிலையின் விக்கிரக ஆராதனையானது, விக்கிரக ஆராதனை செய்வதற்கு வழிநடத்துவதாய் இருக்கிறது. எல்லோரும் அறியத்தக்கவிதத்தில் விக்கிரக ஆராதனை செய்வதற்கு முன்னர் விக்கிர ஆராதனையானது மனநிலையில் இடம் பெறுகிறதாய் இருக்கிறது. (நியாதிபதிகள் 2:10-13; எசேக்கியேல் 14:7).

5. சிருஷ்டிகரை தொழுது சேவியாமல், அவரால் சிருஷ்டிக்கப்பட்டவைகளை தொழுது சேவிக்கும்போது, விக்கிரக ஆராதனையானது இடம்பெறுகிறதாய் இருக்கிறது. (ரோமர். 1:18-25).

6. பிசாசுகள் விக்கிரகங்கள் மூலமும், விக்கிரக ஆராதனை செயல்பாடுகள் மூலமும் செயல்படுகிறதாய் இருக்கின்றன. (சகரியா 10:2).

7. விக்கிர ஆராதனையானது, பிசாசுகளின் திருவிருந்து மேஜையாய் இருக்கிறது. (1 கொரி. 10:19-21).

8. விக்கிரக ஆராதனையானது பாலுறவு பாவங்கள் சம்பந்தப்பட்டதாய் இருக்கிறது, இது லிங்க பூஜைகள் [phallic cult] செய்வதற்கு கீழாக வருகிறது. (எசேக்கியேல் 22:3-18; 23:37-49). விக்கிரக ஆராதனையானது ஆத்துமாவிற்கும், சரீரத்திற்கும் எதிரான விளைவுகளை கொண்டுவருகிறது. (1 கொரி. 6:9).

9. விக்கிரக ஆராதனையானது தேசிய நியாயத்தீர்ப்பு மற்றும் அடிமைகளாய் செல்லுதல் போன்றவற்றிற்கு காரணமாய் அமைகின்றன. (ஏசாயா 2:8; 2:18-20; 21:9; 36:18-20; எரேமியா 2:27:30; 3:6-11; 7:17-20; 17:1-4; எசேக்கியேல் 6:4-6).

**7. அற்புதங்கள் - அவைகளின் நோக்கம், கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர் அவைகளைப் பயன்படுத்திய விதம்:**

**அற்புதங்கள் - அவைகளின் நோக்கம்:**

1. அற்புதங்கள் கொத்து கொத்தாக மூன்று முக்கிய சரித்திர காலங்களில் இடம்பெற்றுள்ளது. எல்லா அற்புதங்களும் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன ஆனால் அவைகளில் பனிரெண்டு கீழ்க்கண்ட மூன்று காலக்கட்டங்களில் பதிவு செய்யப்படுகின்றன.

அ) நியாயப்பிரமானம் மற்றும் தீர்க்கதரிசிகள் குழு - கிறிஸ்துவின் முதல்வருகைக்கான ஆயத்தம்.
i) யாத்திராகமம் முதல் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் வரை அற்புதங்கள் மோசே, ஆரோன் பின்னர் யோசுவாவால் நிகழ்த்தப்பட்டது.
ii) பெரிய தீர்க்கதரிசிகளான எலியா, எலிசா போன்றவர்களின் போதனைகாலத்தில் நிகழ்த்தப்பட்டது.

ஆ) கர்த்தர் மற்றும் அப்போஸ்தல குழு -- முதல் வருகையை சாட்சியாய் அறிவிக்க நிகழ்த்தப்பட்டது.
i) கர்த்தரின் அற்புதங்கள்.
ii) அப்போஸ்தலர்களால் நிகழ்த்தப்பட்டவைகள்.

இ) எதிர்கால அற்புதக் குழு -- கிறிஸ்துவின் இரண்டாம் வருகையுடன் இணைக்கப்பட்டுள்ளது.
i) மகா உபத்திரவகாலத்தின் ஆரம்பத்தில் இரண்டு சாட்சிகளின் செயல்பாடுகள்
ii) ஆயிர வருட அரசாட்சி ஸ்தாபனம் செய்வதற்கு உலகலாவிய அற்புத செயல்பாடுகள், கர்த்தர் அரசாளும்போதும், இப்பூமியை திரும்ப அமையச்செய்யும்போது நிகழும். .

2. அற்புதங்களின் நோக்கம் கீழ்க்கண்டவைகளை உள்ளடக்கியுள்ளது :-
அ) தேவனின் தன்மையை மகிமைப் படுத்துவதற்கு. (யோவான் 2:11, 11:40).
ஆ) தேவனுக்காய் பேசுகிற சில முக்கிய மனிதரை நிரூபனம் செய்வதற்கு (எபிரெயர் 2:3-4, லூக்கா 7:18-23).
இ) இயேசுவே மேசியா என விசுவாசிக்க ஆதாரமளிப்பதற்கு (யோவான் 6:2,14, 10:37-38, 20:30-31, 1 கொரி. 15:13-20).
ஈ) தீமை செய்யும் சக்திகள் மீது, கர்த்தரின் உன்னத வல்லமையை நிரூபனம் செய்வதற்கு (மத்தேயு 9:27-34; மாற்கு 5:1-20; லூக்கா 4:31-37).
உ) கிறிஸ்துவின் தனித்தன்மையை நிரூபணம் செய்வதற்கும், கர்த்தர் நம்முடனிருக்கிறார் என்பதை நிரூபணம் செய்வதற்கும். (யோவான் 1:14).

3. அற்புதங்கள் தேவனது குணாதிசயங்களை நிரூபணம் செய்கிறதாய் இருக்கிறது.
அ] தேவனின் சர்வ வல்லமையானது இவ்வாறு விவரிக்கப்படுகிறது.

i) கர்த்தரின் உருவாக்கும் கிரியையானது தண்ணீரை கானாவூரில் திராட்சை இரசமாய் மாற்றினது. (யோவான் 2:1-11)..

ii) கலிலேயாக்கடலில் புயலை அமர்த்திய வல்லமை. (மாற்கு 4:35-41; மத்தேயு 8:18).

iii) 5000 மற்றும் 4000 பேரை போஷித்தல்.(மாற்கு 6:33-44; 8:1-9).

iv) கலிலேயாக கடல் மீது நடத்தல். (மாற்கு 6:47-52).

v) கெத்சமனேயில் கைது செய்யப்பட்டது. (யோவான் 18:6).

ஆ] தேவனது நீதியானது இவ்வாறு விவரிக்கப்படுகிறது:
மறுரூப மலையில் கர்த்தரின் மறுரூபம், அவர்கள் தேவனின் பரிசுத்தத்தைக் கண்டபோது, அதைக் கர்த்தரிலும் கண்டார்கள். (மத்தேயு17:1-8; மாற்கு 9:2-8; லூக்கா 9:28-36).

இ] தேவன் அளிக்கும் நீதியானது இவ்வாறு விவரிக்கப்படுகிறது.
கிறிஸ்து சிலுவையில் மரிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக அத்திமரத்தைச் சபித்தது, விசுவாசமற்ற இஸ்ரவேல் மீது வரப்போகிற நியாயத்தீர்ப்பைக் காட்டுகிறதாய் இருக்கிறது. (மத்தேயு 21:18-22; மாற்கு 11:12-14, 20-26).

ஈ] தேவனது அன்பானது இவ்வாறு விவரிக்கப்பட்டது.
கர்த்தரின் மனதுருக்கத்தினால் குணமாக்கும் ஊழியங்கள் செயல்படுத்தப்பட்டன. குறிப்பிடத்தக்க 36 அற்புதங்கள் சுவிஷேசப்புத்தகத்தில் பதிவாகியுள்ளன. ஆயிரக்கணக்கான அற்புதங்கள் சில தனிமை படுத்தப்பட்ட வசனங்கள் வாயிலாக அறிந்து கொள்ள இயலும். (E.g. மத்தேயு 9:35-36, 14:14, 15:30-31, 8:16-17 etc.).

உ] தேவனது நித்திய ஜீவனானது இவ்வாறு விவரிக்கப்படுகிறது.
எல்லாவற்றிலும் தலைசிறந்த அற்புதமாகிய கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலம்.

ஊ] தேவன் சர்வஞானம் உள்ளவர் என்பது இவ்வாறு விவரிக்கப்படுகிறது

i) திரளான மீன்கள் எங்கே காணப்பட்டன என்னும் அவரது அறிவு. (மத்தேயு 4:18-22, மாற்கு 1:16-20, யோவான் 21:1-14).

ii) செலுத்தப்படவேண்டிய வரி நிலுவையை செலுத்தித் தீர்க்க வேண்டியிருந்தபோது, அந்த அளவுக்கு பணம் வாயிலுள்ள மீன் எங்கிருந்தது என அறிந்த அவரது அறிவு. (மத்தேயு. 17:24-27).

iii) நத்தான்வேலைக் குறித்த முன் அறிவு, சமாரியப் பெண்ணைக் குறித்த முன் அறிவு அவரது சர்வஞானத்தை காட்டுகிறதாய் இருக்கிறது. (யோவான் 1:45-51; 4:5-43).

எ] அவரது சர்வவியாபகம் இவ்வாறு விவரிக்கப்படுகிறது.
அநேக கிலோ மீட்டர்களுக்கு அப்பால், பலவிதமான வெவ்வேறு இடங்களில் தோன்றியது, மற்றும் விசுவாசிகளுடன் எப்பொழுதும் இருப்பேன் என வாக்குத்தத்தம் செய்ததன் மூலம் விவரிக்கப்படுகிறது. (மத்தேயு 28:20)

ஏ] தேவனது சர்வ வல்லமையானது இவ்வாறு விவரிக்கப்படுகிறது.
லாசரு இன்னும் மரித்துப்போன சிலரை உயிருடன் எழுப்பியது.

ஐ] தேவனின் மாறாத் தன்மையானது இவ்வாறு விவரிக்கப்படுகிறது.
உயிருடன் இருக்கும்போதும், உயிர்த்தெழுந்த போதும், வலை கிழியத்தக்கதாய் மீன்களை பிடித்தது, திரும்பத் திரும்ப செய்த அற்புதமாய் இருக்கிறது. இது அவரது குணாதிசயம் மற்றும் வல்லமையில் மாற்றமில்லாமல் இருப்பதைக் காட்டுகிறது.

ஒ] தேவன் சொன்னபிரகாரம் நிகழ்வது இவ்வாறு விவரிக்கப்படுகிறது.
நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன், மற்றும் இராஜாவின் மனுஷனின் குமாரன் குணமாக்கப்பட்டது. பல கிலோமீட்டருக்கு அப்பால் கர்த்தர் இருந்த போதும், கர்த்தர் சொன்னமாத்திரத்தில் அவர்கள் குணமானார்கள், (மத்தேயு 8:5-13, லூக்கா 7:1-10, யோவான் 4:46-54).

ஓ] தேவனது கிருபையானது இவ்வாறு விவரிக்கப்படுகிறது.
இயேசுவை பிடிக்க வந்த மல்குஸ் என்பவனின் காதை தொட்டு குணமாக்கினது. (லூக்கா 22:50). இது கிறிஸ்துவின் கிருபைக்கு ஒரு சாட்சியாய் இருந்தது, இது கர்த்தருக்கேற்பட்ட சிலுவை பயங்கரத்திற்கு முன் நிகழ்ந்ததாய் இருக்கிறது. இப்படிப்பட்ட நெருக்கப்பட்ட காலத்திலும் இயேசு நின்று அற்புதம் செய்தவராய் விளங்குகிறார். தன்னை சிறைபிடிக்க வந்தவனுக்கு இயேசு செய்த இவ்வற்புதமானது, இயேசு இறுதியாய் செய்த முக்கியம் வாய்ந்த அற்புதமாய் திகழ்கிறது.

**வகைப்படுத்தப்பட்ட -- கிறிஸ்துவின் அற்புதங்கள்: -**

1. கட்டளையிட குணமாக்கப்பட்ட அற்புதங்கள்:

அ] தூர இடத்திலிருந்து வியாதிப்பட்டோரை குணமாக்குதல்.

**i)** கானாவூரில் இருந்த இராஜாவின் மனுஷரின் குமாரன். (யோவான் 4:46-54).

**ii)** நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன். (மத்தேயு 8:5-13).

ஆ] தனக்கு எதிர்ப்பட்ட மனிதரை குணமாக்குதல்:

**i)** சூம்பின வலது கையையுடைய மனிதன் குணமாக்கப்படுதல் (மத்தேயு 12:9-13).

**ii)** பெதஸ்தா குளத்தண்டை வியாதியாய் இருந்த மனிதன் குணமாக்கப்படுதல். (யோவான் 5:1-15).
**iii)** 10 குஷ்டரோகிகள் குணமாக்கப்படல். (லூக்கா 17:11-19).
**iv)** எரிகோவில் காணப்பட்ட இரு குருடர்கள். (லூக்கா 18:35-43).

2. தொட்டு குணமாக்கின அற்புதங்கள்:

அ] சாதரணமாய் தொட்டு குணமாக்கின அற்புதங்கள்.

**i)** பேதுருவின் மாமியை குணமாக்கினது. (மத்தேயு 8:14-15).
**ii)** குஷ்டரோகியை குணமாக்கியது. (மத்தேயு 8:2-4).
**iii)** பெரும்பாடுள்ள ஸ்திரீ (மத்தேயு 9:20-22).
**iv)** இரு குருடர்கள் (மத்தேயு 20:30-34).
**v)** எவ்வளவேனும் நிமிரக்கூடாத கூனி. (லூக்கா 13:10-13).
**vi)** நீர்க்கோவை வியாதியுள்ள மனிதன். (லூக்கா 14:1-6).
**vii)** மல்குஸின் காது. (லூக்கா 22:49-51).

ஆ] மற்ற செயல்பாடுகளுடன் தொட்டு குணமாக்கின அற்புதங்கள்.

**i)** பெத்சாயிதாவின் குருட்டு மனிதன். (மாற்கு 8:22-26).
**ii)** பிறவிக்குருடன் (யோவான் 9:1-41).
**iii)** செவிடும், ஊமையுமான மனிதன். (மத்தேயு 15:29-31).

3. உயிர்த்தெழுப்பின அற்புதங்கள்:

அ] கட்டளையிட உயிர்பெற்றனர்.

i) லாசரு (யோவான் 11:1-46).

ஆ] தொட்டுக் கட்டளையிடுதல்.

i) நாயீன் ஊர் விதவையின் மகன். (லூக்கா 7:11-17).
ii) யவீருவின் குமாரத்தி. (மாற்கு 5:21-43)

4. விசுவாசத்தால் குணமாக்கப்படல்.

அ] கட்டளை மூலம் குணமாக்குதல்.

i) கானாவூரின் இராஜாவின் வேலைக்காரனின் மகன். (யோவான் 4:46-54).
ii) நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன். (லூக்கா 7:1-10).
iii) பத்து குஷ்டரோகிகள். (லூக்கா 17:11-19).
iv) திமிர்வாதமுள்ள மனிதன். (மாற்கு 2:1-12).
v) பெதஸ்தா குளத்தண்டையில் உள்ள மனிதன். (யோவான் 5:1-15).
vi) சூம்பின கையை உடைய மனிதன். (மத்தேயு 12:9-13)

ஆ] தொட்டு குணமாக்கப்படல்.

i) இரு குருடர்கள் (மத்தேயு 9:27-31).

ii) குஷ்டரோகி. (மாற்கு 1:40-45).

iii) பெரும்பாடுள்ள ஸ்திரீ.(லூக்கா 8:43-48).

5. பாவம் ஒரு பிரச்சனையாயிருந்த அற்புதங்கள்:

i) திமிர்வாதமுள்ள மனுஷன் (மாற்கு 2:1-12).

ii) பெதஸ்தா குளத்தண்டையிலே இருந்த மனிதன். (யோவான் 5:1-15)

6. உவமை அல்லது உபதேசத்துடன் சம்பந்தப்பட்ட அற்புதங்கள்:

i) சூம்பின உறுப்பு மற்று காணாமற்போன ஆடு. (மத்தேயு 12:9-13)

ii) பிறவி குருடன் மற்றும் நல்ல மேய்ப்பன். (யோவான் 9, யோவான் 10:1-16).

iii) ஊமையான மனிதனிடத்திலிருந்து அசுத்த ஆவிகளை துரத்துதல். (லூக்கா 11:14).

iv) அசுத்த ஆவிகள் திரும்ப வருதல். (லூக்கா 11:14 cf. லூக்கா 11:21-28).

v) அத்திமரத்தை சபித்து விசுவாசத்தை குறித்து போதனை செய்தல். (மாற்கு 11:20-26)

7. சாபத் தினத்தன்று செய்த அற்புதங்கள்.

i) பெதஸ்தா குளத்தண்டையிலே வியாதிப்பட்ட மனுஷனை குணமாக்குதல்,. (யோவான் 5:1-15).

ii) சூம்பின கையையுடைய மனிதனை குணமாக்குதல். (மாற்கு 3:1-6)

iii) முடமான பெண் குணமாக்கப்படுதல். (லூக்கா 13:10-21).

iv) நீர்க்கோவை குணமாதல். (லூக்கா 14:1-6)

## காலக்கிரமப்படி கிறிஸ்துவின் அற்புதங்கள்:

| கிறிஸ்துவின் அற்புதங்கள் | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|
| கானாவூரில் தண்ணீர் திராட்சை இரசமாய் மாறினது. | | | | 2:1-11 |
| இராஜாவின் மனுஷனது குமாரனை குணமாக்குதல் | | | | 4:46-54 |
| மீன்களின்றி போதல். | | | 5:1-11 | |
| அசுத்த ஆவியுள்ள மனிதன் | | 1:23-26 | 4:33-35 | |
| சீமோனின் மாமியை குணமாக்குதல் | 8:14-15 | 1:30-31 | 4:38-39 | |
| குஷ்டரோகியை குணமாக்குதல் | 8:2-4 | 1:40-45 | | |
| திமிர்வாதக்காரனை குணமாக்குதல் | 9:2-7 | 2:1-12 | 5:17-26 | |
| 38 வருடம் வியாதியாய் இருந்த மனிதன் குணமாதல் | | | | 5:1-15 |
| சூம்பின கை குணமாதல் | 12:9-14 | 3:1-6 | 6:6-11 | |
| நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் | 8:5-13 | | 7:1-10 | |
| நாயீன் ஊர் விதவையின் மகன் | | | 7:11-17 | |
| குருடும் ஊமையுமான மனிதன் | 12:22 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| புயலை அமர்த்துதல் | 8:23-27 | 4:35-41 | 8:22-25 | |
| கெர்கெனேசர் பிசாசு | 8:28-34 | 5:1-20 | 8:26-39 | |
| யவீருவின் குமாரத்தி | 9:18-26 | 5:21-43 | 8:40-56 | |
| பெரும்பாடுள்ள ஸ்திரீ | 9:20-22 | 5:25-34 | 8:43-48 | |
| இரு குருடர்களும், ஊமையான ஆவியுடைய மனிதனும் | 9:27-34 | | | |
| ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல் | 14:13-21 | 6:30-44 | 9:10-17 | 6:1-15 |
| கானானிய ஸ்திரீயின் குமாரத்தி | 15:21-28 | 7:24-30 | | |
| செவிடும் ஊமையுமான மனுஷன் | 15:29-31 | 7:31-37 | | |
| நான்காயிரம் பேருக்கு உணவளித்தல் | 15:32-8 | 8:1-9 | | |
| பெத்சாயிதாவுக்கு அருகான குருட்டு மனிதன் | | 8:22-26 | | |
| பிசாசுபிடித்த சிறுவன் | 17:14-20 | 9:14-29 | 9:37-43 | |
| வரிப்பணம் செலுத்துதல் | 17:24-27 | | | |
| பிறவிக் குருடன் | | | | 9:1-41 |
| பிசாசு பிடித்த ஊமையன் | | | 11:14 | |
| எவ்வளவேனும் நிமிரக்கூடாத கூனி | | | 13:10-17 | |
| நீர்க்கோவை வியாதியுள்ள மனிதன் | | | 14:1-6 | |
| 10 குஷ்டரோகிகள் | | | 17:11-19 | |
| எரிகோவிற்கு அருகான குருடன் | 20:29-34 | 10:46-52 | 18:35-43 | |
| பட்டுப்போன அத்திமரம் | 21:20-22 | 11:20-25 | | |
| வெட்டப்பட்ட மல்குஸின் காதை ஒட்டி குணமாக்குதல் | 22:49-51 | | | |
| இயேசு சொன்னபடி வலையை போட்டு மீன்பிடித்தல். | | | | 21:6-11 |

**அப்போஸ்தலரின் அற்புதங்கள்**

| அற்புதங்கள் | நிகழ்ந்த இடம் | பதிவுசெய்யப்பட்ட வேதபகுதி |
|---|---|---|
| பேதுரு முடவனை குணமாக்குதல் | எருசலேம் | அப்போஸ்தலர் 3:1-11 |
| அனனியா, சப்பீராள் | எருசலேம் | அப்போஸ்தலர் 5:1-10 |
| அப்போஸ்தலர்களால் செய்யப்பட்ட அநேக அற்புதங்கள் | எருசலேம் | அப்போஸ்தலர் 5:12-16 |
| பேதுவும் யோவானும் பரிசுத்த ஆவியுடன் தொடர்பு கொள்ளுதல் | சமாரியா | அப்போஸ்தலர் 8:14-17 |
| பேதுரு ஐநேவை குணமாக்குதல் | லித்தா | அப்போஸ்தலர் 9:33, 34 |
| பேதுரு தபீத்தாளை உயிரடைய செய்தல் | யோப்பா | அப்போஸ்தலர் 9:36-41 |
| பேதுரு தேவதூதனால் சிறையிலிருந்து விடுவிக்கப்படல். | எருசலேம் | அப்போஸ்தலர் 12:7-17 |
| தேவ தூதன் ஏரோதை அடித்ததினால் புழு புழுத்து சாதல் . | எருசலேம் | அப்போஸ்தலர் 12:21-23 |
| எலிமா என்னும் மாயவித்தைக் காரன் குருடனாதல் | பாப்போ | அப்போஸ்தலர் 13:6-11 |
| பவுல் மனமாற்றம் அடைதல் | தமஸ்கு சாலை | அப்போஸ்தலர் 9:1-9 |
| பவுல் சப்பானியை குணமாக்குதல் | லீஸ்திரா | அப்போஸ்தலர் 14:8-10 |

| | | |
|---|---|---|
| பவுல் குறிசொல்லும் ஆவியை துரத்துதல் | பிலிப்பி | அப்போஸ்தலர்s 16-16-18 |
| பவுலும் சீலாவும் சிறையிலிருந்து விடுவிக்கபடல் | பிலிப்பி | அப்போஸ்தலர் 16:25, 26 |
| பவுல் பரிசுத்த ஆவியானவருடன் தொடர்புகொள்ளல் | கொரிந்து | அப்போஸ்தலர் 19:1-6 |
| பவுல் திரளானமக்களை குணமாக்குதல் | கொரிந்து | அப்போஸ்தலர் 19:11, 12 |
| பவுல் ஐத்திகுவை உயிரோடு எழுப்புதல் | துரோவா | அப்போஸ்தலர் 20:9-12 |
| பவுல் விரியன் பாம்பை உதறிப்போடுதல் | மெலித்தா | அப்போஸ்தலர் 28:3-6 |
| பவுல் மெலித்தாவில் குணமாக்குதல் | மெலித்தா | அப்போஸ்தலர் 28:7-9 |

**அற்புதங்கள் -- குணமாக்குதல் மற்றும் அற்புதங்கள்:**

1. இயேசுக் கிறிஸ்துவின் குணமாக்கும் ஊழியமானது, துன்பங்களிலிருந்து விடுதலை செய்தது மட்டுமல்ல, தன்னை மேசியாவாக யூதருக்குக் காண்பிக்கும் பொருட்டு செய்யப்பட்டது.

2. இயேசுக் கிறிஸ்துவின் ஊழியத்தில், பாவத்திலிருந்து குணமாக்குவதில் அதிகம் ஈடுபட்டார், பாவத்திலிருந்து குணமாக்குவது நித்திய விளைவைக் கொண்டுவருவதாய் இருந்தது, சரீர சுகம் தற்காலிக விளைவை அளிப்பதாய் இருந்தது.

3. இயேசுக் கிறிஸ்துவினால் குணமாக்கப்பட்ட உதாரணங்கள்:

அ] குஷ்டரோகம் (மத்தேயு 8:1 -4)

யூதர்கள் குணமாக்க இயலாத வியாதியாகிய குஷ்டரோகத்தினால் அவதிபட்டு வந்தனர். சரித்திரத்தில் இவ்வியாதியானது, குணமாக்க இயலாத ஒருவியாதியாய் விளங்கியது. குணமான குஷ்டரோகி, ஆசாரியனிடத்தில் சென்று தன்னைக் காண்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவர். இதைக் குறித்து லேவிய வகுப்பைச் சார்ந்த ஆசாரியருக்கு பழைய ஏற்பாட்டில் இரு அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அசுத்தம் (லேவியராகமம் 13), சுத்திகரிப்பு (லேவியராகமம் 14). உபயோகத்திற்கென அறியப்படாதவைகள். (லேவியராகமம் 14). மேசியா பூமியில் இருந்த காலத்தில், லேவிய ஆசாரியர்களுக்கு, குஷ்டரோகம் குணமாவது, ஒரு எச்சரிப்பாய் இருந்திருக்க வேண்டும்.

ஆ] நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன். (மத்தேயு 8:5-13).

நூற்றுக்கதிபதியானவன் ஒரு புறஜாதிய விசுவாசியாய் இருந்து மிகுந்த விசுவாசமுள்ளவனாய் இருந்தான், அவன் ஒரு முதிர்ந்த விசுவாசியாய் காட்டப்படுகிறான். அவனது வேலைக்காரன் திமிர்வாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தான்.(paralysis or polio). நூற்றுக்கதிபதி பெரிதான விசுவாசத்தைக் காண்பிக்கிறவனாய் இருந்து, இயேசுவானவர் தனது வீட்டிற்குள் பிரவேசித்து தனது வேலக்காரனை குணமாக்க தான் தகுதியற்றவன் எனக் கூறினான். இதன் காரணமாய், தன்னை சூழ இருந்த யூதர்களும் தன்னை நம்பும் விஷயத்தில், அவ்வாறு இருக்க இயேசு எதிர்பார்த்தார்.

இ] திமிர்வாதக்காரன் குணமாக்கப்படல் (மத்தேயு 9:1-8).

.யூத விசுவாசிகள் பாவ மன்னிப்பின் நிச்சயத்தைக் குறித்து சரிவர அறியாது குறைவுபட்டு இருந்தனர். அவனது நண்பர்கள், அவனைத் தூக்கிகொண்டு வந்தவர்கள், இயேசு கிறிஸ்துவிடம் கொண்டுவந்தவர்களுக்கு பெரிய அளவில் கர்த்தரில் விசுவாசம் வைத்தார்கள். இயேசு திமிர்வாதக்காரனுக்கு சுகமளித்து, அவனது பாவங்கள் மன்னிக்கப்பட்டதன் நம்பிக்கையை அவனுக்களித்தார்.

ஈ] பேதுருவின் மாமி: (மத்தேயு 8:14-17).

இயேசு இவளை குணமாக்கினார், இதினிமித்தம் அவள் கர்த்தருக்கு சேவை செய்ய நேர்ந்தது, அவருக்கு உதவி செய்து அவரை தாங்கும்படி நேர்ந்தது.

4. தேவன் குணமாக்குவதற்கு அநேக உதாரணங்களையும் மற்றும் வழிமுறைகளையும் பயன்படுத்தினார்.

அ] நேரடித்தொடர்பு மூலம் (மத்தேயு 8:3,15; மாற்கு 6:5)-
ஆ] நண்பர்களின் விசுவாசத்தினால் (மாற்கு 2:5).
இ] ஜெபத்தின் வாயிலாக. (யாக்கோபு 5:15,16).
ஈ] வைத்தியர்கள் மூலம் (கொலோசெயர் 4:14) மற்றும் மருந்துகள் மூலம் -- இராஜபிளவைக்கு அத்திப்பழம் (2 இரா. 20:7), குடற்புண்ணிற்கு திராட்சை இரசம். (1 தீமோத்தேயு 5:23).

5. தேவன் பெரிய பரிசுத்தவான்கள் அநேகரை குணமாக்கவில்லை.

அ] எலிசா (2 இராஜாக்கள் 13:14)

ஆ] பவுல் (2 கொரிந்தியர் 12:7-10)
இ] எப்பாபிராதீத்து (பிலிப்பியர் 2-26,27)
ஈ] தீமோத்தேயு (1 தீமோத்தேயு 5:23).
உ] வியாதிப்பட்டுள்ள பரிசுத்தருக்கான அடிப்படைக்கருத்து (2 கொரிந்தியர் 12:9).

6. வியாதியானது பலவித காரணங்களுக்காய் அனுமதிக்கப்படுகிறது.

அ] தேவனது வார்த்தைக்கு நம்மை திரும்ப கொண்டுவருவதற்காய். (சங்கீதம் 119:6 7).
ஆ] தேவனது வார்த்தையானது பிரபலமாக (யோவான் 9:1-3).
இ] இயேசுக்கிறிஸ்து மகிமைப்பட. (யோவான் 11:4).
ஈ] மற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கும்படியாக (2 கொரி. 1:4).
உ] எதிர்கால மகிமைக்கு நம்மை ஆயத்தமாக்கும்படியாக.. (2 கொரி. 4:17).
ஊ] ஐக்கியத்திற்கு திரும்பும்படிக்கு (எபிரெயர் 12:5-10).
எ] நம்மை அதிகமான கனிகொடுக்கும்படி செய்ய. (யோவான் 15:2; எபிரெயர் 12:1)

7. அற்புதமாய் குணமாதல், காலா காலங்களில் நிகழ்ந்து வருகிறதாய் இருக்கிறது. தேவன் எந்த ஒரு மனிதரையும், எந்த நேரத்திலும் குணமாக்க இயலும். ஆனால் வேதாகமமானது, அவர் அவ்வாறு செய்வது சாதாரணமான நோக்கத்திற்கு அல்ல எனக்கூறுகிறது. சாத்தானும் போலியான தெய்வீகத்தால், தனது போலியான குணமாக்குகிறவர்கள் மூலம் குணமாக்க இயலும்.

**8. கடைசி நாட்கள் -- இந்த நவீனகாலத்திற்குரிய எதிர்பார்ப்புகள்:**

**POWER: வல்லமை:**

**1.** வல்லமை என்பதற்கான ஐந்து கிரேக்க வார்த்தைகள்:
a) Dunamis - டூனாமிஸ் இதிலிருந்தே டைனமைட்டின் சக்தியைப் பெறுகிறோம். -- உள்ளான வல்லமை from which we get dynamite - inherent power.
b) Energes - எனர்ஜஸ் இதிலிருந்து நாம் சக்தியைப் பெறுகிறோம். -- செயலாற்றும் வல்லமை from which we get energy - operational power.
c) Kratos -கிராட்டோஸ் நமது வார்த்தையானது தன்னிச்சையாக ஆளப்படுகிற ஒரு பகுதி. ஆழுகை செய்யும் வல்லமை. part of our word autocratic - ruling power.
d) Iscuous - இஸ்கௌஸ் இயல்பான வல்லமை endowed power.

e) Exhusios -எக்ஸ் ஹுஸியோஸ் அதிகாரம் செலுத்தும் வல்லமை அல்லது அதிகாரம். authoritative power or authority.

2. தேவனது வல்லமையானது எல்லா விசுவாசிகளுக்கும் கிடைக்கிறதாய் இருக்கிறது.
அ] பிதாவாகிய தேவனது வல்லமை. (1பேதுரு 1:5).
ஆ] தேவக் குமாரனின் வல்லமை. (2 கொரி. 12:9, 10).
இ] பரிசுத்த ஆவியானவரின் வல்லமை (அப்போஸ்தலர் 1:8).
ஈ] தேவ வார்த்தையின் வல்லமை. (எபிரெயர் 4:12).
உ] தேவ இராஜ்ஜியத்தின் வல்லமை. (1 கொரி. 4:20)

**கடைசி நாட்கள் -- கடைசி நாட்களின் குணாதிசயங்கள்:**

உலகின் நிலையானது, தற்போது, ஜலப்பிரளயத்திற்கு முன்னிருந்தது போல இருப்பதால், நியாத்தீர்ப்பானது அவசியமாய் இருந்து வருகிறது, இப்போதுள்ள உலகின் நிலையானது நாம் கடைசி நாட்களின் இறுதிக்கட்டத்தில் இருக்கிறோம் என்பதைக் காண்பிக்கிறதாய் இருக்கிறது.

1. மாம்சீக வெறித்தனச் செய்கைகள். -- லூக்கா 17:27.

2. வேகமாய் வளர்ந்து வரும் தொழில் நுட்ப வளர்ச்சி. ஆதியாகமம் 4:22

3. உலகப்பிரகாரமான பொருட்களைக்குறித்த மனநிலையும் அவைகளை அடைய காட்டும் ஆர்வமும் - லூக்கா 17:28.

4. ஒருமித்த மனநிலையும் மற்றும் ஆர்வங்களும். எபிரெயர் 11:7.

5. மிதமிஞ்சிய இன்பம் நுகர்தல் மற்றும் சௌகரிய சொகுசு வாழ்க்கை.- ஆதியாகமம் 4:21.

6. தேவனைக் குறித்த அக்கறையற்ற வாழ்க்கை, விசுவாத்திலும் அல்லது நடத்தையிலும் தேவனற்ற செயல்பாடுகள். - 2 பேதுரு 2:5, யூதா 15.

7. திருமண உறவை பரிசுத்த குலச்சலாக்குதல் - மத்தேயு 24:38.

8. தேவ ஆவியினால் அருளப்பட்ட தேவனது வார்த்தையைப் புறக்கணித்தல். - 1 பேதுரு 3:19.

9. ஜனத்தொகைப் பெருக்கம். - ஆதியாகமம் 6:1, 11.

10. வெகுவாய் பரவி வரும் வன்முறைச் செயல்பாடுகள். ஆதியாகமம் 6:11, 13.

11. சமுதாயத்தின் ஒழுக்கச் சீர்கேடுகள். ஆதியாகமம் 6:12.

12. முறைகேடான பாலுறவு செயல்பாடுகள். - ஆதியாகமம் 4:19; 6:2.

13. விசுவாசதுரோகத்திற்கான வார்த்தைகளும் மற்றும் தூஷண சிந்தனைகளும் பரவிவருதல். - யூதா 15.

14. ஒழுங்குபடுத்தப்பட்ட சாத்தானின் செயல்பாடுகள். - ஆதியாகமம் 6:1-4.

15. கட்டுக்கடங்கா ஒழுக்க சீர்கேடுகளும், அவற்றை மேம்படுத்துவதற்கான இயக்கங்களும். - ஆதியாகமம் 6:5, 12

**கடைசி நாட்கள் -- இறுதிகால சபையும் மற்றும் மறுதளிப்பின் குணாதிசயங்களும்:**

1. தேவனை மறுதளித்தல். (லூக்கா 17:26; 2 தீமோத்தேயு. 3:4-5).

2. கிறிஸ்துவை மறுதளித்தல் (1 யோவான் 2:18, 4:3; 2 பேதுரு. 2:1).

3. கிறிஸ்துவின் மறு வருகையை மறுதளித்தல். (2 பேதுரு 3:3-4).

4. விசுவாசத்தினை மறுதளித்தல் (1 தீமோத்தேயு. 4:1-2; யூதா 3).

5. தெளிவான சுத்த உபதேசத்தை மறுதளித்தல். (2 தீமோத்தேயு. 4:3-4).

6. வேறுபிரிக்கப்பட்ட வாழ்வை மறுதளித்தல் (நடைமுறை பரிசுத்தமாக்கப்படல்.. 2 தீமோத்தேயு 3:1-7).

7. கிறிஸ்தவ சுயாதீனத்தை மறுதளித்தல் (1 தீமோத்தேயு 4:3-4).

8. ஆவிக்குரியவற்றை மறுதளித்தல். (2 தீமோத்தேயு 3:1-8; யூதா 18).

9. அதிகாரத்தை மறுதளித்தல். (2 தீமோத்தேயு 3:4)

## <u>மதம்</u>

1. சாத்தானின் மதம் என்பது மனுக்குலத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாய் இருக்கிறது. இம்மதத்தில் பாவமில்லை, நியாயத்தீர்ப்பில்லை, இரட்சகர் இல்லை மற்றும் நரகம் என்பது இல்லை. சாத்தான் ஒளியின் தூதனாய் தோன்றுகிறவனாய் இருக்கிறான். (2 கொரிந்தியர்11:13-19,26).

2. சபையில் உள்ள அநேகப்போதகர்கள், அறிந்தோ அல்லது அறியாமலோ, சாத்தானின் இவ்விதக்கொள்கைகளை பின்பற்றும் சாத்தானின் ஊழியக்காரராய் இருக்கிறார்கள். (ஏசாயா30:12, எரேமியா2:8, 2 பேதுரு 2:1-10).

3. சாத்தான் திட்டம், அவிசுவாசிகளை சுவிஷேசத்தை அறிய விடாதபடி, குருடராய் இருக்கச்செய்கிறான்.
(2 கொரிந்தியர் 4:3-4, கொலோசெயர்2:8, 2 தெசலோனிக்கேயர்2:9-10).

4. விசுவாசிகளை குறித்த சாத்தானின் திட்டம்:-
   a) தவறான் உபதேசங்களால் குழம்பச்செய்வது. (மத்தேயு 7:15, ரோமர் 16:18).
   b) பெருமையினால் கவரப்படுதல். (2 கொரிந்தியர் 10:12).
   c) விக்கிரக ஆராதணைக்கு ஊக்கமளித்தல். (ஆபகூக் 2:18, 19).
   d) நற்கிரியைகள் மூலம் இரட்சிப்படைவதற்கு ஊக்கமளித்தல். (1 தீமோ.1:7-8).

5. சாத்தானின் திட்டம், தவறான விசுவாசத்திற்கு அழைத்தல்:
   a) தவறான சுவிஷேசம். (2 கொரிந்தியர் 11:3-4).
   b) தவறான போதகர்கள். (2 கொரிந்தியர் 11:13-15).
   c) தவறான ஐக்கியம். (1கொரிந்தியர் 10:19-21).
   d) தவறான உபதேசம். (2 தீமோத்தேயு4:1).
   e) தவறான நீதி. (மத்தேயு19:16-28).
   f) தவறான வாழ்க்கை முறை. ( மத்தேயு 23)
   g) தவறான வல்லமை. (2 தெசலோனிக்கேயர் 2:8-10).
   h) தவறான தெய்வங்கள். (2 தெசலோனிக்கேயர் 2:3-4).

எல்லா காரிய'ங்களிலும் நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய அழைக்கப்பட்டுள்ளோம், அதன் பொருள் நமது குறுகிய வாழ்நாள் காலத்தில் கர்த்தருடைய வழிகளை தேடி அதில் நடக்க வேண்டும் என்பதாகும். கர்த்தர் தமது வாஞ்சையின்படியும் மற்றும் அற்புதம் செய்வதற்காக தமது திட்டத்தின் படி உங்களையும் என்னையும் இன்றைய தினம் அழைப்பார் என்றால், ~அதைத் தழுவிக்கொண்டு, நமது கண்ணோட்டத்தை கர்த்தர் மீது வைத்து, அவரது மகிமை, மாட்சிமையைத் தொழுது கொள்வோமாக! அற்புதங்களால் நாம் வழிதவறிச் சென்றுவிடக்கூடாது, ஆனால் அவைகளுக்காக நாம் ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும், கர்த்தருக்கே மகிமை கொண்டுவருகிறர்களாய் இருத்தல் வேண்டும்.

நீங்கள் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் மீது கண்ணோக்கமாய் இருந்து, உங்கள் வாழ்வில் அவரது சித்தம் நிறைவேற்ற வேண்டும். அவரில் மாத்திரம் உங்கள் கண்களை பதித்தல் அவசியம், அவர் எவ்விதம் வாஞ்சையுள்ளவராய் இருக்கிறார் என்பதை அறிந்து, அவரது ஊழியத்தை செய்தல் வேண்டும். அற்புதம் கடந்து வரலாம், ஆனால் அவைகள் உங்களை ஸ்தம்பிக்க வைப்பதோ, திசைதிருப்பி, நிலைகுலைசெய்யவதோ கூடாது. நமது கண்கள் இயேசுவையே நோக்கிப்பார்த்தல் வேண்டும், அவரது கிரியைகளில் [அற்புதம்] அல்ல.

எல்லாவற்றிலேயும் அவரை ஸ்தோத்தரிப்போமாக, மிகப்பெரிய அற்புதம் என்னவென்றால் அது சிலுவையும், காலியாய் இருக்கும் கல்லறையுமே! மற்றும் பெந்தெகொஸ்தே நாளில் வெளிப்பட்ட தேவவல்லமையுமே! அப்படிப்பட்ட வல்லமை பாவம் தோய்ந்த மற்றும், அதனால் ஆண்டுகொள்ளப்பட்ட வாழ்க்கையை உருமாற்றமடைய செய்கிற வல்லமையுமே! ஆகும். நமது இரட்சிப்பிற்காக அவரை ஸ்தோத்தரிப்போமாக மற்றும் இழந்து போனோரின் இரட்சிப்பைத் தேடுவோமாக, நம்மை இரட்சித்த கர்த்தரின் மகிமையை சந்திப்போமாக.

டாக்டர் ஜான். சி. மெக் இவான் டீன் இபிசிடபுள்யுஎ.
Dr John C McEwan Dean EBCWA.